305

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

305
2-54

Vol. 1 No. 5 ஏப்ரல் - 1954 பங்குனி - சித்திரை

இந்த இதழில்

★ தன்மானம் இழக்கும் சன்மானம்

★ பெண்களாக மாறின ஆண்கள்

★ பூமி என்றைக்கு அழிவுறும்?

★ தென் ஆப்பிரிக்காவில் கறுப்பர் படும் பாடு

இன்னும்

பல அரசியல், சமூக, விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகள், கதைகள்.

C

JL
2211, N53TK
N54-1.5
198746

விலை 8 அணா

பொருளடக்கம்

★

ஞான தீப குரு அருள்	1
அறிந்தார் அறியாதார் கடமைகள்	4
மனோசக்தியால் எதையும் வெல்லலாம்	7
உண்மைத் தியாகி	10
யார் தகுதி?	12
அமெரிக்காவில் ஆசிரியர் நிலை	15
பூச்சி வர்க்கம் நன்மை புரிகிறது	16
தன்மானம் இழக்கும் சன்மானம்	17
எல்லாம் ஐந்து	22
நல்வாழ்க்கைக்கு நம் பண்பாடே ஆதாரம்	24
தேச சின்னங்களான புஷ்பங்கள்	28
துன்பத்தால் இன்பமடையும் விந்தை	29
ஒருவாரக் கவி	33
தொண்டரின் கட்டளைக்கு கட்டுப்பட்டார்	34
இவன் யார்?	36

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை-1.

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 1. No. 5.

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

ஏப்ரல் 1954

26 APR 1954

ஞான தீப குரு அருள்

"இருள் இருசிந்தையோர்க்கும் இன்னருள் சுரந்த வீரன்" தான் குரு எனப்படுபவர். இருள் இருசிந்தையோர்—அதாவது ஆணவம். மாயை, காமியமாகிய ஆகாமிய இருளால் மூடப்பட்ட மனித ஜன்மத்திற்குக் குருவானவர் ஒரு தீபமாகும்.

"பேணி நினைந்து எழுவார்தம் மனத்தே மன்னி இருந்த மணிவிளக்கு" என்பதுபோல் குருவானவர் ஒரு விளக்குப்போன்றவர்.

பிதா, குமாரன், ஆவியானவர் என கிருஸ்துவமதம் கூறுகிறது. பிதா பரமாத்மா ஆவியானவர் ஜீவாத்மா: குமாரன் அம் மதகுருவாகிய இயேசு. இவ்விதமே ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு குரு உண்டு. மதங்கள்தோறும் நின்ற குருவும் ஒருவரே. "பேதம் திகழும் சமயமும் அநந்தம், நற்தெய்வமும் அநந்தம்" அதனுல் ஞான சிற்சக்தியால் உணர்ந்து மெய்க் குருவை அறியவேண்டும். "தரியாத போதகத்தர், குருவாவரோ ரொருத்தர், தரு

198746

வார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ'' என்பதற்கிணங்க இதர சாதாரண குருவெல்லாம் குருவாகமாட்டார்கள். ஆகவே ஹிந்து மதத்தின் குருபரன் முருகக் கடவுளே. அவரே அஞ்ஞான இருளைப் போக்கும் தீபமாகிய சுப்ரஹ்மண்யம். சுப்ர என்றால் சுயம்பிரகாசம் என்பது பொருள். அதாவது எரியும் வஸ்துவும் காற்று முதலிய எரியப்படுத்தும் வஸ்துவும் இல்லாமலே தானே எரிகிற சுடர், சுயஞ்ஜோதி. ரவி, மதி, சுடராகிய முச்சுடருக்கும் ஒளி கொடுக்கக்கூடிய மூலச்சுடர். ஐம்பூதச் சுடரும் அதன் மூலச்சுடருமாக அறுசுடராகத் தோன்றியதெனவே கந்த புராணம் கூறுகிறது.

"குருவாய், வருவாய், அருள்வாய் குகனே" என்றும் "தீபமங்கள ஜோதி! நமோ நம" என்றும் துதிக்கிறார்கள். தவிர வடமொழியிலும்,

ஏகவர்ணாய நம
த்விவர்ணாய நம
த்ரிவர்ணாய நம
சதுர்வர்ணாய நம
பஞ்சவர்ணாய நம

என ஐம்பூதச் சுடரையும்

அக்னி ஜன்மனே நம
அக்னி கர்ப்பாய நம

என மூலச்சுடரையும் குறிபபிட்டுத் துதிக்கின்றனர்.

"யாம் ஓதிய கல்வியும எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததனால் பூமேனமையல் போய் அறமெய்ப் புணவீர். நாமே, நடவீர் நடவீர் இனியே" என குருவருளை வியந்துகூறும் அருணகிரிநாத ஸ்வாமிகள், ஜோதிரர்மலிங்கஸ்வாமிகள் முதலிய ஹிந்துமத சமரஸ. ஞானிகட்

கும், அகஸ்தியர் முதலிய முனிபுங்கவர்கட்கும், பரமனுக்கும் குருவாகியவர் ஞானதீபமாகிய முருகனே !

இச்சா சக்தி, கிரியா சக்தி எனும் வள்ளி தெய்வயானை சமேதராய் ஞானசக்தி யென்னும் வேல் ஏந்தி அதிதானந்தம் எனும் மயில்மிசை வீற்றிருக்கும் குமரகுருபரனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாம்.

அஹிம்சாவாதியை நம்பலாம்

தாதாபாய் நௌரோஜியின் பேத்தியாகிய கோர்ஷெட் நௌரோஜி என்பவர், காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு, பீஹார் மாகாணத்தில் ஒருதரம், கைது செய்யப்பட்டார். பீஹாரிலிருந்து அவரை, பூனா சிறைக்கு ரயிலில், எட்டுப் போலீஸ்காரர்கள், அழைத்துச் சென்றனர். மத்தியில் ஒரு ஸ்டேஷனில், போலீஸ்காரர்கள் டீ, அருந்தும், நேரம் வந்தது. போலீஸ்காரர்கள் யாவரும், அவர்களிடமுள்ள துப்பாக்கிகளை எல்லாம் அம்மையாரிடம் ஒப்படைத்துவிட்டு டீ அருந்துவதற்கு வெளியே கிளம்பினார்கள். "உங்கள் துப்பாக்கிகளையும் என்னிடம் ஒப்படைத்ததோடு, என்னைத் தனியேவிட்டுச் செல்ல, உங்களுக்குத் துணிவு எப்படி வந்தது" என்று அம்மையார் வினவினார். "நீங்கள் தான் அஹிம்ஸாவாதியாயிற்றே இதில் என்ன தப்பிதம் இருக்கிறது" என போலீஸ்காரர்கள் பதில் கூறினார்கள்.

அறிந்தார் – அறியாதார் கடமைகள்

●

யாதும் தெரியாதவர்கள் எல்லாம் தெரிந்ததாகப் பாவனை செய்கிறார்கள். எல்லாம் தெரிந்தவர்களோ மென்மேலும் தெரிந்துகொள்ள ஆர்வமுடையவர்களா யிருக்கிறார்கள். இது உலகில் சகஜம்.

உதாரணமாக எந்த விஷயமும் தனக்குத் தெரியாது என்று ஒப்புக்கொள்வது தனக்கு கௌரவக் குறைவு என நினைத்தேதான் சகலமும் தெரிந்ததாகப் பாவனை செய்கிறார்கள். இவர்கள் தங்களுக்குத் தெரியாத பாஷையைத் தெரியுமென்றும் காணாத ஊர்களைக் கண்டதாகவும், படியாத புத்தகங்களைப் படித்ததாகவும், அறியாத விஷயங்களை அறிந்ததாகவும் கூறிக்கொள்வார்கள்.

அந்த பாஷையில் பேசும்பொழுது, விஷயம் ஒன்றுமே இவர்களுக்குப் புரியாது. இவர்கள் கண்டதாக சொல்லும் ஊரின முக்கியமான இடத்தைக் கேட்டால் முழிப்பார்கள்.

அவர்கள் படித்தறிந்ததாகக் கூறும் புத்தகங்களின் பிரதான் அங்கங்களையோ, கருத்துக்களையோ கேட்டால் மௌனம்தான் சாதிப்பார்கள்.

அவர்கள் அறிந்திருப்பதாகக் கூறும் விஷயங்களைப் பற்றிக் கேட்டால் அதன் விவரங்களையும் அறிவிக்க முடியாது.

மேற்கூறிய எந்த விஷயத்தைப் பற்றியும் 'உங்களுக்குத் தெரியுமா' எனக் கேட்கும்பொழுது, இல்லை. எனக்குத்

தெரியாது' என உண்மையைச் சொல்லி, ஒப்புக்கொள்கிற வர்களுக்கு எவ்வளவோ கௌரவம் உண்டு. ஆனல் அறிந்தவர்கள் கூட்டத்தில் ஆரவாரமாக 'எல்லாம் எனக்குத் தெரியும்' என்று கூறி தங்கள் அறியாத்தனத்தைக் காண்பிப்பவர்களுக்கு என்ன கௌரவம் ஏற்படும்?

எல்லா விஷயங்களையும் அறிந்து, அறிவாளியெனப் பெயர் வாங்கிய ஒருவர், மற்ருெரு அறிவாளிக்குத் தெரிந்திருக்கும் அதிநுட்பமான விஷயம் தனக்குத் தெரியாமலிருந்திருப்பதை உணரும்பொழுது, அவர் மிகவும் மன வேதனை யடைகிருர்.

மனிதனுக்கு அறிவு வளர வளர பற்பல விஷயங்களை மேலும் அறிந்துகொண்டு போகும்போது, எல்லா விஷயங்களையும் பூரணமாக அறிந்துகொள்வது சாத்தியமில்லை யென்பது நன்கு விளங்கும்.

அறியாததைப் பற்றி தான் வெட்கப்பட வேண்டியதில்லை. இன்ன காரணத்தினல், தான் அறியாதவனுயிருக்கிருன் என்ற அந்தக் காரணத்தைப் பலதடவையும், பலரிடத்திலும் விளக்கிக் கூறிக்கொண்டே போவதுதான் மனிதன் வெட்கமடையவேண்டிய விஷயம்.

எல்லா விஷயங்களையும் அறிந்த பேரறிஞராகிய ஒரு மேதையிடம் பொது அறிவில் ஆர்வங்கொண்ட ஒருவர் கலந்துபேச சந்தர்ப்பம் ஏற்படும் பொழுது, தனக்கு எந்தெந்த விஷயங்கள் தெரியாதோ அவ்விஷயங்களை யெல்லாம் சந்தேகமற அந்த மேதையிடம் கேட்டு அறிந்து கொள்வது தான் அறிவாளியின் சிறந்த குணமாகும்.

உலக விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டிய மிக்க ஆர்வமுள்ள ஒரு அறிஞனை எந்த மேதையும் அன்புடன் வரவேற்று, அதிநுட்பமாக அறிவிப்பார்.

அறிஞர்கள் கூடிப் பேசிக்கொண்டிருக்குமிடத்தில் சாதாரணமான ஒருவர் சென்ருல், தான் ஒன்றும் பேசாது

அவர்கள் பேசுவதை சிரத்தையோடு கவனிப்பதுதான் கடமையாக இருத்தல் வேண்டும்.

அவ்விதம் அவர் கவனித்து வருகையில் தனக்கு விளங்காத விஷயங்களிருந்தால், அவர்கள் பேசும்போது குறுக்கிடாமல் பேசிமுடித்து அக்கூட்டம் கலையும்பொழுது அவர்களில் ஒருவரிடம் சென்று தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

பத்திரிகைகளிலோ, புத்தகங்களிலோ, விவரத்தோடு மிகத் தெளிவாக வெளியிட்டிருக்கும் விஷயங்களை பேரறிஞர்களிடம் கேட்பது சரியல்ல, ஒருவேளை பத்திரிகையில் தெளிவுபடுத்திய விஷயத்தை பேரறிஞர்களிடம் கேட்போமானல் விஷயங்களைக் கிரகித்துக்கொள்ளும் ஆவல்கூட இல்லையே, என்றுதான் அந்த அறிஞர்கள் நினைக்கக்கூடும் பலர் கூடியிருக்குமிடத்தில் பிறர், தான் சொல்வதில் கவனஞ்செலுத்துகின்ருர்களாவென்பதை அறிந்து கொள்ளாமலும் தன்னைப் பேசும்படி சொல்லாமலும் இருக்கும் பொழுது ஏதோ தனக்குத் தெரிந்த சம்பந்தமில்லாத விஷயங்களைக் 'கிர்ாமபோன் ரிகார்டுகள்' போன்று ஒருவரையும் பொருட்படுத்தாமல் மடமட வென்று தான் தோன்றித்தனமாகப் பேசிக்கொண்டே போகும் விசித்திர மனிதர்களே மனித சமூகத்திற்கு சாபக்கேடானவர்கள்.

மனிதனேடு மனிதன் நெருங்கி உறவாடுவது அறிவுத் திறமையோடுகூடிய ஒரு கலையாகும். மனிதனேடு மனிதன் நெருங்கி உறவாடுவதன் மூலம் மனித சமூகம் நலம்பெற வேண்டுமானல் மனிதர்களுக்கு மிகுந்த பகுத்தறிவு, சிறந்த ஞானம், அளவற்ற மரியாதை, நேர்மை, ஆகிய நற்குணங்களெல்லாம் தேவை. இந்தக் குணங்களையெல்லாம் நாடுவதும், நாடி அடைவதும்தான் அறிவுடையோருக்கும் அறிவு வளர்ச்சியில் ஆர்வமுடையோருக்கும் இருக்கவேண்டிய முக்கிய கடமையாகும்.

———

கஷ்ட நஷ்டங்களாகிய ஜீவித எதிர்ப்புகளை ஜெயித்து முன்னேறும் வழி.

மனேசக்தியால் எதையும் வெல்லலாம்

●

சமீபத்தில் அமெரிக்காவில் ஒரு நகரில் ஒருநாள் இடி மின்னல், கோரமான புயற்காற்றுடன் கோர்டை மழை வருஷித்தது.

அந்நகரில் அநேக சர்தாரண வீடுகள் பாழுடைந்தன். அச்சமயத்தில் ஒரு வீட்டில் இரண்டு குழந்தைகளுடன் பக்கவாதத்தினுல் நடக்கமுடியாமல் தனிமையில் படுத்த படுக்கையிலே கிடந்த ஒரு ஸ்திரீ தனக்கு அழிவுநேரிட்ட போதிலும், தன் குழந்தைகள் உயிருக்குச் சேதம் ஏற்படக் கூடாதென்ற கவலையினுல், அவள் மனம் பதைத்தது. அதுவரை நடக்கமுடியாமல் படுத்திருந்த ஸ்திரீ குழந்தைகளை எவவாறேனும் பாதுகாக்கவேண்டுமென்ற புத்திர வாஞ்சையால் திடீரென எழுந்து, தன் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு, பக்கத்திலிருந்த உறுதியான ஒருபெரிய வீட்டிற்கு நடந்து சென்று, தன் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றினுர். அதிலிருந்து அவள் பக்கவாதம் நீங்கியதோடு, பிறகு திடமாக நடமாடிக்கொண்டிருக்கிருள்.

புத்திரவாஞ்சையானது நடக்கமுடியாமலிருந்த அந்த ஸ்திரீயை நடக்கவைத்ததோடு, நெடுநாளாக அவளைப் பீடித்திருந்த பக்கவாத நோயும் நீங்கிவிட்டது.

உலகத்தில் பல துறைகளில் கீர்த்தியும், வெற்றியு மடைந்த அநேக வீரர்களின் ஜீவிய சரித்திரத்தை ஆராய் வோமானால், அவர்கள் எல்லோரிடமும் ஒரு பொது அம் சத்தைக் காணமுடியும்.

அந்தப் பொது அம்சம்தான் ஒவ்வொருவர் மனத்தி லும் குடிகொண்ட திடசங்கல்பமாகும். அவரவர்கள் ஈடு பட்டிருந்த துறைகளில் ஒரே லட்சியத்தைக் குறிக்கோளா கக்கொண்டு, அதை அடைந்தே தீரவேண்டுமென்ற வைராக்கியச் சித்தம் தான் அது.

அவர்கள் ஜீவியகாலத்தின் முயற்சிகளெல்லாம் அந்த லட்சியத்தை நோக்கியேதான் சென்றுகொண்டிருக் கும். லட்சியத்தை அடைந்தே தீருவோம் என்ற திடநம் பிக்கையும் அவர்கள் மனத்தில் குடிகொண்டிருக்கும்.

அவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் கஷ்ட நஷ்டங் களும், குற்றங் குறைகளும் அவர்கள் லட்சியத்தை பாதிக் காமலிருககும் அளவுக்கு அவர்கள் சித்தம் திடமா யிருக்கும்.

மேற்கூறிய கஷட நஷ்டங்களும், குற்றங்குறைகளும் "எல்லாம் நமது நன்மைக்காகவே" என அவற்றை நன் மையாகக் கருதுவார்களே தவிர, அதனால் சிறிதேனும் மனக் குழப்பமடையமாட்டார்கள்.

நலனை நாடுவதும், லட்சியத்தைக் குறிப்பதும் தான் லட்சியவாதிகளின் உயர்ந்த அம்சமாகும்.

சர்வ மதங்களும், 'கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் மிகவும் நல்லவர், நம்பிக்கையோடும், நேர்மையோடும் நடந் தால் நல்வாழ்க்கை பெறலாம்' என்று கூறுகின்றன.

நலனையும், லட்சியத்தையும் தீவிரமாக நாடுபவர் களின் வாழ்க்கையில் மிகுந்த அதிசயங்கள் நிகழக்கூடும்.

எந்தக் காரியத்தையும் செய்யமுடியுமா முடியாதா என்ற சந்தேகமே எழக்கூடாது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் லட்சியத்தை சாதிப்பதற்கு சக்தியும், வசதியும் ஏற்பட்டேதீரும் என்ற நம்பிக்கை இருக்கவேண்டும். இதற்கு மேல் நம்மால் செய்யமுடியாது என்று மலைவு தோன்றுமேயானல், அது மனேசக்தியை பாதிக்கும், அதற்கு மேல் காரியத்தைச் சாதிக்கவும் முடியாது.

இவற்றிற்கெல்லாம் மேலே குறிப்பிட்ட அந்த ஸ்திரீயே உதாரணம். பல ஆண்டுகளாக பக்க வாதத்தினல் நடக்க முடியாமல் படுத்த படுக்கையிலே கிடந்த அந்த ஸ்திரீக்கு குழந்தைகளைக் காப்பாற்றியே தீர வேண்டுமென்ற பேரவாவினல் ஒரு சக்தி மனத்தில் குடிகொண்டு அந்த சக்தி அவளை எழுந்து நடக்கச் செய்ததோடு நிரந்தரமாய் அவள் சுகவீனத்தையும் போக்கிவிட்டது.

இத்தகைய மனேசக்தியால் எல்லா நோயாளிகளும் குணமடையலாம். நோய் சரீரத்தை பீடிப்பதல்லாமல் மனத்தையும் பீடிக்கிறது.

எல்லா மனிதர்களுக்கும் அவர்கள் குறிப்பிடும் எந்த லட்சியத்தையும் அடைவதற்கு சக்தியுண்டு என்ற மனேதிடம் வேண்டும். இத்தகைய மனேதிடமிருந்தால் எத்தகைய லட்சியத்தையும் அவர்கள் அடையமுடியும்.

திடநம்பிக்கையின் காரணமாக நிகழப்போகும் எதிர்கால அதிசயங்களை மனிதர்கள் அறிந்து கொள்ள வேண்டியது.

கஷ்ட நஷ்டங்களோடுகூடிய துன்பமான ஜீவித எதிர்ப்பையுங்கூட ஜெயித்து அதிதீவிரமாக லட்சியத்தை நோக்கி முன்னேறும் மனேசக்தியால் மனிதன் சாதிக்க முடியாத கரரியமே இல்லை.

திடசித்தமுடையவனே லட்சியவாதி. லட்சியவாதியே உலகை உண்மையில் ஆளும் மன்னன்.

———

உண்மைத் தியாகி

●

உண்ண உணவில்லாதவன் உபவர்சம் இருப்பதும் இருக்க இடமில்லாதவன் சந்யாசம் கொள்வதும் பெண் கிடைக்காதவன் பிரம்மச்சாரியாயிருப்பதும் ஒருக்காலும் தியாகமெனப்படமாட்டாது.

சகல இகபோக சுக சாதனங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்றும், பொதுஜன சேவைக்காக அவற்றைச் துச்சமென வெறுத்து வேண்டுமென்றே கஷ்டப்பட்டு பொதுஜன வாழ்க்கையைப் போன்றே தாமும் அந்தப் பொது ஜனங்களில் ஒருவராக வாழ்க்கை நடத்தும் உத்தமர்களே உண்மைத் தியாகிகளாவார்கள்.

உதாரணமாக சகல சௌகரியங்களையும் அடையத் தக்க வசதியுள்ள குடும்பத்தில் பிறந்து, மேல் நாடு சென்று கல்வி பயன்று, ராஜபோகமாக உண்டு, உடுத்தி, இன்பம் அனுபவிக்கத்தகுந்த நிலையையுடைய மகான் மஹாத்மா காந்தி அடிகள் தேசப் பொதுமக்களிடம் கொண்ட அன்பினுல் பொதுமக்களைப் போலவே, தரித்திரநாராயணனின் சின்னமாக முரட்டுக்கதராடையை முழங் கால்வரைக்குமே தரித்திருந்தார்.

அதுபோலவே மகாப்பிரபு மோதிலால் நேருவிற்குத் திருக்குமாரராய் அவதரித்த பண்டித ஜவஹர்லால் நேருவும் மக்களின், நலனைநாடிய அவரது தியாக சிந்தனையால் தன் ஐம்பது வயதுக்குள் ஏகாதிபத்திய அடக்குமுறைக்குட்பட்டு, அடிதடி முதலிய கொடுமைகளை அனுபவித்ததோடு, பதினெட்டு முறை சிறைவாசமும் செய்திருக்

கிறார். அவ்வாறே 'ஜெய் ஹிந்த்' முழக்கத்தின் கர்த்தாவான நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸும் சொல்லொணாத் துயரமடைந்திருக்கிறார்.

இவ்வாறே தேசத் தலைவர்களெல்லாம் பரஸ்பர நம்பிக்கை, நேர்மை, வாய்மை, தூய்மை, தாராளத்துவம், பொறுமை, தியாக சிந்தனை ஆகிய சிறந்த குணங்களைக் கொண்டிருந்ததனால்தான் உலகம் போற்றும் உத்தமர்களாய்த் திகழ்கின்றார்கள்.

மேற்கூறியுள்ள குணங்களை உடையவர்கள் தான் உண்மைத் தியாகிகள் ஆவார்கள்.

சிந்தனைக்கே அதிக முக்கியத்வம் அளித்த பகவான் புத்தரையோ, துக்காராமையோ நேருக்குநேர்க நான் சந்தித்திருக்க முடியுமானால், கீதாச்சாரியனான ஸ்ரீ கிருஷ்ணன் போதித்துள்ளதே போல், உழைப்புக்குத்தான் அதிக முக்கியத்துவம் அளித்திருக்கவேண்டும் என்று கூறியிருப்பேன்.

ஒரு ராஜபுதனத்து கிராமியக்கதை

யார் தகுதி ?

●

ராஜபுதனத்தில் பெருந் தனவந்தரான சேட் ஒருவரிருந்தார். அவருக்கு தனபாலன், தனதேவன், தனரக்ஷகன், தனகோபன் என நான்கு புதல்வர்களிருந்தார்கள்.

தனபாலனுக்கு உஜீக் என்ற பெண்ணையும், தனதேவனுக்கு போகவதி என்ற பெண்ணையும், தனரக்ஷகனுக்கு ரக்ஷிகாவதியையும், தனகோபனுக்கு ரோகிணி என்ற பெண்ணையும் முறையே மணஞ் செய்வித்தார் தனவான்.

பிறகு தனவானாகிய சேட் க்ஷேத்திராடனம் செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டார்.

யாத்திரை கிளம்புவதற்கு முன்பு, தன் சொத்துக்களை ஒப்படைத்துப் போவதற்குத் தகுதியுடைய மருமகள் யார் என ஆலோசித்தார். இதைச் சோதிக்கவேண்டி ஒவ்வொரு மருமகளிடத்திலும் ஐந்து மணி நெல்லைக் கொடுத்து, அவற்றைப் பத்திரமாக வைத்திருந்து ஐந்து வருட காலத்திற்குப் பிறகு தன்னிடம் கொடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

மூத்த மருமகளாகிய உஜீக் 'இதை ஏன் சிரமப்பட்டுப் பத்திரப்படுத்த வேண்டும். களஞ்சியத்திலிருக்கும் ஏராளமான நெல்லிலிருந்து கொடுத்துவிட்டால் போகிறது' என்று எண்ணி மாமனர் கொடுத்த நெல்லை தூர எறிந்துவிட்டாள்.

இரண்டாவது மருமகளாகிய போகவதி அந்த நெல்லிலிருந்த அரிசியை எடுத்துத்தின்றுவிட்டு, உஜீக்போலவே நெற்களஞ்சியத்திலிலிருந்து எடுத்து மாமனர் கேட்கும்போது கொடுத்துவிட்டால் போகிறதென்ற தைரியத்துடனிருந்தாள்.

மூன்ருவது மருமகளான ரக்ஷிகாவதியோ மாமனர் மீது பக்திவைத்து, மாமனர் கேட்கும்போது திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்று நெல்லைப் பெட்டியில் பத்திரமாய் வைத்திருந்தாள்.

நாலாவது மருமகள் ரோகிணியோ மாமனர், நெல்லைப் பாதுகாக்கவேண்டுமென்று சொன்னதின் சூட்சுமத்தை உணர்ந்தவளாய் நெல்லை முளைக்கவைத்தாள்.

தினமும் அந்த ஐந்து நெற்பயிருக்கும் தண்ணீர் ஊற்றி, கவனித்து வளர்த்து வந்தாள். அதில் ஒருபிடி நெல் கிடைத்தது. அந்த ஒரு பிடி நெல்லையும் முன்போலவே பயிராக்கியதில் ஒருபடி கிடைத்தது. இவ்வாருக படிப்படியாய் மாமனர் கொடுத்த ஐந்துமணி நெல்லிலிருந்து, ஒரு நெற்களஞ்சியத்தையே நிரப்பி விட்டாள்.

ஐந்து வருஷங்களுக்குப் பிறகு நான்கு மருமகளையும் அழைத்து ஒவ்வொருவரிடமும் தான் கொடுத்த ஐந்து மணி நெல்லைத் திரும்பக் கேட்டார்.

மூத்தவள் குதிரிலிருந்து ஐந்து மணி நெல்லைக் கொண்டு வந்து மாமனரிடம் கொடுத்து உண்மையை உரைத்தாள்.

போகவதியும அப்படியே உண்மையைக் கூறிஞள். ரக்ஷிகாவதி மிகவும் பெருமையோடு தான் ஐந்து வருஷ காலம் பத்திரமாய் வைத்திருந்த ஐந்து மணி நெல்லைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

ரோகிணியை மாமனூர் கேட்டவுடன் அவள் ஐந்து வண்டிகள் வேண்டும் என்றுள். எல்லோரும் 'ஐந்து மணி நெல்லுக்கா ஐந்து வண்டிகள்' என்று அதிசயித்துக் கேட்டனர்.

உடனே ரோகிணி, தான் ஐந்து மணி நெல்லை எவ்வாறு அபிவிருத்தி செய்தாள் என்பதை விவரமாய்க் கூறினுள்.

உடனே தனவானுன சேட் "நீதான் என் சொத்துகளைப் பாதுகாக்கத் தகுதியான மருமகள், உன்னிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு நான் க்ஷேத்திராடனம் செல்கிறேன் என்று கூறினுர்.

ஐந்து மணி நெல்லை ஐந்து வருஷ காலம் பாதுகாத்த ரக்ஷிகாவை ரோகிணிக்கு கஜான்ஸியாக ஏற்பாடு செய்தார். நெல்லை உரித்து அரிசியை தின்ற போகவதியை வீட்டிற்கு சமையற்காரியாக ஆக்கினுர். ஐந்து மணி நெல்லை தூர விட்டெறிந்த உஜீக்கிற்கு வீட்டை பெருக்கி சுத்தம் செய்யும் வேலையைக் கொடுத்தார்.

இவ்வாருக நான்கு மருமகளுக்கும் அவரவர்கள் குணதிசயங்களுக்குத் தகுந்த பொறுப்புகள் அமைந்தன. வசதிக்குத் தக்கவாறு பொருள்கள் இயற்கையாகவே அமைந்திருப்பது அபூர்வமல்ல. அவற்றை அபிவிருத்தி செய்வதற்குத் தகுந்த புத்தி நுட்பம் அடைவதுதான் அபூர்வம்.

———

நீ பித்தனுயிரு! ஆனுல் பிரபஞ்ச மாயையில் அல்ல. தெய்வத்தினிடமுள்ள அன்பில்.

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

அமெரிக்காவில் ஆசிரியர்கள் நிலை

●

அமெரிக்க ஐக்கிய நாட்டில் என்பது லட்சம் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். வருஷாவருஷம் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலையை விட்டுவிட்டு வேறு துறைகளில் பிரவேசித்து விடுகின்றனர்.

இவர்கள் இவ்வாறு வேறு துறைகளை நாடுவது ஆசிரியர் வேலையைவிட அதிக ஊதியம் பெறுவதற்காக மட்டுமல்ல. ஆசிரியத் தொழிலிலுள்ள சிரமங்களிலிருந்து தப்பிப்பதற்காகத்தான். ஆசிரியர்கள் புகைப்பிடிக்கவோ, மதுபானம் அருந்தவோ, நடனங்களுக்குப் போகவோ, அரசியல் விஷயங்களில் தலையிடவோ கூடாதென்று சர்க்காரால் தடை செய்யப்பட்டிருக்கின்றனர்.

ஆசிரியைகள் காதலிக்கவோ கலியாணஞ்செய்து கொள்ளவோ கூடாது. அலங்கரித்துக்கொள்ளக்கூடாது. 'மேக்கப்' செய்துகொள்ளக் கூடாது. கை விரல்களுக்குச் சாயம் பூசிக்கொள்ளக்கூடாது. இவர்களுக்கு மாதம் நானூறு ரூபாய் சம்பளம். மற்றத்துறைகளைவிட ஆசிரியத் தொழிலில் சம்பளம் மிகவும் குறைவானதே.

இவர்களைக் கண்காணிப்பதற்குப் பிரத்யேகமாக 'சூப்ரவைசர்'கள் உண்டு. சூப்ரவைசர்கள் "அறிவற்ற பைத்தியக்காரத்தன முடையவர்கள்" என்று ஆசிரிய—ஆசிரியைகள் கருதினாலும் அவர்களைக் கண்டவிடத்து மரியாதை செய்யவேண்டும்.

இந்த ஆசிரிய ஆசிரியைகள் தங்கியிருக்குமிடங்களின் வாசல், ஜன்னல்களின் கதவுகளை எவ்வாறு திறந்தோ மூடியோயிருக்கவேண்டு மென்பதுகூட சர்க்காரால் வரையறை செய்யப்பட்டிருக்கிறது.

ஆசிரியர்கள் குழந்தைகளைக் கொடுமையாக நடத்துவது சகஜம். இந்தியாவில் ஆசிரியத் தொழிலைச் சிரமமாகக் கருதுபவர்களுக்கு மேற்கூறிய அமெரிக்க ஆசிரியர்களின் நிலைமையைப் பற்றியுள்ள தகவல்கள் ருசிகரமாயிருக்கலாம்.

———

பூச்சிவர்க்கம் நன்மை புரிகின்றது

•

பூச்சிகள், கொசு, எறும்பு, குளவி, செல், ஈக்கள் முதலிய அற்ப ஜீவ ஜந்துக்கள் இல்லாமலிருந்தால், உலக வாழ்வு எவ்வளவு இன்பமாக இருக்குமென்று நினைப்பதுண்டு.

ஆனல் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிப்படி இம்மாதிரி அற்ப ஜந்துக்கள் மறைந்தால், மனிதர் வாழ்க்கைக்கு கெடுதல் ஏற்படுமென்பதே.

பூ காயாவதற்கு ஒரு செடியிலிருந்து மற்ருெரு செடிக்கும், ஒரு மரத்திலிருந்து மற்ருெரு மரத்திற்கும், மகரந்தப் பொடியைப் பரவச்செய்வது வண்டுகள், ஈக்கள் முதலிய பறக்கும் ஜந்துக்களே. இவையில்லாவிடில், பூக்கள் காயாக மாருது.

மனிதனுக்கு முக்கிய தேவையான உணவுப்பொருள் கிடைக்காது. கால் நடைகளுக்குத் தேவையான புல், பூண்டுகளும் கிடைக்காது.

மனிதனுக்குக் கெடுதலை விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருள்கள் இயற்கையில் எப்போதும் கூடிக்கொண்டே வரும். இவை மென்மேலும் குப்பையாகச் சேராமலும், அதனுல் மனிதனுக்கு ஏற்படும் தீங்கையும் இந்த ஜந்துக்கள் தவிர்க்கின்றன.

இந்த ஜீவஜந்துக்கள் பூர்ணமாக அழிவுற்ருல், உலகத்தில் கொடிய வியாதி பரவி, மனிதவர்க்கமே அழிய நேரிடும். அமிர்த பானமாகிய தேனும் மனிதனுக்குக் கிட்டாது.

—

பெண்கள் பரிசும் புகழும் பெறுவதால் நேரிடும் தீங்குகள்.

தன்மானம் இழக்கும் சன்மானம்

●

தாய்மார்களே, சகோதரிகளே, உங்களுக்கு நன்ருகச் சமைக்கத்தெரியுமா? விதவிதமான ருசியுள்ள பக்ஷண வகைகள் தயாரிக்கத் தெரியுமா?

உங்கள் வீட்டுக் குழந்தைகளை நன்ருகப் பராமரிக்கத் தெரியுமா? குழந்தைகளுக்கு சுகாதார முறையில் புஷ்டியான ஆகார வகைகளை அளித்து அவைகளின் ஆரோக்கியத்தை பாதுகாக்கத் தெரியுமா?

உங்கள் வசதிக்குத்தகுந்தபடி அழகுள்ள சுத்தமான உடைகளை அணிவித்து குழந்தைகளை அலங்காரஞ் செய்யத் தெரியுமா?

இவ்வளவெல்லாம் சிறப்பாக குடும்பக் கலைகள் யாவும் தெரிந்த நம்நாட்டுக் குடும்ப ஸ்திரீகளுக்கு அவர்கள் கணவர்மார்கள் அல்லது உறவினர்களுடைய பாராட்டுகள்தான் கிடைக்கும். ஆனல் அமெரிக்காவிலோ, இம்மாதிரிக் குடும்பக் கலைகளின் சிறந்த முறையில் தேர்ச்சியடைந்த மாதர்களுக்கு பந்துக்கள் பாராட்டுகளன்றி வேறுசில ஸ்தாபனத்தார்கள் மூலம் பரிசுகளும் சன்மானங்களும் கிடைக்கின்றன.

இந்த அம்சங்களிலெல்லாம் பாராட்டுகளை தெரிவிக்கும் முறைகளில் அமெரிக்கர்கள் விந்தையான வழிகளைக் கையாளுகிருர்கள். பெண்கள் பருவமடைந்தால் அழகுப் போட்டிகளில் கலந்துகொண்டு பணமும் புகழும் சம்பாதிக்கலாம்!

ஏராளமான வாழ்க்கை வசதிகள் பெற்றுள்ள மாதர்களும் வாடிக்கையாக

பல உயர்தர ரகங்களோடு கூடிய நவநாகரீக ஆடைகள் பலவற்றையும் அணிந்து நாகரீக ஆடை அலங்காரத்தில் விசேஷ சிறப்புவாய்ந்த பெண்களுக்கு சன்மானம் அளிக்கும் போட்டியிலும் கலந்து கொள்வார்கள்.

ஒரு லட்சாதிபதி அவர் குறிப்பிட்ட பத்து வருஷங்களில் குழந்தைகளை அதிகமாய் பெறும் தாய்மார்களுக்கென்று விசேஷ பரிசு அளிப்பதென்று ஒரு சமயம் ஏற்படுத்தியிருந்தார்.

முதல்கலியாண வாழ்க்கையில் ஐந்து பிள்ளைகளையும் விவாகரத்துச் செய்து கொண்ட பின்னர் சதிபதி வாழ்க்கையின்றி இருந்த நான்கு வருஷங்களில் நான்கு பிள்ளைகளையும் பின் இரண்டாவது கலியாணஞ் செய்துகொண்டதன் மூலம், இரட்டைக் குழந்தைகளாகவும் மூன்று குழந்தைகளாகவும் ஆக ஆறு குழந்தைகளையும ஆகமொத்தத்தில் பத்து வருஷங்களில் ஒரு பதினைந்து குழந்தைகளைப் பெற்ற ஒரு அமெரிக்க மாதுக்குத்தான் இப்பரிசு கிடைத்தது.

இயற்கை சம்பவங்களுக்கும் செயற்கை அலங்காரங்களுக்கும் சன்மானம் அளிக்கும் அமெரிக்கர்கள் குடும்பக் கலையில் தேர்ச்சியடைந்து வெகு திறமையோடு இல்லறம் நடத்தும் மாதர்களுக்குச் சன்மானம் அளிப்பது அதிசயமல்லவே!

சிறந்த முறையில் இல்லறம் நடத்துபவள் என்று தேர்ந்தெடுக்கப்படும் மாதருக்கு மொத்தமாய் 50,000 ரூபாய் பரிசு கிடைக்கும். ஒரு மோட்டார் வண்டியும் துணிதுவைக்கும் மின்சார யந்திரமும், விருந்தாளிகளை உபசரிக்கும் 'வரவேற்பு ஹாலுக்'கு வேண்டிய 'பர்னிச்சர்' சாமான்கள் முதலியவைகள் மாதர்கள் பெறும் பரிசினங்களில் சேர்ந்தவையாகும்.

ஒருமாது இம்மாதிரி இப்பரிசைப் பெற்றுவிட்டால் அவள் ஒரு வருஷத்திற்குத் தன் வாழ்க்கையே இழந்தவளாகிருள். ஒரு வருஷ காலத்திற்கு இவளை மணந்த கணவனாலும் இவள்பெற்ற குழந்தைகளாலும் கண்ணாலேயேகாண முடியாது.

அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திற்கும் இம்மாதிரிப்

போட்டிக்குப் பரிசளிக்கும் கழகத்தார் இவளை அழைத்துச் செல்வார்கள்.

இவளை ரேடியோவில் ஓய்வில்லாமல் பேசவைப்பார்கள். மாகாணங்களிலுள்ள சகல நகரங்களிலும் ஒவ்வொரு பொதுக்கூட்டம் நடத்தி அக்கூட்டத்தில் போட்டிக் கழகத்தார் விருப்பப்படி யெல்லாம் ஆடை அணிந்து இவளைத் தோன்றச் செய்வாரகள். இந்த மாதிரி மாகாண சுற்றுப்பிரயாணஞ் செய்யும்போது நடுவே ஓரிரண்டு மாதங்களுக்கொரு முறை வீட்டிற்கும் வந்து இரண்டொருநாட்கள் தங்குவாள். வீட்டில் தங்கும் சமயத்தில் இவளைச் சுற்றிலும் பத்திரிகைக்காரர்களும் ரேடியோ நிருபர்களும், இவளை ஈ மொய்ப்பது போல் மொய்த்துக்கொண்டிருப்பார்கள். தூங்கிக் கொண்டிருந்தாலும் இவளைச் சுற்றிக்கொண்டுதானிருப்பார்கள்.

கணவனுக்கோ, குழந்தைகளுக்கோ இவளுடன் ஒரு வார்த்தைகூட பேசமுடியாது. எந்த பதார்த்தத்தை செய்வதற்காகப் பரிசுபெற்றுளோ, அந்த பதார்த்தமோ வேறு பதார்த்தமோ செய்து கணவனுக்கும் தன் குழந்தைகளுக்கும் செய்து கொடுத்து களிப்பூட்ட முடியாது.

பூர்த்தியாகும் தேர்தலில் கலந்துகொள்பவர்கள் தேர்தல் முடிந்தவுடன் மாகாண சுற்றுப் பிரயாணத்திற்காக தயாராயிருக்கும் பொருட்டு அவரவர்கள் படுக்கை, துணிமணி முதலான சாமான்களோடு தேர்தல் கமிட்டிமுன் ஆஜராகவேண்டும். அந்த முடிவான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் அதே விநாடியிலே ஆகாய விமானத்திலே மாகாண சுற்றுப்பிரயாணஞ் செய்ய தொடங்கி விடுவாள்.

வீட்டிற்குவந்து கணவனிடமோ அருமைக் குழந்தைகளிடமோ விடைபெற்றுக் கொண்டு போகமுடியாது.

இம்மாதிரிப் பரிசுபெற்ற மாதர்களில் ஒரு மாதுக்கு மூன்று குழந்தைகள். கடைசிக் குழந்தைக்கு மூன்றே மாதம்தான் வயது.

இவளும் தேர்தல் கழகத்தினர் உத்தரவுப்படி தன் மூன்றுமாதக் குழந்தையையும்கூட விட்டுவிட்டு முன்

கூறியவாறு சுற்றுப்பிரயாணத்திற்குப் புறப்பட்டுவிடுவாள். அந்தப் பச்சிளங் குழந்தை தெய்வாதீனமாய் உயிர்வாழ்ந்து வந்தது.

அழகிகளை மணந்த கணவன்மார்கள் இத்தகைய போட்டிகளினுல் குடும்பத்திற்கு ஏற்படும் பாதகங்களை உணர்ந்து இப்போட்டி பற்றிய தகவல்களை தம் தம் மனைவிமார்களிடத்தில் கூறுவதில்லை. வேறு ஏதாவது உறவினர்களோ, மற்ற நண்பர்களோ இது பற்றி சொல்ல வந்தாலும் அவர்களைக் கண்டித்து உடனே வீட்டை விட்டு விரட்டிவிடுவார்கள். இந்தப் பரிசுப் போட்டிகளில் வாழ்க்கை வசதிகள் நிரம்பப் பெற்றவர்களும் கலந்து கொள்வார்கள். இந்தப் பரிசினுல் இவர்களுக்கு என்னபயன் என்று சற்றும் யோசிப்பதில்லை. வீட்டில் ஏற்கனவே ஒரு மோட்டார் வண்டி யிருக்கும். இந்தப் பரிசுமூலம் மற்ருெருகாரும் கிடைக்கும். வீட்டில் முதலிலேயே சலவை யந்திரம் இருக்கும்போது இப்பரிசால் மற்ருெரு யந்திரமும் வந்துசேரும்.

வீடு நிறைய பர்னிச்சர் சாமான்கள் ஏற்கனவே இருக்கும் போது இந்தப பரிசுமூலம் இரட்டிப்பாய் வந்துசேரும்.

இந்த உண்மையை உணர்ந்த ஒரு அமெரிக்க குடும்பஸ்தர் தன் மனைவி "அழகிகளின் போட்டி"க்குச் செல்வதைத் தடுத்துவிட்டார்.

தன் மனைவி 'அழகி'ப் போட்டிக்குச் சென்ருல் ஏற்படும் விபரீத விளைவுகளை முன்கூட்டியே நன்குணர்ந்திருந்தார். அவள் அந்தப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெற்ருல் ஒருவருஷம் வரை அவளைவிட்டுப் பிரிந்திருக்க வேண்டும். அவர்களுடையஒன்பது குழந்தைகளையும் சம்ரக்ஷிக்கும் பொறுப்பாகிய உணவு, உடை, தயாரிப்பது போன்ற மனைவி செய்யவேண்டிய குடும்பப் பாரமனைத்தும் இவர் தலையில் சுமத்தப்படுமென்றும் தன் மனைவி ரேடியோ, நாடகம், முதலான கேளிக்கைகளில் பல ஆடவர்களோடு கலந்துகொள்வதால் அவளுக்குக் களங்கமேற்படுமென்றும் இவ்வாருக ஒரு வருட காலத்திற்கு மனைவி அவள் இஷ்டப்போக்கில்

இருந்துவரும் நிலைமையைச் சகித்துக்கொள்ளவேண்டிய வேதனை ஏற்படுமென்பதி னாலும் தான் மனைவியைப் போட்டியில் கலந்து கொள்ள இவர் அனுமதிக்க வில்லை.

ஒன்பது குழந்தைகளைப் பெற்றபின்னரும் 'அழகிகள்' போட்டியில் கலந்துகொள் ளவேண்டுமென்ற மேனாட் டுப் பெண்களின் மனப் போக்கை நினைக்கும்போது நமக்கு விந்தையாய்த்தானி ருக்கிறது.

இந்த அம்மாளைப் போன்று 'அழகி'ப் போட்டி யில் கலந்துகொள்ள விரும் பிய பதினான்கு பெண்களின் கணவர்கள் அவர்கள் இஷ் டப்படியே போட்டியில் கலந்துகொள்ள அனும தித்துவிட்டார்கள்.

அந்தப் பதினான்கு பெண் களும் போட்டி நடத்தும் கழகத்தினர்களுக்கும், பத் திரிகைகாரர்களுக்கும் போட்டோ பிடிப்பவர்க ளுக்கும் இதர கேளிக்கை ஸ்தாபனத்தார்களுக்கும் ஒரு 'பொதுவுடமை'ப் பொருளாகித் திகழும் சீர் கேட்டைக் கண்ணுற்று. மனமுடைந்தனர்.

மனைவிக்கு அனுமதி கொடாத உத்தம கணவ னின் தீரத்தை மெச்சினார் கள். இவர்கள், அவர் செய் ததுதான் சரி என்ற அப் பொழுதுதான் அவர்கள் உணர்ந்தார்கள்,

ஆகவே, இத்தகைய நாக ரீகம் நமது நாட்டுக்குத் தேவையில்லை! நேர்மையும் ஒழுக்கமும், சீரும், சிறப்பும் பொருந்திய இல்வாழ்க் கையே தான் நம் புனித பாரதத்தின் பண்பாடா கும்.

எல்லாம் ஐந்து!

பூதங்கள் ஐந்து.

"ஐவகை யெனும் பூதம் ஆதியைவகுத்து'(மண், நீர், தீ, காற்று, ஆகாயம் இவை அண்ட பூதம். அண்டத்திற் குரியது பிண்டத்திற்கு உண்டு.

(மெய், நா, மூக்கு, கண், செவி) இவை ஐந்தும் கருமேந்திரியம்.

பொறிகள் ஐந்து.

சப்த, ஸ்பரிச, ரஸ, ரூப, கந்தம், (இவை பொறிகள்)

'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு' என்று குறள் வாக்கியமும் கூறுகிறது.

நிலம் ஐந்து.

குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம்.

(காடாகும் முல்லை, களியாகும் நெய்தல், கல்லாங் குறிஞ்சி, நாடாம் மருதம் நாரலை வெண்பாலை இவை.

மனித பருவங்கள் ஐந்து.

குழந்தைப் பருவம், வாலிபப் பருவம், யௌவனப் பருவம், கௌமாரப் பருவம், கிழப்பருவம்.

பூவின் பருவம் ஐந்து.

1. அரும்பு. (முதலில் தோன்றி கெட்டியாக இருப்பது.)

2. முகை அல்லது மொட்டு. காற்று உள் அடங்கி உப்பி யிருக்கும். லேசாக அழுத்தினாலே அமுங்கும்)

3. போது (சில இதழ்கள் விரிந்தும் சில இதழ்கள் மூடியுமிருக்கும்.

4. மலர்: எல்லா இதழ்களும் பூரணமாக விரிந்தவுடன் மலராகின்றது.

5. அலர்: (மலர் வாட ஆரம்பிக்கும் காலம்.)

நிலை ஐந்து.

ஜாக்கிரம், ஸ்வப்பனம், ஸுஷுப்தி, துரியம், தூரியாதீதம்.

பிறக்கும் குழந்தை துரியாதீத நிலையில் ஜனிக்கிறது. அதாவது எல்லாமிருந்தும் எல்லாம் இல்லாத தெய்வத் தன்மை. பொருந்திய நிலை.

குழந்தை வளர்ந்து பெரியவனுகும் போது ஜாக்கிர நிலையை அடைகிருன். அவனது மனம் பார்க்கும் பொருள்கள் அனைத்திலும் லயித்து ஒரு விஞடிகூட ஓய்வில்லாமல் இருக்கிறது.

இந்த நிலையைத் தான், 'நூறு கோடி மாயா சக்திகள் வேறு வேறு தம் மாய்கையில் தொடங்கின' என்று மாணிக்கவாசகரும் 'உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம். என்பது கோடி நினைந்து எண்ணுவன' என்று ஒளவையாரும் கூறியுள்ளார்கள். இதுவே ஜாக்கிரதா நிலையாம்.

ஸ்வப்பனம்.

தான் என்னென்ன காரியங்கள் செய்துகொண்டிருந்தபோதிலும் அவனுக்கு பிரவிருத்திப் பொருள்களும் இடங்களும் மற்றப் பொருள்களும் அகக்கண்களுக்குத் தோன்றிக்கொண்டேயிருபபதுதான் ஸ்வப்பன நிலை.

ஸுஷுப்தி.

லௌகீக விஷயங்களில் மனம் மயங்குவது.

துரியம்.

ஜாக்கிர, ஸ்வப்ன், ஸுஷுப்தி ஆகிய மூன்றும் கடந்த தனி அறிவு மயமான இடம் ஞான நிலை. பூர்வ ஜன்மவாசனை தோன்றும் நிலை.

அழகை விலைக்கு வாங்க முடியாது. அழகு கல்வியில்—கவியில்—பெண்ணில்—மலரில்—வானத்தில் இயற்கையில் மனிதனின் உள்ளத்தில் இருக்கிறது. அதை அனுபவிக்க மனவளர்ச்சி வேண்டும். அவ்வளர்ச்சியைப் பெறல்தான் வாழ்க்கையின் தர்மம்.

எல்லாவற்றிலும் மேனுட்டின ரையே பின்பற்ற வேண்டுமென்ற ஆவல் கொண்ட பித்தர்கள் கவனிக்க.

நல்வாழ்க்கைக்கு நம் பண்பாடே ஆதாரம்

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை பண்பும் பயனும் அது.

என்ற திருக்குறள் வாக்கியப்படி இல்லறம் என்னும் சதிபதி வாழ்க்கை நீதி வழுவா நெறிமுறையாக இருக்கவேண்டும். இல்லறமாகிய ரதத்தில் சதிபதிகளாகிய ரிஷபங்களைப் பூட்டி பூரண வாழ்க்கை யென்னும் லட்சியத்தை அடையச் செய்யவேண்டும். இவற்றில் ஒன்று பின்னடைந்தாலும் பூரண வாழ்க்கை யென்னும் லட்சியத்தை அடையமுடியாது.

இருவருடைய கருத்துகளும் ஒருமிக்க இருக்க வேண்டும். கிருகஸ்தானுகும் ஆடவனும் அறிவு வளர்ச்சி பெற்றவனுக இருக்கவேண்டும்.

பொதுவாக, பெண்ணின் மனோரம்மிய வாழ்க்கையாலேயே ஒரு குடும்பம் சிறப்புப் பெற்று விளங்குகிறது. பெண்ணின் பெற்ருேர்கள் பெண்களின் வாழ்க்கையாகிற மாளிகையின் அஸ்திவாரத்தை நன்கு ஆலோசித்துப்பலப்படுத்தவேண்டியதிருக்கிறது. தவிர பெண்களுக்கு அழ்கும் அறிவும் படைத்த கணவர்கள் கிடைத்தால் அவர்கள் வாழ்க்கையைக் குதூகலமாக நடத்துகிருர்கள்.

இந்தநோக்கத்தை அடிப்படையாகக்கொண்டே அரசர்கள் தங்கள் குமாரத்திகளுக்குச் சுயம்வரம் நடத்தினர்கள். "சுயம்வரம்—" தானே கணவனைத் தேர்ந்தெடுத்தல். இம்மாதிரித் தானே கணவனைத் தேர்ந்தெடுக்கும் பெண்ணுக்கு தனக்குப் பிறகு வாழ்க்கையில் என்ன நேர்ந்தாலும் அவற்றைச் சகித்துக்கொள்ளும் பொறுமை ஏற்பட்டுவிடுகிறது.

பொதுவாக ஒரு பெண் தனக்கு வரும் கணவன் மிகவும் அழகுள்ளவனாக இருக்கவேண்டுமென்று நினைக்கிருள். பெண்ணின் தந்தையோ, தன் மகளுக்கு வாய்க்கும் கணவன் கல்வி, அறிவு, ஒழுக்கம் உடையவனாகஇருக்கவேண்டுமென்று நினைக்கிருர். பெண்ணின் தாயோ அவன் பெருஞ்செல்வந்தனாக இருக்க வேண்டுமென்று கருதுகிருள். இதுவும் நம நாட்டிலுள்ள சகஜமாயுள்ள அபிப்பிராயம்.

காலதேச வர்த்தமானத்தை அனுசரித்துப் பெரும்பாலும் பெண்ணுக்குப் பொருத்தமான கணவனைத் தேர்ந்தெடுப்பது தான் சிலாக்கியம். நமது நாட்டில் பெரும்பாலும், பெற்றேர்களே விவாகங்களை நிச்சயிப்பது வழக்கம். பெண்கள்அவர்கள்விவாகங்களைப் பற்றிப் பேசுவதே கிடையாது.

பேசுவதும் அவர்களுக்கு சங்கோஜம். காலப்போக்கை அனுசரியாத சில பெற்றேர்கள் வயோதிகனையோ அல்லது தங்கள் பெண்ணுக்கு லாயக்கற்றவனையோ பணத்திற்காக மணமகனகத் தேர்ந்தெடுக்கிருர்கள். "தாங்கள் தேர்ந்தெடுக்கும் வரன் எனக்குப் பொருத்தமற்றவன்" என துணிந்துகூறும் உரிமையை நம்நாட்டினர் பெண்களுக்கு அளிக்கவில்லை. ஒருவேளை துணிந்து அவளது அதிருப்தியைத் தெரிவித்தாலும் "பெற்றேர்கள் கூறுவதுபோல் நடப்பது தான் பெண்ணின் கடமை" எனக்கூறி விவாகத்தை முடித்துவிடுகிருர்கள். பின்பு அந்தப் பெண்ணின் வாழ்க்கை பாலைவன சஞ்சாரமாய்த்தான் போய்விடுகிறது. இதை அறிந்து தான் பாரதியாரும் "வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்

தைத் தள்ளி மிதித்திடுவோம்'' எனக் கூறுகிருர்.

சாதாரணமாய்ப் பெண்ணுக்குத்தான் குடும்பத்தை நிர்வகிக்கும் பொறுப்பு அதிகம். அவள்தான் குடும்ப யஜமானி. கணவன் குடும்ப நிகழ்ச்சிகள் அனைத்தையும் தன்மனைவியிடம் கலந்தே தான் செய்யவேண்டியதிருக்கிறது. இப்படியிருந்தால் தான் அந்த வாழ்க்கை மகிழ்ச்சியடைகிறது.

இக்கருத்தைத் தான் "தினம்தேடி, ஒரு மாதுக்கு ஈந்து மகிழ்வார்'' எனப் பட்டிணத்தார் கூறுகிருர்.

கணவனது வருவாய்க்குத் தகுந்தபடி சிக்கனமாய் செலவு செய்வதற்கும் குழந்தைகளுக்குக் கல்வியறிவு புகட்டி நற்குண நல்லொழுக்கத்தோடு சுகாதார முறையில் வளர்ப்பதற்கும், பிரவர்த்தியின் நிமித்தம் அயலூருக்குச் சென்றிருக்கும் கணவனுக்கு குடும்ப க்ஷேமாபிவிருத்திகளை கடிதம் மூலம் தெரிவிப்பதற்கும், பெண்களுக்குக் கல்வி மிகவும் அவசியம்.

புராதன காலத்தில்பெண்களின் அறிவு வளர்ச்சியில் அக்கறைகொள்ளாதிருந்தனர். ஆகவே அவர்கள் மடமையாகவே வளர்க்கப்பட்டு வந்தனர்.

பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்களும் இருக்க வேண்டுமென்று ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு புகழேந்தி பாடியுள்ளார்.

''நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச், செருக்கு மிருப்பதால் செம்மை மாதர் திறம் புவதில்லையாம்''

'நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்.' என விவரிக்கிருர்மகாகவிபாரதி. மேலும் பெண்மையில் சிறந்த தாய்மைக்கு மடமை குணம் இருக்கவேகூடாதென்பதற்காக. 'நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம் நீசத் தொண்டும் மடமையும்கொண்டதாய், தலத்தில், மாண்புயர் மக்களைப் பெற்றிடல், சாலவே அரிதாவாதோர் செய்தியாம்' என்றும் பாரதியார் கூறுகிருர்.'

பெண் கல்வி மிகவும் அவ்சியம். படியாத பெண்கள்

அறிவாளிகளாய் இல்லையா? என்று கேட்கலாம், அறிவாளியாகிய படியாத பெண் கல்வி கற்ருல் அறிவாகிற வைரக்கல் கல்வி ஆகிற சாணைக்கல்லில் தீட்டத்தீட்ட அதிகமாய் ஒளியிட்டுப் பிரகாசிப்பதுபோல், பெண்ணும் வாழ்க்கையில் பிரகாசிப்பாள். கணவன் வயிற்றுவலியில் துடிக்கும் பொழுது, ''வெந்நீர் போட்டுக் கொடுப்பதற்கு பரிசாரகன் இல்லையே'' என்று கையை நெறிக்கும் படித்த நாகரீக மங்கை இல்வாழ்க்கை நடத்த லாயக் கற்றவள் தானே. அவளை மணந்துகொண்ட கணவனும் மனம் நோகிருன்.

இதைத்தான் மாயூரம் முன்சீபா யிருந்த வேதநாயகம் பிள்ளையவர்களும் 'நல்ல பெண்ணைப் பார், நீ தூதா, நல்ல பெண்ணைப்பார். அல்லடா கேள், இந்தப்புவியின் மேலே ஆயிரம் காலத்துப் பயிராகையாலே—ந—பெ—பார்.

நல்லவள் ஏழையாகுலும் விடர்தே—நானூறு போனுலும் நீ பின்னிடாதே, பொல்லர்தவள் கையில் காட்டிக் கொடாதே, புலியைக் கொண்டுவந்தென்னைத் தெருவில் விடாதே.—

''அழகுள்ளவள் நல்ல ஜோடு. அழகில்லையாயினும் குணத்தை நாடு. பழகும் நற்குணமில்லா அழகியின் வீடு பாம்பு, புலி, கரடி வாழ்ந்திடும் காடு!'' எனக் கூறுகிருர்.

நமது நாட்டில் 'இன்பத்திலும் துன்பத்திலும் நான் உன்னைக் கைவிடுவதில்லை' யென அக்கினி சாட்சியாகப் பிரதிக்ஞை செய்து மணம் செய்கிரேும்.

ஒரு மனைவியானவள் கணவனது ஏராளமான வருவாயில் குதூகலமாகவாழ்க்கை நடத்துவதுபோலவே, அவர்களது வாழ்க்கையில் ஏற்படும் கஷ்டங்களிலும் கணவனுக்கு ஒரு மந்திரியாக இருந்து புத்தி கூறி இல்வாழ்க்கையை அமைதியோடும் ஆறுதலோடும் நடத்த வேண்டும. அவள் தான் உத்தம மனைவி.

ஜப்பான், சைனு போன்ற கீழ்த்திசை நாகரீக நாடுகளிலும் மேனுட்டாரின் சில நடையுடை பாவனைகளைப் பின்பற்றிய போதிலும் விவாக சமபந்தமான இதர லௌகிகங்களில் அவர்களின் புராதன மதக் கொள்கைகளிலும் நேர்மை, ஒழுக்கங்களிலும் பிசகுவதில்லை.

இதுபோலவே பாரதமக்களாகிய நாமும் மேனுட்டினர்களிடமுள்ள சில நல்ல பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவது தவருகாது. ஆனுல் மேனுட்டாரின் விவாக முறையையும் பகட்டான வெளி வேஷமுள்ள இல்லற வாழ்க்கையையும் பின்பற்ருமல் இல்லறத்தை நல்லறமாக வகுத்தருளிய நம் முன்னேர்களின் கருத்து மிகுந்த சாஸ்திரீய புனித விவாக முறையையே வழுவாது பின்பற்றி நாம் நடக்க வேண்டும்.

தேச சின்னங்களான புஷ்பங்கள்.

ஆண்டவனுக்குப் பூஜிக்கும் பொருளாகவும் மாதர்களுக்கு அலங்கார சர்தனமாகவும் விளங்குகின்ற சில புஷ்பங்கள், இங்கிலாந்து, பிரான்சு முதலிய தேசங்களில் தேசீயச் சின்னங்களாக விளங்குகின்றன.

இங்கிலாந்தில் அழகான ரோஜா புஷ்பம் தேசீய சின்னமாக இருக்கிறது. பாரசீகத்திற்கு கருஞ்சிவப்பு ரோஜா சின்னமர்கும். யூகோசிலேவியர்விற்கு அல்லி மலர் சின்னமாக விளங்குகிறது. பாரத தேசத்திற்கு 'வீணை செய் ஒலியிலிருப்பவளும் வேதத் திருவிழியாளு'மான நாமகள் வீற்றிருக்கும் தாமரைப் புஷ்பம் சின்னமாக இருக்கிறது.

புஷ்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு விசேஷத் தன்மை உள்ளது. ரோஜர் அன்பின் அறிகுறியாகவும் மல்லிகைப் பூ தைரியத்தின் சின்னமர்கவுமிருக்கிறது. புஷ்பங்களைப் பற்றி அதிகமாய்த் தெரிந்து கொள்வதே அறிவு வ்ளர்ச்சியாகும்.

வாழ்க்கையில் இன்பமடைவது யாவருக்கும் பொதுவழி. சில அபூர்வ சிருஷ்டிகளுக்கு ஒரு தனி வழி.

துன்பத்தால் இன்பமடையும் விந்தை!

●

தலைவிரி கோலமாகவோ அலட்சணமாகவோ, நிர்வாணமாகவோ நடப்பதும் கண்டபடி பிதற்றுவது மட்டுமே பைத்தியக்காரர்களின் லட்சணம் என்று கூறுவது தவறாகும்.

இப்படி அறிகுறிகள் தோன்றுமலிருப்பவர்களும் பைத்தியக்காரர்களாயிருக்கலாம்.

ஒரு ஏழை ஸ்திரீ, டாக்டரிடம் சென்று அவளுடைய கணவன் அவளை ஈவுஇரக்கமின்றி அடித்து ஹிம்சிப்பதாகத் தெரிவித்தாள். "நீ தெரிவிக்கவேண்டிய இடம் போலீஸ் ஸ்டேஷன் அல்லவா? என்னிடம் ஏன் வந்தாய்?" என்று கூறினர் டாக்டர்.

"போலீசாரிடம் தெரிவித்தால் விரும்பத்தகாத அக்கப்போர்கள் என்னைப்பற்றி பரவ நேரிடுமென்று பயந்தே தான் உங்களிடம் வந்தேன்" என்று பதில் கூறினுள்: இதற்கு டாக்டரால் பதில் கூற முடியாததால் அவளை ஒரு மனோதத்துவ நிபுணரிடம் அனுப்பிவைத்தார்.

மனோதத்துவ நிபுணரின் ஆராய்ச்சியிலிருந்து வெளியான தகவல்கள் மிகவும் விந்தையாயிருந்தன. ஐந்தாறு வருஷங்களுக்குமுன் இவள் தினமும் அவளுடைய கணவனுல் அடி, உதைகள் வாங்கி ஹிம்சிக்

கப்பட்டு வந்தாள். பிறகு இரண்டு வருஷங்களுக்கு முன்பு மேற்கூறியவ்ர்று வாரத்திற்கு இருமுறை ஹிம்சிக்கப்பட்டு வந்தாள். நாள் தவருமல் அடி, உதை வாங்குங்காலங்களில் அவள் அதிகக் குதூகலமாகவே யிருந்தாள்.

அடி, உதை குறைந்து வரும்பொழுது அவள் துக்சிக்க ஆரம்பித்தாள். கணவன் பூரணமாக அடி, உதைகளை நிறுத்திய பின்னர் அவள் மிகவும் துக்கத்தில் ஆழ்ந்திருந்தார் என்பதே மனேதத்துவ நிபுணர் ஆராய்ந்தறிந்த விஷயம்.

கணவன் அவளை சற்றேனும் ஹிம்சிக்காததால் தன் பேரில் அவனுக்கு அன்பேயில்லை என்றமுடிவுக்கு வந்துவிட்டாள்.!

இம்மாதிரி மனிதர்கள் ஆயிரக்கணக்காய் எங்கும் இருப்பதாகவே மனேதத்துவ நிபுணரின் அபிப்பிராயம்.

நல்ல உணவை உண்டும் நவீன நாகரீக ஆடைகளை அணிந்தும், இதர சரீர, சுக போக சவுக்கியங்களோடு இருப்பதுமட்டுமே பெரும்பான்மையாக மக்களைக் களிப்பூட்டுகிறது.

இதற்கு மாருக சிருஷ்டியில் சிலருக்கு சரீரத்திற்குப் பலாத்கார வேதனை ஏற்பட்டுக் கொண்டிருப்பது மட்டுமே மகிழ்ச்சியூட்டுவதாயிருக்கிறது. பைத்தியத்தில் இது ஒருவகைப்பைத்தியம்.

தன் மூளைக்கு எத்தகைய கோளாறுமே யில்லையெனப் பெருமை பாராட்டிக் கொள்கிறவர்களுக்கும் இம்மாதிரியான லேசான பைத்தியத்திற்காளாகி யிருக்கிறாகள். உதாரணமாக "உங்கள் விரலைத் தற்செயலாய் கத்தியால் வெட்டிக் கொள்ள நேர்ந்தது என்று வைத்துக் கொள்ளுங்கள்," உடனே காயம்பட்ட இடத்தில் 'அயோடினை' விடுகிறீர்கள். உடனே காயமடைந்த இடத் எரிச்சல் உண்டாகிறது. அந்த எரிச்சலை சகித்துக் கொள்ளமுடியாமல் நீங்கள் அழுவதில்லை. அந்தக் கத்தியால்உண்டான காயத்தால் ஏற்படக்கூடிய ஆபத்தை நீக்கிவிட்டோம் என்ற ஆனந்தம்தான் உண்டாகிறது.! அதாவது சரீரத்தின் வேதனையால் மனசுக்கு ஆனந்தம் உண்டாகிறது. நம் நாட்டில் சில

சந்நியாசிகள் இரும்பு ஆணிகள் மேல்நோக்கி பொருத்தியிருக்கும் பாதரக்ஷைகளை அணிந்து நடப்பதும், இத்தகைய நெருக்கமான ஆணிகள் அமைத்த பலகையின் மீது சயனிப்பதும், கூரிய சிறிய வேல்களை நாக்கிலும் இரு கன்னங்களில் ஊடுருவும்படி குத்திக்கொள்வதும் நாம் யாவரும் பிரத்யக்ஷமாய்க் காண்பவைகளாகும்.

இன்னும் சில சந்நியாசிகள் புண்ணிய க்ஷேத்திரங்களில் தங்கள் கைகளில் ஒன்றையோ அல்லது கால்களில் ஒன்றையோ மேல்நோக்கித் தூக்கிக்கொண்டு அந்த அங்கங்கள் உணர்ச்சி அற்றுப் போகும்படியாய் ஒரே நிலையில் நின்றுகொண்டிருப்பதையும் நாம் கண்டறிந்திருக்கிறோம்.

இம்மாதிரி வேண்டுமென்றே சரீரத்திற்கும், சரீர ஒரு தனி அவயவத்திற்கும் வேதனையை வருவித்துக் கொண்டு, அந்த வேதனையால் மனக்களிப்புறும் அநேகர் இருக்கின்றனர்.

இந்த வகை சிறுபைத்தியம் உள்ள சிலர் சரீரத்திற்கு வேண்டுமென்றே வேதனையை வருவித்துக்கொள்வது போலவே மற்றும் சிலர் மனத்திற்கும் வேதனையை வருவித்துக்கொள்கிறார்கள்.

எவ்விதமென்றால், உதாரணமாக ஒரு பெரிய காரியாலத்திலிருக்கும் தலைமை அதிகாரி, காரியாலயச்சிப்பந்திகளை 'ஆபீஸ் நேரங்களில்' மிக வன்மையாகக் கண்டிப்பதும், சிப்பந்திகள் திகிலடைந்து நடுங்கும்படியாய் அதிகாரம் செய்வதுமாக இருப்பார்.

இவ்விதம் கடுமையாக அதிகாரம் செய்யும் தலைமை அதிகாரி, தன் வீட்டிற்கு வந்ததும், தன் மனைவியின் கொடூர அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு, மனைவியின் கண்டிப்பான ஆக்கினைகளிலும், மனைவியின் வசைமாரிகளிலும், மனவேதனையடைந்து, தன் மனைவியின் துன்புறுத்தலையே, சந்தோஷமாக அனுபவிக்கிறார்!

இதேபோல் மிகுந்த புத்தி நுட்பமும் சாதுர்யமும் இல்லாத ஒரு சாதாரண அப்பாவியின் மனைவி கணவனுடைய அர்த்தமற்ற துவேஷ வசைகளால் மனவேதனையடைவதிலேயே சந்தோஷமடைகிறாள்.

குமாஸ்தாக்களில் ஒரு தனி ரகத்தை நீங்கள் எல்லோரும் கண்டிருக்கலாம். அவர்களுக்கு எந்த நேரமும் ஆபீஸ்களில் இருப்பது தான் மனத்திருப்தியளிக்கும். காலையில் பத்து மணிக்கு ஆபீஸ் என்ருல் இவர்கள் எட்டு மணிக்கே போய்விடுவார்கள்.

ஆபீஸ் நேரம் முடிந்தபின்னருங்கூட, இவர்கள் வீட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை.

விடுமுறை நாட்களிலும் ஆபீஸுக்குச் சென்றுவிடுவார்கள். இதுவும் மேற்கூறிய பைத்தியத்தின் சின்னமேயாகும்.

சுயார்ஜிதமாகவோ, அல்லது பிதுராஜ்ஜிதமாகவோ, வாழ்க்கையில் சகல வசதிகளும் ஒருங்கே அமையப் பெற்றவர்களில் சிலர், தனது குடும்பத்திற்குவேலையாட்களே செய்ய வேண்டிய (பிறரை ஏவி நடக்கவேண்டிய) சிறிய காரியங்களெல்லாம் தாங்களே சரீர சிரமப்பட்டுக்கொண்டு செய்துவருவார்கள். இதுவும் மேற்கூறிய பைத்தியத்தைச் சேர்ந்ததுதான்.

இம்மாதிரி சிறு விசித்திர பைத்தியம் மனிதரைப் பாதிக்கும் காரணம், சிறு பிராயத்தில் பெற்ருேர்களால் அவர்கள் வளர்க்கப்பட்டுவந்த சூழ்நிலையே தான்.

மேலே கூறிய டாக்டரிடமும் மனேதத்துவ நிபுணரிடமும் சென்ற அந்தப் பெண் சிறு பிராயத்தில் அவளது தந்தையால் அடிபட்டு வந்தாள். முதலில் அவள் தகப்பனிடம் அடிபடும்பொழுதெல்லாம் வருத்தமடைந்தாள் நாளாவட்டத்தில் தந்தையால் அடிபடுவதையே ஒரு சந்தோஷமாகக் கொண்டாள்.

அவள் பெரியவளாகி கணவனுடன் இல்வாழ்க்கை நடத்தும் பொழுதும், அவளுக்குக் குழந்தைப் பருவத்தில் ஏற்பட்டிருந்த சூழ்நிலையே நிரந்தரம் பெற்றுவிட்டது.

இத்தகைய பைத்தியம் யார்யாரிடம் காணப்படுகிறதோ அவர்களுடைய குழந்தைப்பருவத்தை ஆராய்ச்சி செய்தால், இந்தப் பைத்தியம் பிடித்தகாரணம் நமக்குப் புலப்படும்.

இதிலிருந்து நமக்குத் தெரிவதென்ன வென்ருல், குழந்தைப் பருவத்தில் பெற்ருேர்கள் குழந்தைகளை மனம் பக்குவப்படும்படி நேர்மையாக, வளர்க்கக் கூடிய முறையில், வளர்க்காததனுல் தான் இவர்களுக்குச் சில்லறைப் பைத்தியங்கள் ஏற்படுகிறது என்பதே.

குழந்தைகளை வளர்ப்பதில் பெற்ருேர்கள் அபார பொறுமை, அறிவு, மிகுந்த கவனம் முதலியவற்றை அனுஷ்டிக்கவேண்டும்.

ஒருவாரக் கவி

புலவர் ஒருவர் ஆதி காலத்தில் ரகுநாத சேதுபதி யென்ற சேது மன்னரிடம் சென்ருர். மன்னர் புலவரை பார்த்து, 'நீர் 'ஒரு வாரம்' பாடமுடியுமா?' என வினவினுர்.

மன்னனைத் தலைவனுகவும், தலைவி தலைவனைப் பற்றிக் கூறும் கவியாகவுமுள்ள ஒரே கவியில் வாரத்தின் பெயர்களை அமைத்துப் பாடி முடித்தார். அக்கவி வருமாறு:—

"ஞாயிறு போய் விழ,
திங்கள் வந்தெய்திட, நண்ணிய
செவ்வாய் இதழ் ஊற,
புதன் அம்பு தூற, நல்
வியாழன் வர, வேயுறு
வெள்ளி வளைசோர, நான் உன்னை மேவுதற்கு, தாய்
சனியாயிருந்தாள், ரகுநாத தளசிங்கமே!"

(புதன்—மன்மதன்.)

தொண்டரின் கட்டளைக்கு கட்டுப்பட்டார்

•

ஞான பூமியாகிய நமது பரத கண்டத்திலே பகவானின் தொண்டர்களின் மகத்துவம் மகிமை பெற்று விளங்கியது. தொண்டர்களின் மகிமையைக் கூறுவது தான் நமது சாஸ்திரங்களாகும். நமது புண்ணிய பூமியை சித்தி நிலே, புத்தி நிலேவிளைகின்ற பூமியே' எனத் தாயுமானவர் கூறுகிறார்.

இத்தகைய நம் புனித நாட்டிலே காஞ்சீபுரம் தெய்வீகம் பொருந்திய மிகுந்த புண்ணிய க்ஷேத்திரமாகும். அங்கே ஆதிகாலத்தில் செந்நாப் புலவர் என்ற ஒரு விஷ்ணு பக்தர் மகிமைபெற்று விளங்கினர். அவருக்குக் கணிகண்ணன் என்ற சிஷ்யர் ஒருவர் இருந்தார். இந்தப் புலவர் காஞ்சி வரதராஜப்பெருமாள் சந்நிதியிலே பகவானைப் பற்றி சதா் பக்திப்பரவசமாக பாடிக்கொண்டே யிருப்பார். இவரது கவிதா சக்தியை அறிந்த காஞ்சி மன்னன் இவரை வரவழைத்துத் தன்மீது ஒரு கவி பாடும்படி கட்டளை யிட்டான்.

"அழியாத நாராயணனைப் பற்றிப் பாடுவேனே தவிர அழியும் நரனைப் பற்றிப் பாடமாட்டேன்" எனக்கூறி அரசன் மீது கவிபாட மறுத்துவிட்டார்.

மன்னனுக்குப் கோபம் வந்து. "உடனே நீர், என் ராஜ்யத்தைவிட்டுப் போய்விட வேண்டும்" எனக் கட்டளை யிட்டான்.

புலவர், வரதராஜர் சந்நிதிக்கு வந்து ''கணிகண்ணன் போகின்ருன்; காமரு பூங் கச்சி மணிவண்ணு,' நீ இங்கிருக்க வேண்டாம். துணிவுடைய செந்நாப் புலவனும் போகின் றேன். நீயும் உந்தன் பைநாகப்பாயைச் சுருட்டிக்கொள்'' எனப் பாடிவிட்டு தன சிஷ்யரை அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

அந்த விநாடியிலேயே அநந்த சயனமும் வரதராஜஞ கிய ஆதிமூலமும் அந்தர் தியானமாகினர்.

தரிசிக்க வந்த பக்தகோடிகள் மூலஸ்தானத்தில் பக வானைக் காணுமல் மனம் வருந்தி, அரசனிடம் சென்று முறையிட்டனர்.

தான் கோபித்து விரட்டிய செந்நாப் புல்வரே தான் இதற்குக் காரணம் என நிச்சயித்துப் பல திசை களுக்கும் சேவர்களை அனுப்பிப் புலவரைக் கண்டுபிடித்து அழைத்து வரும்படி கட்டளை யிட்டான்.

அவ்வாறே சேவகர்களும் புலவரைக் கண்டுபிடித்து அரசனிடம் அழைத்து வந்தனர். அரசன் புலவரிடம் மன் னிப்புக் கேட்டான். பின், 'தாங்கள் நிரந்தரமாய் காஞ்சி யிலே வாசம் செய்யவேண்டும், ஆலயத்தில் எம்பெருமானை அமர்த்தவேண்டும்' எனப் பணிவுடன் வேண்டிக் கொண் டான்.

புலவர் ஆலயத்திற்கு வந்து. 'கணிகண்ணன் போக் கொழிந்தான், காமரு பூங்கச்சி மணிவண்ணு, நீ, இங்கு இருக்கவேண்டும். துணிவுடைய செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன். நீயும் உந்தன் பை நாகப் பாயில்படுத் துக்கொள்' எனப் பாடிய விநாடியிலேயே, என்ன ஆச்சர் யம்! யாவருக்கும் பகவான் அநந்தசயனனைக் காட்சி தந் தருளினர்.

பகவானை, இதயக் கோயிலில் அமரச் செய்த பக்தர்களின் பெருமைதான் என்னே! பக்தர்களின் சித்தமெதுவோ, அதுவேதான் பகவத் செயலாக அமைந்துவிடுகிறது. ஆகையால்தான் ஔவையாரும் 'தொண்டர்' தம்பெருமை சொல்லவும் பெரிதே' எனக் கூறியுள்ளார்.

——

இவன் யார் ?

உலகிலே அவனன்றி வேரில்லை அவனே பெரியவன்
உண்ணுகின்ற உணவுக்கு உருசியும் கொடுத்திடுவான்
அழகாக ஓடியாடும் குழந்தைகளைப் பெற்றுவிட்டே
அத்தனையும் தன்னுள்ளே இழுத்துமே விழுங்கிடுவான்
உள்ளூர பொங்கியே கோபமென்று வந்துவிட்டால்
உலகையே அழித்துவிட்டு தன்னாட்சி புரிந்திடுவான். (1)

—இவன் யார் ?

★

கருத்தமேனியன் காலாறு உடையவன்
ஒருவன் மண்டைஒட்டிலே இரந்துண்பவன்
இருவனைய்க்கூடி இந்த ஒருவனைக் குத்தினர். (2)

—இவன் யார்?

★

வராமலே கொஞ்சநாள் எங்கேயோ இருந்தான்
வந்துவிட்டேன் என்றுகூறி மெள்ள, மெள்ள வந்தான்
கொஞ்சநாள் சிறப்பாக இருந்துவிட்டுப் போனான்
போனவன் மறுபடியும் திரும்பி வந்து சேர்ந்தான்
பலநாட்கள் வேலை செய்துமே தங்கிவிட்டு
குறை சில செய்துவிட்டு வராமலே போயேவிட்டான். (3)

—இவன் யார் ?

விடைகளுக்கு :— (64-ம் பக்கம் பார்க்கவும்.)

கவிச்சக்ரவர்த்தி திணறினர்

●

அந்திமயங்கும் வேளை. கிராமாந்திரங்களில் காடுகளிலிருந்து திரும்பும் ஆடுமாடுகளின் மணி ஓசைகள், அரவங்கள், அடையவரும் பக்ஷிஜாலங்களின் பலவித கானங்கள், ஆலயத்தில் ஒலிக்கும் மணியின் நாதம், கவர்ச்சிகரமான இத்தகைய ஒலிகளோடுகூடிய அக் கிராமத்தின் அந்திமாலையில் மனம் லயித்து இயற்கையின் சிறப்பை வியந்தவாறு சென்றுகொண்டிருந்த கம்பரின் உள்ளம் ஒரு வீட்டிலிருந்துவந்த ஒரு ஸ்திரீயின் ஒப்பாரி ஒலியால் கலக்கமடைந்தது.

கம்பர் அந்த வீட்டருகே வரும்போது, "சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிகாட்டுடே" என்ற ஒப்பாரிக்கண்ணியின் முதல்அடி அந்த ஸ்திரீ கூறியமாத்திரத்தில் அவளுடைய மற்ற உறவினர்கள் அவள் வாயைப் பொத்தி அழுகையை நிறுத்தினர்கள்.

இந்த "சில்லென்று பூத்த சிறுநெருஞ்சிகாட்டுடே" என்ற ஒப்பாரிக்கண்ணியின் முதல்அடி மிகுந்த சொற்சுவையும் பொருட்சுவையும் கூடி இலக்கண இலக்கியம் பொருந்தி அமைந்திருக்கிறதே, என்னே, நம்நாட்டுப்பெண்களின் கவிதாசக்தி என்று வியந்தார்.

"சிறுநெருஞ்சிக்காட்டுடே" என்ன நடந்ததென்ற இரண்டாவது அடி அவருக்குப் புலப்படவில்லை! யோசித்து யோசித்துப் பார்த்தார். கருத்துக்களோடு வார்த்தைகளை அமைத்து இரண்டாவது அடியைப் பூர்த்திசெய்ய அவரால் முடியவில்லை.

அந்தக் கண்ணியை எப்படியாவது அறிந்துகொள்ள வேண்டுமென்று அவரது கவியுள்ளம் துடித்தது. அவ் வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்த ஆட்களிடம் தன் கருத்தைத் தெரிவித்தார்.

"அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன்பு ஒப்பாரி வைத்து அழ ஆரம்பிப்பாள். நீங்கள் அந்தக் கண்ணியை அப்போது அறிந்துகொள்ளலாம் என்று தெரிவித்தார்கள். கவிதா உத்வேகத்தில் மூழ்கியிருந்த கம்பருக்கு இரண்டாவது அடியை அறிந்துகொள்ளாமல் அந்த இடத்தைவிட்டு அசைய மனம்வரவேயில்லை. தூங்கினல் எங்கே அந்த இரண்டாவது அடியை கேட்கமுடியாமல் போய்விடுமோ என்ற ஆவலினல் விடியுமட்டும் வீட்டருகே விழித்துக் காத்துக்கிடந்தார் கம்பர்.

வழக்கம்போல் சூரியோதயத்திற்கு மூன்று நாழிகைக்கு முன்பே அந்தஸ்திரீ ஒப்பாரியைத் தொடங்கினள். கண்ணிகள் ஒவ்வொன்ருய் வந்துகொண்டிருந்தன. அவர் தெரிந்துகொள்ளவேண்டிய கண்ணிக்காக ஆவலோடு காத்திருந்தார்.

"சில்லென்றுபூத்த சிறுநெருஞ்சி காட்டுடே, நில்லென்று சொல்லி நிறுத்தி வழி போனீரே" என்ற ஒப்பாரியின் பூர்த்தியான கண்ணியைக் கேட்டார். அவரது உள்ளம் இன்பமும் துன்பமும் கலந்து சுழன்றது. கவி நயத்தினல் மனம் பரவசமடைந்தது. வைதவ்யமடைந்த பெண்ணின் மலைபோன்ற துயரத்தை இரண்டேவரிகளில் விளக்கிவிட்ட அக் கவியின் கருத்தில் திளைத்து மனம் வேதனையுற்ருர்.

கவிச்சக்ரவர்த்தி கம்பர் பிரயாணத்தை ஒரு இரவிற்கு மீளவிடாமல் தடுத்த இச் சம்பவத்திற்கு காரணமான கிராமம்தான் இன்று மீளவிட்டான் என்று வழங்கப் படுகிறது. இது திருநெல்வேலி ஜில்லாவில் உள்ளது.

ஜப்பானியர்களின் வாழ்க்கை வரலாறுகளில் ஒரு ருசிகர மான அங்கம்.

நடிப்புக்காக பெண்களாக மாறின ஆண்கள்!

●

நம் நாட்டில் பழங்காலத்திலிருந்து நாடகங்களில் ஆண்கள் ஸ்திரீவேஷம் தரித்து ஸ்திரீயின் சாகஸங்களை யெல்லாம் காட்டி நடிப்பதை ரஸித்து வந்தோம். ஆனால் ஸ்திரீகள் ஆண்வேஷம்தாங்கி நாடகத்தில் நடிப்பது மிகவும் அபூர்வமானதாகவே யிருந்தது.

ஜப்பானிய நாடகமுறையில் ஒரு தனிரகமாகிய "கபூக்கி" என்ற நாடகத்தில் அங்கு ஆதிகாலத்தில் இந்த நாடகத்தின் நடிகர்கள் யாவருமே பெண்களாகவே யிருந்தனர்.

இந்த "கபூக்கி" என்பது கி. பி. 1600-வது வருஷத்தில் தோன்றியது. இதில் நடிப்பைவிட நட்னங்களே அதிகமாயிருந்தன. நடனங்கள் அதிகமாயிருந்ததால் தான் அதில் யாவருமே பெண் நடிகர்களா யிருந்தார்கள்.

ஆண் கதாபாத்திரங்களையும் பெண்களே ஆண் வேஷம் தரித்து நடித்து வந்தனர்.

"கபூக்கி" என்பது புனிதமான உன்னத வாழ்வை சித்திரிக்கும் கதை. ஆனால் ஆதிகாலத்தில் இந்த நாடகத்தில் நடித்த ஜப்பானிய பெண்களோ புனித வாழ்க்கைக்கு

மாருக முறைதவறிய ஒழுக்கமில்லாத தீயநெறியில் நடந்து 'கபூக்கி' நாடகத்திற்கே களங்கம் ஏற்படும்படி செய்துவிட்டனர்.

இந்தக் 'கபூக்கி'யில் நடிப்பவர்கள் என்ருலே நடை தவறியவர்கள் என்று இழிவுபடுத்தப்பட்டார்கள். முடிவில் சர்க்கார் தலையிட்டு நாடகங்களில் பெண்கள் நடிக்கக் கூடாதென்று சட்டமியற்றி அமுலுக்குக் கொண்டுவந்துவிட்டனர். இதனுல் "கபூக்கி" அறவே ஒழிந்துவிடவில்லை. உடனே பெண்களுக்குப் பதிலாக ஆடவர்களே முன்வந்து எல்லா கதாபாத்திரங்களையும் தாங்களே தாங்கி நடித்தார்கள்.

ஆடவர்கள் பொருத்தமாகப் பெண்வேஷம் தரித்துக் கொள்வதற்கும் பெண்கள்மாதிரியே சாகசம் செய்வதற்கும் திறமை பெற்ருர்கள்.

பெண்வேஷம் தாங்கி நடிக்கும் ஆடவர்கள் நாடக உலகிலேயே ஒரு பிரத்தியேக ஸ்தானமும் அடைந்துவிட்டார்கள். இவர்கள் பெண்கள் வேஷம்தான் எப்பொழுதும் தரிப்பார்கள். ஜப்பான் தேசத்திலேயே கீர்த்திபெற்ற உன்னத நடிகர்கள் எனப் பெயர் பெற்றவர்கள் எல்லோரும் இந்த ஸ்திரீ வேஷம்போடும் இனத்தைச் சேர்ந்தவர்களே.

ஸ்திரீவேஷம் தாங்கும் இந் நடிகர்கள் தங்கள் வீடுகளில் செயற்கையில் ஸ்திரீகள் முகபாவனையைச் செய்துகொண்டும் ஸ்திரீகளின் உடைகளை அணிந்தும் நடையுடை பாவனைகளிலும் பெண்கள் போன்றே சகஜ வாழ்க்கையை நடத்தி வந்தார்கள்.

இந்த ஆடவர்கள் பெண்களாக நடிப்பதில் திறமை பெற்றதிலிருந்து நாடகக் கலைக்கு ஓர் உயர்வும் இவர்களுக்கு உலகிலே புகழும் கிட்டியது. Japan Digest

[பர்மிய நாடோடிக் கதை]

நான்கு செவிடர்கள்

●

ஓர் ஊரில் நான்கு செவிடர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவன் மாடுமேய்ப்பவன், இன்னொருவன் மரமேறி, இன்னொருவன் குடியானவன், மற்றவன் கிராமத் தலையாரி.

ஒருநாள் காலையில் ஆயன் கண்விழித்துப் பார்த்த போது ஒரு பசுவைக் காணவில்லை. அது இரவில் எங்கோ ஓடிப்போய்விட்டது. தேடித் தேடி அலைந்தும் அது கிடைக்கவில்லை. அலுத்துப்போன ஆயன் வழியில் மரமேறியைப் பார்த்தான். "என்னப்பா, என்பசுவை எங் காவது பார்த்தாயா!" என்று கேட்டான். தன் வியாபா ரத்தைப் பற்றித்தான் அவன் கேட்கிறான் என்று மரமேறி நினைத்தான். "இந்த வருஷம் இந்த மரம் ஒன்றும் சுக மில்லை, அப்பா! அதோ, அந்தத்தோப்பு எவ்வளவோ தேவலை" என்றான்.

மாடு அந்தத் தோப்பிலே இருப்பதாக மரமேறி சொல்கிறான் என்று ஆயன் நினைத்தான். அவன் நேரே அந்தத் தோப்புக்குப் போனான். நல்ல வேளையாக அங்கே அவன் பசு இருந்தது.

பசியோடும் சோர்வுடனும் ஆயன் வீடு திரும்பினான். அவன் குறுக்கு வழியே வீட்டுக்குப்போகப் பார்த்தான். குடியானவன், அறுவடையான நிலத்தில் அரிதாளை கொளுத்திக் கொண்டிருந்தான். "இப்படிக் குறுக்கு வழியே பசுவை ஓட்டிக்கொண்டு போகலாமா!" என்று அவனை ஆயன் கேட்டான்.

'இந்தப் பசுவை நீதான் ஒளித்துவைத்தாயோ?' என்று அவன் கேட்பதாகக் குடியானவன் நினைத்துக் கொண்டான். அவன் 'இல்லை, இல்லை' என்று பொருட் படத் தலையாட்டினான்.

"என் அப்பனே, இவ்வளவு அற்பனாக இருக்கிறாய்? உன் நிலம் இன்னும் உழவாகவில்லையே! இதில் மாட்டை ஓட்டிக்கொண்டு போனால் என்ன ஆகிவிடும்?" என்றான் ஆயன்.

"இல்லவே இல்லை, நான் இதை ஒளித்துவைக்கவே யில்லை!" என்று குடியானவன் தலையைப் பலமாக ஆட்டினான்.

கடைசியில் இருவருக்கும் சச்சரவு வலுத்துச் சண்டை யாக மாறியது. அவர்கள் கிராமத் தலையாரியிடம் முறை யிடப் போனார்கள்.

அன்று காலையில்தான் தலையாரிக்கும் அவன் மனை விக்கும் பெருத்த சச்சரவு. அவன் அவளை அடியடியென்று அடித்துவிட்டான். அவள் கோபித்துக்கொண்டு பிறந் தகம் போய்விட்டாள். இந்தச் சமயம் பார்த்துக் குடியான வனும் ஆயனும் அவனிடம் பஞ்சாயத்துக்கு வந்தார்கள். ஒவ்வொருவனும் தன் வழக்கை மும்முரமாகச் சொன்னான். தலையாரியோ கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு, "அதெல்லாம் முடியவே முடியாது! நீங்கள் போய் விடுங்கள்! நீங்கள் என்ன சொன்னாலும் இனிமேல் நான் அவளை அழைத்துக்கொள்ளப் போவதில்லை. அவள் பிறந்த வீட்டிலேயே கிடக்கட்டும்!" என்றான்.

ஆயனும் குடியானவனும் தங்கள் வழக்குத் தள்ளுபடி யாகிவிட்டதாக எண்ணிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி னார்கள்.

—

*அற்ப பூச்சியானாலும் அது விளை
விக்கும் தீங்குக்கு அளவில்லை.*

உலகமே எதிர்க்கும் பூச்சி!

●

பருவகாலம் சாதகமாயிருந்து பயிரும் கண்ணைக் கவரும் வனப்புடன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, கதிர்களெல்லாம் நிரந்து, 'கதிர் ஒரு முழமே நீண்டு கட்டு முக்கலமே காணும்' என விவசாயிக் குடிமக்கள் மிகவும் ஆவலோடு கதிர் அறுவடைக்குத் தயாராக இருக்கும் சமயம். சிறு பயிராக இருக்கும்பொழுது பல நோய்கள் அணுகாமல் நன்ருக வளர்ந்து, கதிர்கள் எல்லாம் விளைந்து, விவசாயப்பாட்டாளி பலனை அனுபவிக்கப்போகும் சமயம் அது. திடீரென்று ஒரு மந்தாரம் எற்பட்டது. சூரியனை மேகக் கூட்டங்கள் மறைப்பதுபோல் தோற்றமளித்தது. 'விர்' என்ற விசையுடன் கூடிய யந்திரத்தின் சப்தம்போல் ஓர் ஒலி கிளம்பியது.

திடீரென அகால மழைதான் பெய்யப்போகிறதோ என மேலே நோக்கினர். ஆனால் அது இடியுமல்ல: மழையுமல்ல! கோடிக்கணக்கான வெட்டுக் கிளிகள் படையெடுத்துவரும் காட்சியே அது!

திடீரென அவை வயல்களிலே இறங்கி விளைந்த தானியங்களையும், தோகைகளையும் பயிர்களின் வேர்களையும் இதர புல் பூண்டுகளையும் வயலுக்குப் பாதுகாப்பாயிருந்த வேலிகளையும் வயல் பக்கங்களிலிருந்து விவசாயி

களின் குடிசைகளின் மீது வேயப்பட்டிருந்த ஓலைகளையும், வெளியே துவைத்துக் காயப்போட்டிருந்த விவசாயிக் குடும்பங்களின் துணிகளையும் எள்ளத்தனையும் விடாது தின்றுவிட்டன.

கைக்கெட்டிய உணவு வாய்க்கெட்டாவண்ணம், இவ் வெட்டுக் கிளிகள் செய்துவிட்டன. ஆகையால், விவசாயி கள் உணவின்றி தவித்தனர். புல் பூண்டுகளையும் அறவே வெட்டுக்கிளிகள் தின்றுவிட்டமையால், கால் நடைகளும் தீனியின்றி அழிவுற்றன. குடிசைகளின் கூரைகளையெல் லாம் வெட்டுக் கிளிகள் தின்றுவிட்டதால், ஏழை மக்கள் இருக்க இடமின்றித் தவித்தனர்.

பஞ்சங்களிலெல்லாம் வெட்டுக் கிளிகளினால் ஏற்படும் பஞ்சமே மிகவும் கொடுமையானது.

இந்த நாசகார வேலையைச் செய்யும் வெட்டுக்கிளிகள் சாதாரணமாக நம் வீடுகளில் விளக்குகளிலே வந்துவிழும் விட்டில் பூச்சிகளாகவே முதலில் தோன்றின. இவையே தான் பின்னர் வெட்டுக்கிளிகளாக மாறின.

புல்பூண்டுகளோடுகூடி வளப்பமான பிரதேசங்களிலே முதலில் இவை விட்டில்களாக இருந்து, கொஞ்சதூரம் மட்டும் பறக்கும் சக்தியோடு ஜீவிக்கின்றன.

புல் பூண்டுகளைத் தின்று. நான்கைந்து வருஷங்கள் கழிந்த பின்னர், இவற்றிற்கு பெரிய இறக்கைகள் முளைத்து விடுகின்றன. தகுந்த உடலமைப்புபெற்று, கால்களும் குறுகிவிடுகின்றன.

இத்துடன் இவற்றிற்கு ஒரு ராக்ஷஸப் பசியும் ஏற் பட்டு விடுகிறது.

ஆகையினால் தான் பறவைகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இரைதேடப் பறந்துசெல்வது போல, இவையும் பல ராஜ்யங்களுக்கு கூட்டம் கூட்டமாக படை எடுத்துச்செல்கின்றன.

பல ராஜ்யங்களுக்கு உணவுக்காகப் படைஎடுத்து சென்ற வெட்டுக்கிளிகளில் அழிந்துபோனது போக, எஞ்சியுள்ள வெட்டுக்கிளிகள் அவை எங்கிருந்து புறப்பட்டனவோ, அதே இடத்திற்கு திரும்பிவந்து சேருகின்றன.

திரும்பிவந்து சேர்ந்த வெட்டுக்கிளிகளே, விட்டில் பூச்சிகளாக மாறுகின்றன. இவை எண்ணிக்கை பெருகும் விதம் எப்படியென்றால், பெண் விட்டில் பூச்சி சுமார் இரு நூறு முட்டைகள் வரை இடும். இவற்றில் சில சமயம் இரண்டு மூன்று குஞ்சுகள் தான் உயிரோடிருக்கும்.

சில சமயங்களில் பத்துப்பதினைந்து குஞ்சுகள் வரை உயிரோடிருக்கும். விட்டில் பூச்சிகள், வெட்டுக்கிளிகளாக மாறி பறந்து படைஎடுக்க ஆரம்பித்துவிட்டால், இவை இரண்டாயிரம் மைலுக்கு மேலும் பறக்கும்.

உதாரணமாக ஆப்பிரிக்காவிலிருந்து கிளம்பின படைகள் இங்கிலாந்திற்கும், கனடாவிற்கும் வந்து சேர்ந்தனவாம். பாரசீகத்திலிருந்து கிளம்பிய படைகள், இந்தியா, சீனு முதலான கீழ்த்திசை நாடுகளுக்கெல்லாம் வந்து சேர்ந்துள்ளனவாம்.

அவை பறக்கும் திசைநோக்கியே சாதகமாய்க் காற்று அடித்தால், மணிக்கு அறுபதுமைல் வேகத்தில் பறந்து செல்லுமாம். ஆனால் இவை செல்லும் திசைகளில் காற்றில்லாவிட்டால் சமுத்திரத்தில் விழுந்து அழிந்து போகுமாம்.

இவை படையெடுத்துப் பறந்து செல்லும்பொழுது இடைவெளியில்லாமல் ஒன்றின்கீழ் ஒன்றுகவும் சுமார் (இரண்டடி உயரமும்) ஒன்றன்பின் ஒன்றுகவும் பறந்து செல்வதினல் மேகசஞ்சாரம் போன்றே சூரியவெளிச்சத்தைக்கூட மறைத்துவிடுகின்றன. பறந்து செல்லும் வெட்டுக்கிளிகளின் தனி ஒரு கூட்டத்தின் நிறை சுமார்

எழுநூறிலிருந்து, ஆயிரம் டன் வரை இருக்குமாம். இவை யாவும் அப்படியே ஒரு மரத்தின் கிளைமீது வந்திறங் கினல் அந்தக் கிளை அப்படியே ஒடிந்துவிழுமாம்.

ஒரு வெட்டுக்கிளி படை பரந்த நிலப்பரப்பில் வந் திறங்கினல் நூற்றுக்கணக்கான சதுரமைலுக்கு வியா பித்து அங்கே ஒரு பசும்புல்கூடக் காண்பது அரிதாகி விடுமாம்.

இவை ஒரு இடத்தைக் குறிப்பிட்டுக்கொண்டு படை யெடுத்துச் செல்வதில்லை. குளிர்ந்த மெல்லிய மந்தமாரு தம் வீசும் திசையை நோக்கியே பறந்து செல்லும்.

புல் பூண்டுகளும், விருக்ஷங்களும் அடர்ந்த நீர்வள மும் நிலவளமும் உள்ள பிரதேசத்திலிருந்தே குளிர்ந்த காற்று வீசுவதால் அந்தக் குளிர்ந்த காற்று உற்பத்தி யாகும் இடம் வளப்பம் பொருந்தியதெனக் கருதியேதான் மேற்கூறியவாறு மந்தமாருதம் வீசும் திசையைநோக்கியே செல்கின்றன.

இந்த வெட்டுக்கிளி படையெடுப்பு ஒரு வருஷத்தில் ஏற்பட்டால் தொடர்ந்து நான்கைந்து வருஷங்களுக்கு ஏற்பட்டுக்கொண்டே யிருக்கும. பின்னர்தான் இவை யாவும் அழிவுறும்.

வெட்டுக்கிளிகள் படையெடுப்பிலிருந்து புறப்பட்ட இடத்திற்குத் திரும்பி வந்தவுடன் விட்டில் பூச்சிகளாய் மாறிவிடுகின்றன என்று கூறினேம் அல்லவா? பின்னர் இவை விட்டில் பூச்சிகளாகவே இருந்துவிடுவதில்லை. பின்னரும் இவை வெட்டுக்கிளிகளாக மாறி படைதிரண்டு விடும்.

இந்த வெட்டுக்கிளிப் படைகள் உற்பத்தியாகும் பிர தேசங்கள், ஆப்ரிக்கா, அரேபியா, ஈரான், பாகிஸ்தான், குஜராத் முதலியவைகளாகும்.

இவை பல தேசங்களிலிருந்து கிளம்பி வேறு பல தேசங்களுக்கு அழிவு விளைவிப்பதால் சர்வதேச ரீதியில் இந்த வெட்டுக்கிளிகள் படைகளை ஒழிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து வருகின்றனர்.

உற்பத்தியிலேயே இவற்றை அழித்துவிடவேண்டு மென்று இவை இருக்குமிடங்களில் ரசாயன மருந்துகளைத் தூவி முட்டைகள் குஞ்சுகள் பொறிக்காவண்ணம் செய்து விடுகின்றனர்.

மேற்கூறியவாறு மருந்துகளை தூவாது விட்டுவிட்டாலும், மருந்துகளைத் துவினபோதிலும், மழை, பனி, முதலியவற்ருல் இந்த ரசர்யன மருந்தின் அழிக்கும் சக்தி இல்லாமல் போய்விடுவதாலும் இவை மறுபடியும் பெருகி படையெடுக்க ஆரம்பித்துவிடுகின்றன.

அப்பொழுது விஷவர்யு, வேறுவிஷ மருந்துகள் இவற்றை எடுத்துக்கொண்டு படைகளின் கூடவே விமானத்தில் பறந்துசென்று இவை எங்கு இறங்குகின்றனவோ, அந்த இடத்தில் இந்த மருந்துகளை பிரயோகித்து வெட்டுக்கிளிகளை அழித்துவிடுகிருர்கள்.

இவ்வளவெல்லாம் தீவிர பிரயாசை எடுத்தும் வெட்டுக் கிளிகளை அறவே ஒழிக்கமுடியவில்லை. ஆகவே வெட்டுக் கிளிகள் படையெடுப்பினுல் ஏற்படும் கோரப் பஞ்சத்தையும் போக்கமுடியவில்லை.

சர்வதேச ரீதியில் அமைக்கப்பட்ட வெட்டுக்கிளி ஒழிப்புக் கழகம் ஒவ்வொரு வருஷமும் கூடி இவற்றைப் பூரணமாக ஒழித்துக் கட்டுவதற்கு தீவிர முயற்சியும், ஆலோசனையும், செய்துகொர்ண்டே வருகிறது.

இக் கழகம், சென்ற வருஷம் இரண்டாயிரம் வெட்டுக் கிளிப் படைகளை அழித்தது என்ருலும் அவற்றில் பல அழிவுருமல் தப்பிச் சென்றுவிட்டன.

பழையபடியும் பெருகி, இந்த வருஷமும் வெட்டுக்கிளிகள் படையெடுப்பு ஏற்படலாமென குழுவினர் எதிர்பார்க்கிருர்கள். வெட்டுக்கிளிகள் படைகளைத் தடுப்பதும் இவற்றை ஒழிப்பதுமாகிய பொறுப்பு பூச்சியினங்களைப் பற்றிய சாஸ்திர நிபுணர்களிடம்தானிருக்கிறது.

—Adapted from World Digest.

அகந்தை கூடாது

தன் குருவினுடைய சக்தியில் திடமான நம்பிக்கை கொண்ட சிஷ்யன் ஒருவன் குருவின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே ஒரு ஆழமான நதியைக் கடந்து அக்கரையை அடைந்தான். இதைக் கண்ட குருவிற்கு "என்னுடைய நாமத்திற்கு அவ்வளவு சக்தி இருக்கிறதா? அப்படியானல் நான் அபார சக்தி படைத்த ஒரு உயர்ந்த மனிதனைய்த் தானிருக்க வேண்டும்" என்று மனத்தில் கர்வமடைந்து அவரும் 'நான்', 'நான்' என்று சொல்லிக் கொண்டே நதியில் இறங்கினர். ஆழமான நதியில் இவர் மூழ்கி விட்டார். நம்பிக்கையினல் அதிசயங்களைச் சாதிக்கலாம். ஆனல் கர்வமும் டம்பமும் ஆளை அழித்துவிடும்.

பிரசித்திபெற்ற 'அரபுநாட்டு ஆயிரத்தொரு இரவு'க் கதைகளில் ஒன்று.

சித்திராங்கியை மோகித்த பொற்கொல்லன்

●

வெகுகாலத்திற்கு முன் அரேபிய நாட்டில் ஒருபொற் கொல்லன் வசித்துவந்தான் அவனுக்கு வாழ்க்கையில் இரண்டே ஆசைகள் தான் மனத்தில் குடிகொண்டிருந்தன. ஒன்று மது; மற்றொன்றுமாது.

ஒருநாள் தன் நண்பன் ஒருவன் வீட்டிற்குச் சென்றிருந்தபொழுது அவ் வீட்டின் சுவரில் தீட்டப்பெற்றிருந்த அழகிய பெண்ணின் சித்திரமொன்று அவன் மனத்தைக் கவர்ந்தது.

திரும்ப வீட்டிற்கு வந்த பிறகும் நண்பனின் வீட்டில் சித்திரத்தில் கண்ட பெண்ணையே நினைந்து நினைந்து மனமுருகி நோய்வாய்ப்பட்டு ஊண்உறக்கமின்றி பிரக்ஞையற்று படுக்கையிலே கிடந்தான்.

அவனது நண்பர்கள் அவனது நிலைக்கு இரங்கி ஒவ்வொருவராக வந்து அவனது உடல் நிலையை விசாரித்தார்கள். அழகாகத் தீட்டப்பெற்ற ஒரு பெண்ணின் படத்தைப் பார்த்து மனத்தைப் பறிகொடுத்து நோய் வாய்ப்பட்ட இவனது சபல புத்தியைக் கண்டு இவனது நண்பர்களில் சிலர் இவனைப் பரிகசித்தனர். வேறு சிலர் இவன் மனப்போக்கைக் கண்டித்தனர். ஆனால் பொற்கொல்லனே தான் எந்த விதத்திலும் சித்திர ரூபத்தில் அழகுடன் விளங்கிற பெண்ணை நேரில் கண்டு

அவளை அடைந்தால்தான் அவனுக்கு அமைதி ஏற்பட்டு தேகம் குணமடையுமென்பதையே எப்போதும் புலம்பிக்கொண்டிருந்தான்.

சித்திரத்தில் கண்ட ரூபவதியைக் கண்டுபிடிப்பதெப்படியென்று அவனது நண்பர்கள் ஆலோசித்தனர்.

சித்திரம் எழுதினவரைக் கேட்டால் அந்தப் பெண் யாரென்று தெரியலாமென்று சிலர் அபிப்பிராயப்பட்டனர்.

பிறகு நண்பர்கள் அந்தச் சித்திரக்காரனைத் தேடிச் சென்றனர். அந்தச் சித்திரக்காரனோ வேறொரு ஊருக்குச் சென்றிருந்தான். அவ்வூரில் சித்திரக்காரரின் உறவினரிடம் அவனது விலாசத்தைத் தெரிந்துகொண்டு சித்திரக்காரனுக்குக் கடிதமெழுதினர்.

அந்தக் கடிதத்தில், அந்தச் சுவரில் வரையப்பட்டிருந்த சித்திரம், சித்திரக்காரன் ஒரு பெண்ணைப் பார்த்து, அவளைப் போன்றே எழுதினனா? அல்லது அவனது கற்பனை ஓவியம் தானா? என்று எழுதிக் கேட்டார்கள்.

அதற்குச் சித்திரக்காரன் அந்நாட்டின் பிரதமமந்திரி தன்னுடனேயே வைத்திருக்கும் ஒரு தாசியின் உருவத்தை நேரில் கண்டு, அதைத்தான் தத்ரூபமாக சித்திரித்துள்ளதாக பதிலெழுதினன்.

நோயுற்றிருந்த அந்தப் பொற்கொல்லன் அந்தப் பெண் மோகத்தினுல் பிரயாண வசதிகளோடு பிரதம மந்திரி வசிக்கும் தலைநகருக்குச் சென்ருன்.

பொற்கொல்லன் மனத்தில் ஒரு திட்டத்தை வகுத்துக் கொண்டு முதலில் அங்குள்ள மன்னனைப்பற்றி விசாரித்தான். மன்னன் மிகவும் புத்திமானென்றும், நற்குணம வாய்ந்தவனென்றும், சகல கலைவல்லவனென்றும்; யாவரிடத்திலும் அன்புபாராட்டுபவனுக இருந்தபோதிலும் மந்திரவாதிகளையும் துர்த்தேவதைகளையும் மட்டுமே வெறுப்பவனென்றும் கேள்விப்பட்டான்.

பிறகு மந்திரிகள் ஒவ்வொருவரைப் பற்றியும் விசாரித்துத் தான் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டிய முதல் மந்திரியைப் பற்றி விசாரித்ததில்

முதல் மந்திரியுடன் மிகவும் அழகான ஒரு தாசி வசிப்பதாகத் தெரிந்துகொண்டான். சித்திரத்தில் கண்ட பெண் இவளே தான் என்று மனத்தில் ஊர்ஜிதம் செய்துகொண்டு இவளை அடையும் வழி யென்ன என்பதற்கு நாலைந்து தினங்கள் தீர்க்கமான ஆலோசனையிலிருந்தான்.

பிறகு ஒருநாள் திருடுவதற்குரிய கருவிகளை யெல்லாம் வைத்துக்கொண்டு திருடனைப்போல் முதன்மந்திரியின் மாளிகைக்குச் சென்றான்.

மாளிகையின், சுற்றுச் சுவரை, ஒருவருமறியா வண்ணம் தாண்டிச் சென்று மாளிகைக்குள் குதித்து ஸ்திரீகள் இருக்கும் அந்தப்புரத்தை நோக்கி வந்தான். அந்தப்புரத்தின் முற்றத்தில் நாலைந்து பெண்கள் நித்திரைசெய்வதைக் கண்டான்.

அவர்களில் ஒருபெண்மட்டுமே அழகிய மஞ்சத்தில் தூங்கிக் கொண்டிருந்தாள். மஞ்சத்தில் இருபுறமும் பொன் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

மந்திரி பிரியமாய் வைத்திருக்கும் தாசிப்பெண் அவளாகத்தானிருக்க வேண்டுமெனக் கருதி மஞ்சத்தை நோக்கிச்சென்றான். அவள் போர்த்தியிருந்த ரத்தினக் கம்பளத்தை விலக்கி அவள் முகத்தை நோக்கினான். சித்திரத்தில் தோன்றிய தன்பெண் இவளே தான் என்று அறிந்து கொண்டான். உடனே அவன் கையிலிருந்த கத்தியால் அவள் இடுப்பின் பின் பாகத்தில் ஆழமானகாயம் ஏற்படும்படியாகக் குத்தினான்.

அந்தத் தாசிப்பெண் குத்துப் பட்ட வேதனையால் விழிப்படைந்து, இவனைக் கண்டதும் திருடனெனத் திகிலடைந்து தலையணைப் பக்கத்தில் வைத்திருந்த தன் ஆபரணங்களடங்கிய பெட்டியை அப்படியே அவன் கையில் கொடுத்து "என்னை ஒன்றும் ஹிம்சிக்காதே" என்று மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். பெட்டியைக் கைப்பற்றிக்கொண்டு அரண்மனையிலிருந்து தான் தங்கி இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான் பொற்கொல்லன்.

மறுநாள் காலையில் அழகான ஆடைகளை யணிந்து கொண்டு நகைப் பெட்டி

19874-6

யுடன் அரசனைப் பார்க்கச் சென்றான்.

அரசனை நமஸ்கரித்து, "அரசே நான் தங்கள் பிரஜை. நான் என் கிராமத்திலிருந்து நேற்றுமாலை, இந்த நகரத்திற்கு வந்தேன். இரவு நேரமாகிவிட்டபடியால் நகரத்துக் கோட்டைவாயிலின் வெளியிலேயே தங்கியிருந்தேன். அப்போது நான்கு பெண்கள் எங்கிருந்தோ கோட்டைவாயிலை நோக்கி வருவதைக் கண்டேன். அவர்களில் ஒருபெண் விசிரியின் மீதும், மற்றொரு பெண் துடப்பத்தின் மீதும் சவாரி செய்துகொண்டு வருவதைக் கண்டேன். இவர்கள் மானிடப் பெண்கள் அல்ல துஷ்ட தேவதைகளாகத்தானிருக்கவேண்டுமெனத் தீர்மானித்தேன். அவர்களில் ஒருபெண் என் அருகில் வந்து என்னை காலால் உதைத்ததோடு அவள் கையிலிருந்த கம்பாலும் அடித்தாள். வேதனை தாளாமல் எனக்குக் கோபம் மூண்டது. என்னிடமிருந்த கத்தியால் அவள் இடுப்பின் பின்பாகத்தில் குத்தினேன். அப்பொழுது அவள் கையிலிருந்த பெட்டியை என் பக்கத்தில் போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

பெட்டியைத் திறந்து பார்த்ததில் நவமணிகள் இழைத்த பொன்னாபரணங்கள் பல நிறைந்திருந்தன. இந்த ஆபரணங்கள் அரண்மனை, ராணிக்குச் சொந்தமானவை எனக் கருதி ஆபரணங்களைப் பெட்டியோடு உங்களிடம் சமர்ப்பித்துவிட்டேன். நான் ஒரு துறவி, எனக்கு இந்த ஆபரணங்களால் என்ன பயன்? இவற்றைப் பெற்றுக் கொண்டு எனக்கு விடை கொடுக்கவேண்டும்" என மறுமுறையும் அரசனைப் பணிந்து விடைபெற்றுத் திரும்பிவிட்டான்.

அரசன் அந்த ஆபரணங்கள் ஒவ்வொன்றையும் பார்வையிட்டுக் கொண்டே வந்தான். அவற்றுள் ஒன்றுதான் முதல்மந்திரிக்கு சன்மானமளித்த அதே முத்துமாலைதான் என்பதை நன்கு அறிந்து கொண்டான்.

பின்னர் முதன்மந்திரியை வருவித்து பெட்டியிலிருந்த ஆபரணங்களை யெல்லாம் காண்பித்து "இந்த முத்துமாலை நாம், உமக்கு சன்மானம் அளித்ததல்லவா"? என வினவினான்.

"ஆம், மகாராஜா, இந்த முத்துமாலையை எனது பிரிய

காதலியாகிய ஒரு தாசிக்குப் பரிசளித்தேன்" எனக் கூறினர்.

"அந்தத் தாசியை அழைத்துவா" என்று அரசன் உத்தரவிட்டான். தாசிப்பெண்ணும் வந்து சேர்ந்தாள்.

அரசன் மந்திரியிடம் "அவள் இடுப்பின் பின்பாகத்தில் ஒரு காயம் இருக்கிறதாவென்று கவனித்துச் சொல்லும்" என்று கூறினன்.

அவ்வாறே அந்த தாசிப் பெண்ணைச் சோதித்து காயமிருப்பதாக மந்திரி கூறினர். அப்படியானல் துறவி கூறிய துர்தேவதை இவள்தான்; என்று அரசன் நிச்சயித்தான். உடனே, துர்தேவைக்கென்று பிரத்தியேகமாயுள்ள சிறையில் அந்த தாசிப் பெண்ணை அடைக்குமாறு ஆக்கினையிட்டான்.

இரவில் அந்த தாசிப் பெண்ணைச் சிறைக்கு அழைத்துச் செல்வதற்கு முன்னதாகவே பொற்கொல்லன் சிறைக்காவலனிடம் சென்று "அந்தப் பெண் ஒரு துர்தேவதையல்ல, அவள் மானிட வகுப்பைச் சேர்ந்த பெண்தான், அவளையடைய வேண்டுமென்ற ஆவலினல்தான் இந்தச் சூழ்ச்சிகளெல்லாம் செய்தேன். உங்கள் கிருபையால்தான் நான் அவளுடன் வாழ்க்கை நடத்தவேண்டியதிருக்கிறது. நீங்கள் செய்யும் இந்த உபகாரத்திற்காக ஆயிரம்பொன் பெற்றுக் கொண்டு அவளை என்னுடன் அனுப்பிவையுங்கள். எங்கள் வாழ்க்கையில் உங்களை என்றும் மறவோம். பெண்ணைக் காணவில்லையே! என்று ஒருவேளை அரசன் கோபத்திற்கு ஆளாகவேண்டுமே என்று நீங்கள் பயப்படவும் வேண்டியதில்லை. துர்த்தேவதை மாயமாய் மறைந்து போய்விட்டதென்று கூறிவிடலாம். இதனல் ராஜதண்டனையும் ஏற்படாது!! எனக் கூறினன். இதனல் தனக்கொரு தீங்கும் ஏற்படாது: ஆயிரம் பொன்னும் கிடைக்கிறது' என்று சிறைக்காவலன் மகிழ்ச்சியடைந்தவனய் அந்த தாசிப் பெண்ணைப் பொற்கொல்லனுடன் அனுப்பிவிட்டான்.

சித்திரத்தில் கண்ட பாவையைப் பெற்று பொற்கொல்லன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்துவந்தான்.

வீட்டு வசதியோடு வாழும் மிருகம்

●

"இது என் நாடு, இது என் வீடு" எனக் கூறும் போது, ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் ஒரு பெருமித உணர்ச்சி பிரதிபலிக்கிறது. பிரவர்த்தியின் நிமித்தம் வெளியுலகத்தில் சுற்றித்திரிந்துமாடமாளிகையாயினும் அல்லது சிறு குடிசையாயினும் தன்தன் இல்லத்திற்குவந்ததும் ஒவ்வொருவனும் களிப்புறுகிருன்.

அவரவர் இல்லமே அவரவருக்கு ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது.

சாதாரண வீடோ அல்லது மாட மாளிகையோ, அல்லது சிறிய குடிசையோ எதுவாயினும் மனிதனுக்கு தனக்கென்று ஒரு வீடு வேண்டியது அவசியமாக இருக்கிறது. இதைக் குறித்துத்தான், 'எலிவளையாயினும் தனி வளை வேண்டும்' என்ற பழமொழி வழங்குகிறது.

இவ்விதமிருக்க, நமது நாட்டில் சொந்த வீடுகள் இல்லாமலே லக்ஷக்கணக்கான மக்கள் வசிக்கின்றுர்கள். இவர்கள் பக்தர்கள் போன்று வேஷம் தரித்து, சந்நியாசம் பெற்றவர்களெனக் கூறுவார்கள்.

உண்மையில் பக்தியின் மேலீட்டால், துறவுபூண்ட உண்மையான சந்நியாசிகள் அல்ல இவர்கள். இருக்க வீடில்லாதவன் சந்நியாசம் கொள்வது உண்மைத் துறவாகாது.

இவர்கள் உழைத்துப் பயன் அடைய விரும்பாத சோம்பேறிகள். இக்கூட்டத்திலே பெண்களும் உண்டு. இந்த ஆண்—பெண் போலித் துறவிகள் சேர்ந்து கணவன் மனைவியாகவும் வாழ்கிருர்கள். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் குழந்தைப் பருவத்திலிருந்தே பிச்சையெடுக்க பழக்கப் படுகின்றன.

பெண் குழந்தைகள் தீய நெறிகளில் ஈடுபடுகின்றன. பின் களவு முதலியவற்றி

லும் ஈடுபடுகின்றனர். இவர்களால் நாட்டிற்கே ஒரு கேடாக இருக்கிறது.

சர்க்கார் புறம்போக்குகளிலும், இதர காலி மனைகளிலும் குடிக்கூலிக்கு எவ்வளவோ இடம் இருக்கிறது.

இந்த இடங்களில் இவர்கள் சிறு குடிசைகளை அமைத்துக்கொண்டு சரீரத்தால் உழைத்து ஊதியம் பெற்று எவ்வளவோ கௌரவமாக வாழலாம்.

ரயில் வணடிகளிலும் ரயில்வே நிலையங்களிலும், பஸ் ஸ்டாண்டுகள் முதலான பொது இடங்களிலும் இவர்களால் எவ்வளவோ அனர்த்தங்கள் ஏற்படுகின்றன.

இத்தீங்குகளைப் போக்குவதற்கும் பிச்சையெடுப்பதைத் தடுப்பதற்கும், சர்க்கார் 'பிச்சைக்காரர்' விடுதி ஏற்படுத்தி, அதன் மூலம் பிச்சைக்காரர்களைக் கண்காணித்து வருகிறார்கள்.

அறிவுபடைத்த மனித வர்க்கத்திலே இவர்கள் மிருகமாய் வாழ்கிறார்கள்.

ஆனால் மிருகங்களில் சில வீடுகட்டி வசிக்கின்றன. தூக்கணங் குருவி அழகான வீடு அமைத்து, அந்த வீட்டினிலே பல மின்மினிப்பூச்சிகளைக் கொண்டு வந்து, களிமண்ணில் அவற்றைப் புதைத்து, செலவில்லாமல் மிகவும் அழகான ஒளி பொருந்திய விளக்கை அமைத்துக் கொள்கின்றது.

என்னே, ஒரு சிறு குருவியின் அறிவு!

இனி மிருகம் வீடுகட்டுவதைப் பற்றி ஆராய்வோம். மலைகளிலும், காடுகளிலும் காட்டுப் பன்றி என்ற ஒரு மிருக இனம் வாழ்கின்றது. அவற்றில் பெண் பன்றி கருவுற்றதும், குடிசையமைக்க ஆரம்பித்துவிடும்.

மலைகளிலே தரகம் புல் என்ற ஒருபுல் வெகு செழிப்பாக வளர்ந்திருக்கும்.

இந்தப் புல் சுக்குபோன்ற வாசனை கொண்டதாயிருக்கும். இது சுமார் ஆறடியிலிருந்து, எட்டு அடி உயரம் வரை வளர்ந்திருக்கும். எதுவும் உட்புக முடியாதபடி மிகவும் நெருக்கமாக வளர்ந்திருக்கும். இந்தப் புல்லை பெண் பன்றியானது, வாயினாலேயே அறுத்து, கத்தை கத்தையாக ஒரு சதுப்பான இடத்திற்கு கொண்டுவந்து சேர்த்து

சுமார் முப்பது அடிகள் அளவுள்ள வட்டவடிவமாக அந்தப்புல்லைப பரப்பிப்போடும். அது சற்று உலர்ந்ததும் போரடித்த நெல் வைக்கோலை பிணையல் அடிப்பது போல அந்தப் பன்றி அந்த உலர்ந்த புல்லின்மேல் சுற்றிச் சுற்றிவரும். பழைய படியும் புதியதாகப் புல் கத்தைகளைக் கொண்டு வந்து ஏற்கனவே போடப் பட்டுள்ள உலர்ந்த புல்லின் மீது போடும். இவ்வாருக நாலைந்து தடவைகள் புல் கத்தைகளை ஒன்றின்மேல் ஒன்ருக போட்டபின்னர் புல் கத்தைகள் மிகவும் அழுத்த மாக ஒன்ருேடு ஒன்று கெட்டியாகப் பின்னிக்கொள்ளும். பின்னர் நாலைந்து கத்தைப் புற்களடங்கிய மெத்தை போன்ற பாகத்தில் ஒருபக்கத்தில் மண்டியிட்டுப் படுத்துக் கொண்டே அந்தப் புல் மெத்தைக்கு ஊர்ந்தே வந்து மத்தியில் எழும்பிநிற்கும்.

பிறகு இப்'புல் மெத்தை' குடை விரித்தாற் போல் குடிசை ரூபத்தில் அமையும். குடிசை நன்ருக உயர்ந்து அமைவதற்காக அதற்குள்ளே சுற்றிச் சுற்றிவரும். பிறகு வாயினுலேயே கடித்து ஒரு வாசலையும் அமைத்துவிடும்.

வட்டவடிவமான குடிசையைச்சுற்றி மழை பெய்தால் மழைஜலம் குடிசைக்குள் வராதபடி முகத்தினுலேயே மண்ணைக்கொண்டு வட்டச் சுவரையும் அமைத்துவிடும். இக் குடிசையின் அமைப்பு வெயிலைத் தடுப்பதுமன்றி, மழைஜலம் ஒரு சொட்டுக்கூட உள்ளே புகமுடியாத வாறு இருக்கிறது. இவ வாருக அமையப்பட்ட குடிசைக்குள்ளே தான் குட்டிகளை ஈன்று அவற்றை ரக்ஷிக்கும்.

சாதாரணமாய் மலைப் பன்றிகளால் மனிதருக்கு அபாயம் நேரிடாது. ஆனல் மலைப்பன்றியின் குடிசையின் அருகேவரும் மனிதனையும், விலங்கினங்களையும், குடிசையிலுள்ள பன்றி கண்டுவிட்டால் இவர்கள் தன் குட்டிகளுக்குத் தீங்கிழைக்க வந்திருப்பதாகக் கருதி இவர்களை விரட்டித் தாக்கும். மிருகத்திற்கு இருக்கும் இந்த அறிவுகூட மனிதர்களில் சிலருக்கு இல்லாதிருப்பது விந்தை தானே!

இயற்கையின் வரப்பிரசாதத்தை
நிரந்தரமாக்கிக் கொள்ளலாம்.

பழவகைகளை பயன்படுத்தும் வழி

•

தேகத்திற்கு ஆரோக்கியம் அளிக்கும் உணவு வகைகளில், பழங்களும் ஓர் சிறந்த உணவாகும்.

இந்தியாவிலே தான் மக்கள்பழங்களை மிகவும் குறைவாய் உணவாகக் கொள்கிறார்கள்.

மேல் நாடுகளில், காலை போஜனம், பகல்போஜனம், மாலை சிற்றுண்டி, இரவு போஜனம் முதலிய எல்லா ஆகார வேளைகளிலும் பழ உணவைத் தாரளமாய்ச் சேர்த்துக்கொள்வார்கள்.

இந்தியாவில் பழங்களை நிறைய உபயோகிக்காமலிருப்பதற்கு அநேக காரணங்களிருக்கின்றன: நமது நாட்டிலே, சீதோஷ்ண ஸ்திதிக்குத் தகுந்தவாறு பற்பல இடங்களில் பற்பல பழவகை தாவரங்கள் பயிரிடப்பெற்று வந்தாலும், அவை உற்பத்தியாகும் இடங்கள் மிகக்குறைவே. இவ்விடங்களிலிருந்து இப் பழங்களை நாட்டு மக்களுக்கெல்லாம் பயன்படும் முறையில் விநியோகிப்பதற்கு மிகுந்த சிரமும் ஏராளமான செலவும் பிடிக்கிறது.

பழவகைகள், உற்பத்தியாகு மிடத்திலிருந்து விற்பனைக்காக வெளியிடங்களுக்கு அனுப்பும்பொழுது நமது நாட்டின் சீதோஷ்ண நிலையால் அவை ஏராளமாக சேதமாகின்றன.

இக் காரணங்களால் பழவகைகள் கிராக்கியாகின்றன. பொதுமக்களுக்கு இவை கிடைப்பதும் அரிதாகின்றன.

இப் பழங்கள் உற்பத்தியாகு மிடங்களில் வெளி

இடங்களுக்கு பழங்களை ஏற்றுமதி செய்யத்தகுந்த சவுகரியங்களில்லாததால் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பழங்கள் அங்கேயே பயனற்றுப் போய்விடுகின்றன.

இயற்கை அன்னையின் வரப்பிரசாதமாகக்கிடைத்த பழ வகைகள் மக்களுக்கு ஒருவிதப் பிரயோஜனமுமின்றி மண்ணிலேயே அழிந்துவிடுகின்றன.

இம்மாதிரி பழவகைகள் வீணாகாம லிருப்பதற்காக மேனாட்டில் வெகுகாலமாய் ஒரு வழியைக் கையாண்டு வருகின்றனர். இம்மாதிரியான முறைகள் நம் நாட்டினருக்கும் தெரிந்திருந்தும் மக்களுக்குப் பயன்படும் அளவில் கையாளவில்லை.

இந்த முறைதான் பழங்களை 'டப்பாக்'களில் அடைப்பதாகும். இம்மாதிரி டப்பாக்களில் அடைக்கும் வழக்கத்தினால் மேனாட்டார் எவ்வளவு நன்மையடைகிறார்களென்பது யாவரும் அறிய வேண்டிய விஷயம். எல்லா வகைப் பழங்களும் எல்லாப் பருவகாலங்களிலும் கிடைப்பதில்லை. ஒவ்வொரு வகைப் பழமும் ஒவ்வொரு பருவகாலத்தில்தான் உண்டாகும். தனித்தனி வகைப் பழங்கள் கிடைக்கும் பருவங்களில், பறித்த பழங்களாகவே சாப்பிடுவார்கள்.

அந்தவகைப் பழம் கிடைக்காத காலங்களில் அந்தவகைப் பழங்களை டப்பாக்களிலிருந்து எடுத்து சாப்பிடுகிறார்கள். இதனால் எல்லாவகைப் பழமும் எல்லாப் பருவகாலங்களிலும் அவர்களுக்கு உணவாகக் கிடைக்கின்றன.

எப்போதுமே 'டப்பாக்களில் அடைத்த பழங்கள் கடைகளில் சொற்ப விலைக்கே கிடைப்பதனால் பறித்த பழங்களின் கிராக்கி குறைந்து அவையும் மலிவான விலைக்குக் கிடைப்பதற்குக் காரணமாகின்றன. இதைத் தவிரப் பழத்தோட்டங்களில் விலையாகாமல் மிஞ்சிய பழங்களையும் சிறிது வீணாய்ப்போன பழங்களையும் டப்பாக்களில் அடைத்து வைப்பதனால் இவை அழிந்துபோவதை அறவே தடுக்கின்றன.

மேல்நாடுகளில் பழவகைகள் மட்டுமல்ல: காய்கறிகள் எல்லாவற்றையுங்கூட டப்பாக்களில் அடைத்து வைக்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் வருஷா வரு

ஷம் நூற்றுக் கணக்கான டப்பாக்களை வாங்குகின்றனர்.

மேனாடுகளில் இந்தப் பழக்கம் தொடங்கி மூன்று நூற்றாண்டுகள் ஆகின்றன.

இம்மாதிரிப் பழங்களை டப்பாக்களில் அடைப்பதற்கும் டப்பாக்களைத் தயாரிப்பதற்கும் ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன.

பழங்களைக் கெட்டுப் போகாவண்ணம் டப்பாக்களில் அடைக்கும் முறைகளில் அவர்கள் விஞ்ஞான ரீதியில் நன்கு பயிற்சி பெற்றிருக்கின்றனர்.

லட்சக்கணக்கான டப்பாக்கள் ஒவ்வொருதொழிற்சாலையிலும் தயாராகின்றன.

காற்று உட்புகாவண்ணம் ஒரு நிமிஷத்தில் 300-லிருந்து 400 டப்பாக்கள் வரை தயாராகின்றன.

தயாரான டப்பாக்களில் பழங்களைத் துண்டுகளாக்கி சர்க்கரை, சர்பத், முதலான எஸன்ஸுகளையும் கலந்து அடைத்துவிடுவார்கள்.

அடைத்த பின்னர், டப்பாக்களைநீராவியில்வைத்து டப்பாக்களிலுள்ள காற்று முழுவதையும் நீக்கிவிடுவார்கள்.

இம்மாதிரி செய்வதனால், டப்பாக்களில் அடைத்துள்ள பழங்களில் சிறு கிருமிகள் உற்பத்தியாகாமல் தடுத்து, பழங்கள் கெடாமலிருக்கின்றன.

அமெரிக்கா, இங்கிலாந்து முதலான தேசங்களில் பச்சைக் காய்கறிகளை மட்டும் டப்பாக்களில் அடைப்பதற்கென்று தனி தொழிற்சாலைகளும், பழங்களை மட்டும் டப்பாக்களில்அடைக்கும்தனித் தொழிற்சாலைகளுமிருக்கின்றன.

இத்தொழிற்சாலைகளுக்குச் சொந்த நிர்வாகத்திலேயே காய்கறித் தோட்டங்களும், பழத் தோட்டங்களும் இருப்பதோடு வெளியிலிருந்தும் ஏராளமான காய்கறிகளும், பழங்களும் வாங்குகிறார்கள்.

இவ்விதம் பழங்களையும் காய்கறிகளையும் கெட்டுப் போகாமல் டப்பாக்களில் அடைத்துவிற்கும் தொழில் பிரமாதமாயிருப்பதால்,பழங்களையும், காய்கறிகளையும் பயிரிடும் விவசாயிகளுக்கு

மிகவும் ஊக்கமூட்டுவதாயிருக்கிறது.

நம்நாட்டில் பழங்களை டப்பாக்களில் அடைத்து விற்கும் தொழில் மக்களுக்குப் பயன்படும் முறையில் விருத்தியடையாததற்குக் காரணம், இங்கு டப்பாக்களைத் தயாரிக்கும் தகடுகள் ஏராளமாய் கிடைக்காதே.

தகடுகள் ஏராளமாய்க் கிடைத்து, பழங்களை டப்பாக்களில் அடைக்கும் தொழிற்சாலைகளுப் அபிவிருத்தி யடைந்தால், ஏராளமான பழங்கள் வீணுகப் போவதைத் தடுக்கலாம்.

இதனுல் எல்லாப் பழங்களும் எக்காலங்களிலும் கிடைக்கும். டப்பாக்களில் அடைப்பதனுல், பழங்கள் கெட்டுப்போகாமலிருப்பதை முன்னிட்டு, அவற்றைவெகு தொலைவிலுள்ள நகரங்களுக்கும் நஷ்டப்படாமல், சொற்பச் செலவில் அனுப்பலாம். அதனுல்பழங்களின் விலையும் குறையும்.

இதனுல் சாதாரண மக்கள் அனைவரும் தங்கள் உணவில் பழங்களையும் சேர்த்துக்கொள்ள வசதி கிடைப்பதால் மிகுந்த ஆரோக்கியத்தையும் பெறுவார்கள்.

உலகமெங்கும் நிறைந்திலங்கும் உண்மையின்' உயரிய உருவத்தை ஒருவன் முகமுகமாக தரிசிக்க விரும்பினுல், அவன் மக்கட் படைப்பில் கடையவனிடத்தும் அன்பு செலுத்தக் கூடியவனுக இருக்க வேண்டும்.

—மகாத்மா காந்தி

உண்மை அனைத்தும் உருமதமும் இல்லை.
உண்மை ஒன்றும் உராமதமும் இல்லை.

ஆனுல்

எம்மதம் எவ்வளவு உண்மையோடியையுமோ, அம்மதம் அவ்வளவு உயர்வினதாகும்.

—சர்வ ஜன ஜெபம்

களவிலும் கவியுள்ளம்!

ஆதிகாலத்திலே நமது தமிழகத்தில் பல செந்தமிழ்ப் புலவர்கள் வாழ்ந்திருந்தார்கள். பெரும்பாலும் இவர்கள் வறுமையால் வாடினார்கள். காரணம் என்னவென்றால், கல்விச் செல்வம், பொருட்செல்வம் எனப்பிரித்து, பொருட்செல்வம் நிலையில்லாமல் அழிவது, கல்விச்செல்வம் அழிவுறாமல் என்றும் நிலைத்திருப்பது, எனப் பாகுபாடு செய்து பொருட் செல்வத்தை அலட்சியமாகக் கருதிவந்தார்கள்.

பொருட் செல்வத்தை லக்ஷ்மியாகவும், கல்விச் செல்வத்தை சரஸ்வதியாகவும் பாவித்து, மாமி மருமகளாகிய இருவரும் ஓரிடத்தில் ஒற்றுமையுடனிருப்பது துர்லபம், ஆகையினால் தான் புலவர்கள் தரித்திரர்களாயிருக்கின்றனர் என்று கற்பிப்போருமுண்டு.

'பொருளை ஈட்டலும் துன்பம், ஈட்டிய ஒண்பொருளைக் காத்தலுமாங்கே கடுந் துன்பம்' என்பதுபோல், பொருளைத் தேடிப் பாதுகாப்பவரிடத்திலுங்கூட, பொருள் நிலையில்லாமற் போய்விடுகிறது, அப்படியிருக்க, பொருளை வெறுக்கும் புலவர்களிடம் அது எப்படி நிலைத்து நிற்கும்?

இத்தகைய புலவர் கூட்டத்திலே. "இம்மென்னும் முன்னே, எழுநூறும், எண்ணூறும் அம் என்றால் ஆயிரம் பாட்டாகாதா?' எனக் கூறும்புலவர் ஒருவர் இருந்தார். இவர் மிகுந்த கல்விச் செருக்குடையவர். இவரைத் தான் தரித்திரம் அதிகமாகப் பற்றிக் கொண்டது.

அவரது 'சொற்கொண்ட பாவின்' சுவையை அறிந்து சன்மானம் அளிப்பவர் யாருமில்லை. தரித்திரம் அவரை மிகவும் வாட்டியது. பல நாட்கள் பட்டினிகிடந்தார்.

கவிக் களஞ்சியமாக விளங்கிய இந்தப் புலவர் பஞ்

சமர பாதகங்களில் ஒன்ரு கிய களவைச் செய்து, பசிப் பிணியை அகற்ற நினைத் தார்.

"பொது மக்களின் நல் வாழ்க்கையின் லட்சியத்திற் காகவே, கவிகள் பாடினேம். ஆகையினல், பொது மக்க ளின் பொருளைக் களவு செய் தல் கூடாது. மக்களிடம் கடமை வாங்கும் மன்னனின் பொருளை களவு செய்வதால் பாதகமொன்றுமில்லை" எனத் தீர்மானித்து அவர் அரண்மனைக்குச் சென்ருர்.

புலவர் அரசனின் பள்ளி அறைக்குள் பகலிலேயே சென்று சப்ரமஞ்சத்தின் அடியில் ஒளிந்துகொண் டார். அயர்ந்த நித்திரை யில் அரசியின் ஆபரணங் களை அபகரிக்கவேண்டு மென்பதே அவர் அவா.

ஆதித்தன் அஸ்தமித் தான். இரவு வேளையும் வந் தது. இரவு போஜனத் திற்குப் பின் அரசன் பள்ளி அறைக்கு வந்தான். அர சன் மிகுந்த சிவபக்தியுள்ள வன். நாள்தோறும் அவன் தூங்குவதற்கு முன் சுயமா கவே சிவபெருமான்மீது ஒரு அருட்கவி பாடுவது வழக்கம். அன்றும் அவ் வாறே பாட ஆரம்பித்தான்.

"தலையில் இரந்துண்பான்
தன் உடலில்பாதி
மலைமகளுக்கு ஈந்து
மகிழ்வான்—உலையில்"

என்ற இரண்டாவது அடிக் குப் பினனர் அவனுக்குப் பாட்டு வரவில்லை. அதற் காக அவன் தான் பாடிய இரண்டாவது அடியிலுள்ள கடைசிவார்த்தையாகிற "உலையில்" என்பதை உலையில் — உலையில்—உலை யில் என்று சொல்லிக் கொண்டே இருந்தான்.

நள்ளிரவாகியும் உலையில்-உலையில் என்று சொல் லிக் கொண்டேதானிருந் தான்.

சப்ரமஞ்சத்தடியில் ஒளிந் திருந்த புலவர் பார்த்தார். "கவி பூர்த்தியாகாததால் அரசன் நித்திரைகொள்ளப் போவதில்லை: விடியுமட்டும் உலையில்—உலையில் என்று தான் சொல்லிக் கொண் டிருப்பான். காலையில் நமது உயிருக்கு உலைவைத்தாலும் வைப்பான். அந்தத் தண் டனை இப்போதே கிடைத் தாலும் பரவாயில்லை, கவி யைத் தான் பூர்த்திசெய்து கொடுப்போமே" என மனம் துணிந்து அரசன் உலையில் என்று சொன்ன

போது புலவர் "இரும்புவண மேனியனே என்றுலோ, என்ற மூன்ருவது அடியை ஆரம்பித்துக் கொடுத்தார். உலையில் காய்ச்சப்பட்ட இரும்பு எப்படி ஜகஜ்ஜோதியாயிருக்கிறதோ அது போன்ற மேனியையுடைய சிவபெருமானே! என்று சொன்னுல் என்ன? என்பது தான் அந்த மூன்ருவது அடியின் கருத்து.

அரசனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. "ஆமாம், திருப்புவன நாதன் திறம்" என நாலாவது அடியைப் பாடிக் கவியைப் பூர்த்திசெய்தான் அரசன். அரசன் சப்ரமஞ்சத்திலிருந்து கிழே குதித்தான். புலவரை வெளியே வரச் சொன்ஞன்.

நடந்த விருத்தாந்தங்களை விசாரித்தான். புலவரும் தரித்திரத்தால் தான் களவு செய்யவந்ததாக உள்ளதை உள்ளபடி உரைத்தார்.

அரசனும் அவரது கவித்திறமையைமெச்சி அவருக்கு ஏராளமான செல்வங்களை அளித்தார்.

தலையில் இரந்துண்பான்
தன்உடலில் பாதி
மலைமகட்கீந்து மகிழ்வான் உலையில்
"இரும்புவண மேனியனே
என்ருலோ"
'ஆமாம்' திருப்புவன நாதன்
திறம்.

போகும் அழகும், வரும் அழகும்!

தமக்கை, தங்கைகளாகிய லக்ஷ்மியும், மூத்தாளும் ஒவ்வொருவரும் தான், தான் அழகு மிகுந்தவளெனச் சச்சரவு செய்து கொண்டிருந்தார்கள்.

பிறகு பேரறிஞர் ஒருவரிடம் இருவரும் வந்து தங்களில் மிகுந்த அழகு யார் என்று தீர்ப்பு கூறு மாறு கேட்டார்கள்.

இயற்கையிலேயே லக்ஷ்மிதான் மிகுந்த அழகு டையவள் என்பது எல்லோருக்கும்தெரியுமே! ஆனால் அவர் உண்மையை உரைத்தால் மூத்தாளின் கோபத் திற்கு ஆளாக நேரிடும். ஒருவேளை மூத்தாளே அவரை வந்து பீடித்தாலும் பீடிக்கவும் கூடும்.

இயற்கைக்கு மாருக மூத்தாளை அழகுடையவள் என்று கூறினுல் லக்ஷ்மி இவரை விட்டு விலகிவிடுவ தால் இவர் தரித்திரத்திற்குள்ளாகலாம் என இரு தலைக்கொள்ளி போல் தத்தளித்தார்.

பின் தீர்ப்புக் கூறுவதில் ஒரு முடிவுக்கு வந்தவ ராய் இருவருக்கும் ஒரு பரீட்சை நடத்தினர். ஒரு குறிப்பிட்ட இடத்தைக் காண்பித்து, தனித்தனியாக ஒவ்வொருவரும் சென்று திரும்பவேண்டும் என்று அவர் கூறியபடி இருவரும் அந்த இடத்திற்குச் சென்று திரும்பினார்கள்.

அவர் மூத்தாளைப் பாரத்து, 'நீ போகும் போது மிகுந்த அழகு தோன்றுகிறது!' என்றும், இளையவ ளாகிய லக்ஷ்மியைப் பார்த்து 'நீ வரும்பொழுது மிகுந்த அழகு தோன்றுகிறது' என்றும் உள்ளதை உள்ளபடி கூறினர்.

அவருடைய சாமர்த்தியமான தீர்ப்பினுல் அவர் கள் இருவர்களுடைய கோபத்திற்கும் ஆளாகாமல் அவர் தப்பியதோடு தமக்கை தங்கைகளாகிய இரு வரும் திருப்தியோடு சென்றார்கள்.

34-ம் பக்கத்து 'இவன் யாருக்கு' விடைகள்

1. கடல் 2. பேன் 3. பல்

தலைப்பைக்கண்டு திடுக்கிடவேண்டாம். ஐயாயிரம் கோடி வருஷங்களுக்குப்பின்னரே நடக்கும் சம்பவம் இது.

சந்திர சூரியர் அழிவதால் பூமி அழிவுறும்

இந்த உலகம் இன்று இருப்பதுபோல் என்றும் இருக்குமா? அல்லது இதற்கும் அழிவு ஏற்படுமா? அப்படி அழிவு ஏற்படுமானால் அழிவுறும் சின்னங்கள் யாவை? பலவிதப் பிரளயங்களைக் கற்பித்து சிற்சில காலவரம்புகளை நிர்ணயித்தும், உலகம் அழிவுறப் போவதாக, மதநூல்களில் கூறப்பட்டிருக்கிறதென பற்பல மதத்தினரும் கூறுகிறார்கள். இதில் உண்மை இருக்கிறதா?

அனுமானப் பிரமாணங்களோடுகூடிய வான ஆராய்ச்சியிலிருந்து இவ்விதம் உலகம் அழியும் என்பதற்கு ஆதாரங்கள் ஏதாவது உள்ளனவா?

வானசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் உலகம் எவ்விதத்திலும் அழிந்தே தீரும் என்பதற்கு ஆதார பூர்வமான ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள்.

இப்பொழுது பூமியானது நிரந்தரமாய் ஒரு குறிப்பிட்ட வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக்கொண்டிருக்

கிறது. அலைகள் பிரம்மாண்டமாய் மோதுவதினாலே பூமி தன்னைத் தானே சுற்றும் வேகம் குறையலாம். அப்போது சந்திரன் இப்போதிருக்கும் தூரத்திலிருந்து வெகு தொலைவிற்கு எட்டிப்போய்விடும், பூமி தன்னைத் தானே சுற்றுவதற்கு 24—மணி நேரம் (அதாவது ஒருநாள்) பிடிக்கிறது. அலைகளின் மோதுதலினால் ஒருநாளில் சுற்றும் வேகம் மிக்வும் குறைந்து, பூமி தன்னைத்தானே சுற்றி முடிப்பதற்கு ஒரு மாதம்வரை நீடிப்பதால் ஒருமாதம் ஒரு நாளாகத் தோன்றும்.

ஐயாயிரம்கோடி வருஷங்களுக்குப் பின்னால் பூமிக்கு இவ்வித மாறுதல் ஏற்படலாமென வான சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் முடிவிற்கு வந்துள்ளார்கள்.

இப்பொழுது பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் இரண்டு லட்சத்து முப்பத்தெண்ணாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று மைல்களாகும்.

பூமி சுற்றும் வேகம் குறையும், மேற்கூறிய அந்தக் காலத்தில் சந்திரன் பூமியிலிருந்து மூன்றுலட்சத்து நாற்பதாயிரம் மைல்களாக தூரம் அதிகரித்துவிடுகிறது.

பூமியில், சந்திரிகையின் மூலம் பிரம்மாண்டமான அலைகள் தோன்றி பூமி தன்னைத் தானே சுற்றும் வேகத்தைக் குறைக்கிறது. ஒரு நாளில் சுற்றுவதை ஒருமாதம் வரை நீடிக்கச் செய்கிறது.

ஆனால் வெப்பம் மிகுந்த சூரியப் பிரகாசமானது அலையின் வேகத்தை இன்னும் சற்று அதிகமாக்குவதால் பூமியின் சுற்றுவேகமும் அதிகரிக்கிறது. இவ்விதம் சூரிய சந்திரனால் தாக்கப்படும் அலைகளினால் பூமி சுற்றிவரும் வேகம் நிரந்தரம் பெருமல் கூடுவதும் குறைவதுமாகிய பலதரப்பட்ட வேகத்திற்கு உள்ளாகிறது.

மற்ெருரு விதம் எப்படியென்ருல் பூமி சுற்றிவரும் திசையை நோக்கியே அலைகளைச் சந்திரன் அதிவேகமாய் தாக்கினல் பூமிக்கு சுற்றும் வேகமும் அதிகரிக்கும்.

இவ்விதம் அதிவேகமரய்ப் பூமி சுற்றும்பொழுது சந்திரன் பல லட்சம் மைல் தூரத்திலிருந்து பூமிக்கு வெகு சமீபமாக (அதாவது பதினேராயிரம் மைல் தூரத்திற்கு) வந்துவிடும்.

இம் மாதிரி சந்திரன் பூமிக்கு இவ்வளவு சமீபமாக நெருங்கிவருவதன் நிமித்தம் அலைகளும் காற்றும் அதி உத்வேகம் கொள்வதால் சந்திரன் வெடித்துப் பல பாகங்களாகச் சிதறி பூமியைச் சுற்றியே சுற்றிக்கொண்டு வரும்.

இவ்வாறு சந்திரன் வெடித்துப் பல பாகங்களாகச் சிதறுவதன் மூலம் பூமியிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் ஆபத்து நேரிடுவதல்லாமல் பூமியில் ஜலப் பிரளயமும் பூகம்பமும் சம்பவிக்கும். இதுவன்றி பூமி வரையறைவின்றிச் சென்று சூரியனைச் சுற்றியுள்ள வேறு கோளங்களில் எவற்றிலாவது ஒன்றில் மோதி பல பாகங்களாக வெடித்து அழிவுறும். பூமிக்கு ஏற்படும் இத்தகைய அழிவுகளைத் தவிர வேறுவிதமாகவும் அழிவுகள் ஏற்படலாமென வானசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

எப்படியென்ருல் சூரியனே சக்தியிழந்து அழிந்து போவதனல் பூமிக்கும் அழிவு ஏற்படும். சூரியன் எவ்விதம் அழிவுறும் என்பதை கவனிப்போம்.

சூரியனுக்கு இயற்கையிலே உள்ள வெப்பம் 343,0ʋ0000000000000000000 கிலோ வாட்டுகளாகும். இவற்றில் பூமிக்குக் கிடைக்கும் வெப்பத்தின் அளவு 170,000000000000 கிலோ வாட்டுகளாகும்.

பூமியில், மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களுக்குக் காரணமாகவும் அவற்றை இயங்கச்

செய்யும் சக்தி பொருந்தியதுமாகிய சூரிய வெப்பமானது தணிந்து சூரியன் ஒளி இழந்து, செயலற்று போகுமாயின் உலகிலே, காற்று அறவே நின்றுவிடும். நதிகளிலே நீரோட்டமிராது; சமுத்திரத்தின் நீரும் உறைந்து கட்டியாய் விடும். உலகிலுள்ள ஜீவராசிகள் அனைத்தும் பனிக் கட்டியால் மூடப்பட்டு மடிந்துபோகும்.

பல கோடிக்கணக்கான வருஷங்களாக நிரந்தர வெப்பமான ஒளியோடு கூடிய சூரியன் இவ்விதம் எவ்வாறு ஒளியிழந்து போகுமென்பதைக் கவனிப்போம்.

நமது பூமியைச் சுற்றியுள்ள கிரகமண்டலத்தில் சூரியன் ஒரு முக்கிய கிரகமாகும். இதுபோன்றே அகண்டாகார வியாபகத்தில் அனேக கிரக மண்டலங்களுமிருக்கின்றன. ஆங்காங்கே கோடிக்கணக்கான சூரியன்களுமிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் நமது சூரியனும்.

அணுசக்தியாகவே ஒளியுடன் வெப்பம் சூரியனிடத்திலிருந்து தோன்றுகிறது.

சூரியனிடத்திலிருக்கும் ஜலவாயு மூலமாகவே ஒளியும் வெப்பமும் உதயமாகிறது.

சூரியனிலுள்ள ஜலவாயுவினால் உற்பத்தியாகும் அணுசக்தி மேலும் மேலும் அதிக சக்தியோடு தோன்றிக் கொண்டே இருப்பதனால் சூரிய ஒளியும் வெப்பமும் படிப் படியாக அதிகரித்துக்கொண்டே வருகிறது.

உதாரணமாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்புள்ள சூரிய ஒளியையும் வெப்பத்தைக் காட்டிலும் இப்போது சூரிய ஒளியும், வெப்பமும் பன்மடங்கு அதிகரித்துள்ளது.

இவ்வாறே இன்னும் சூரியனிடமிருந்து ஒளியும், வெப்பமும் அதிகரித்துக்கொண்டே போகும்.

சூரியனிலுள்ள ஜலவாயு பூரணமாக அற்றுப்போகும் காலத்தில் சூரியன் ஆயிரமடங்கு அதிகமான ஒளியோடும் வெப்பத்தோடும் தோன்றும்.

இப்பொழுது தோன்றும் சூரியனின் சாதாரண வெப்பத்தினலே பூமியும் சமுத்திரமும் எவ்வளவோ உஷ்ணமடைகிறது.

அப்படியிருக்க சூரியன் இன்னும் ஆயிரம் மடங்கு அதிகமான ஒளியுடனும், வெப்பத்துடனும் அதி உத்கிருஷ்டத்தோடு தகிக்கும்பொழுது பூமிஅப்படியே அக்னி மயமாக மாறிவிடும்.!

சமுத்திர ஜலம் கொதித்து எழும்பும். இத்தகைய தகிக்கும் வெப்பத்திலே, ஜீவராசிகள் பெரும்பாலும் நசித்துப்போகும்.

சூரியனிலுள்ள ஜலவாயு பூரணமாய் அற்றுப்போன பின்னர், சூரியன் ஒளியையும் வெப்பத்தையும் இழந்து செயலற்றுப்போகிறது.

சூரியனிடமிருந்து வெப்பத்தைப் பெற்று பருவகால மடையும் பூமிக்கு சூரிய வெப்பம் பூரணமாக இல்லாததால் பூமி அதிசீதளமடைகிறது.

மேலே கூறிய சூரியனின் முடிவான உத்கிருஷ்ட வெப்பத்திலே, மடியாமல் எஞ்சியுள்ள ஜீவராசிகள் பூமி அதிசீதளம் அடையுங் காலத்திலே பூரணமாய் நசித்துவிடுகின்றன. இவ்விதம் சூரியன் அழிவுறும் நிலை ஏற்படுவதற்கு ஆயிரம் கோடி ஆண்டுகளாகும்.

சூரியன் உள்பட சூரியனைப் போன்றே ஒளிகொடுக்கும் நக்ஷத்திரங்களாகிய கோடானு கோடி சூரியன்கள் யாவுமே திடீரென வெடிக்கும். அவவாறே நமது சூரியனும் என்றைக்காவது ஒரு நாளைக்கு வெடிக்கலாம். அந்தக் காலத்திலும் பூமி மிகுந்த உஷ்ணமடைந்து பூமியும் அழிவதோடு பூமியிலுள்ள சகல ஜீவராசிகளும் அழிவுறும். இப்படியும் பூமி அழிவது ஒருவிதம்.

இவ்விதம் பூமி திடீரென அழியாமல் மேற்கூறிய வாறு பூமியின் அழிவு நீடிக்குமானல் நமது பூமியில் விஞ்ஞானம் அதி உன்னத நிலையில் விருத்தியடைந்து சுக்கிரன், செவ்வாய் போன்ற கிரகங்களுக்கு அகாண்டாகார வியாபகத்தில் சஞ்சரிக்கத் தகுந்த விமானங்களையும் இதர சாதனங்களையும் சிருஷ்டித்து மற்ற கிரகங்களுக்குச் சென்று அழியும் பூமியோடு நாமும் அழியாமல் தப்பித்துக் கொள்வதோடு அங்கே சௌக்கியமாயும் வாழலாம்.

இந்த அகண்டாகார வியாபகத்தில் நமது பூமியைச் சுற்றிலுமுள்ள கிரகமண்டலங்களின் அமைப்புப்போல், அகண்டாகார வியாபகத்தில் வெகு தூரத்தில் நம் கண்ணுக்குத் தோன்றும் 'பால் வெளி'த் தோற்றம் வரைக்கும் அடுக்கடுக்காக பத்து லட்சம் கிரக மண்டலங்கள் இருக்கின்றன.

இவ்விதம் பத்து லட்சம் கிரக மண்டலங்கள் இருக்கும் போது, பூமியாகிய ஒரு சிறு கிரகம் அழிந்துபோவது, ஒரு ஈ அல்லது ஒரு எறும்பு நசிப்பது போன்றேதான்.

இந்தப் பூமியைப்போன்று மனிதன் வாழத்தகுந்த பத்துலட்ச கிரகம் மண்டலங்களில் எவ்வளவோ கிரகங்கள் இருப்பதனால் பூமி அழிவதைப் பற்றி சற்றேனும் கவலைப் பட வேண்டியதில்லை.

மேலே குறிப்பிட்டபடி கிரகங்களுக்கு யாத்திரை செய்யத்தகுந்த விமானங்களும் இதர சாதனங்களும் கிடைத்து விட்டால் வேறு கிரகங்களுக்குச் சென்று அங்கே சுகமாக வாழலாம்!

யவத்மான் என்ற ஊரில் வாழும் புகழ்பெற்ற வேட்டைக்காரரான பாடண்கர் என்பவர், தம்முடைய அநுபவத்திலிருந்து எழுதிய கட்டுரை இது.

காட்டுக் குளத்திலே

●

கோடையில் எங்கும் நீர் வற்றிப் போகும்பொழுது, காட்டில் மூன்று நான்கு மைல்களுக்கிடையே ஏதாவது ஒரு குளத்தில் மட்டுமே தண்ணீர் இருக்கும். காட்டில் வேலை செய்பவர்கள், ஊற்று இருக்கும் இடமாய் பார்த்து வெட்டினால் நீர் கிடைக்கும். அதுவும் தவிர, பொதுவாக மூன்று மைல்களுக்கு நடுவே ஒரு குளத்தைத்தான் காணலாம். அந்த அந்த வட்டாரத்திலுள்ள காட்டு விலங்குகள் அத்தனையும் இந்த ஒரு குளத்துக்குத்தான் தண்ணீர் குடிக்க வரும். இப்படி ஒரு குளத்திலே அவை நீர் அருந்தும்போது எந்த விலங்குக்கு எப்போது ஆபத்து வரும் என்று சொல்ல முடியாது. ஆகையால் அவை தொலைவிலிருந்து ஜாக்கிரதையாகவும் மெதுவாகவும் அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டே குளத்துக்கு வரும்.

விலங்குகளுக்கு இயற்கையிலே அமைந்த இந்தக் குணத்தை நாம் ஆராய விரும்பினால், ஒரு பெரிய மரம் அல்லது அடர்ந்த புதருக்குப் பின்னால் மறைந்து உட்கார வேண்டும். விலங்குகள் ஒரு நாளைக்கு இரண்டே தடவை நீர் குடிக்கும். காலையில் சூரியன் உதிப்பதற்கு முன்பும்

மாலையில் சூரியன் மறைவதற்கு முன்பும். ஆகவே நாம் மாலையில் சூரியன் அஸ்தமிப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு இப்படி மறைந்து உட்கார்ந்தால், ஒவ்வொரு விலங்கும் வந்து தண்ணீர் குடிக்கும் காட்சியைக் காணலாம்.

எல்லா மிருகங்களுக்கும் முன்னால் தண்ணீர் குடிக்கும் மரியாதை குரங்குக்குத்தான் உண்டு. குரங்குகள் மரம் மரமாகத் தாவிக்கொண்டே வரும். கூட்டம் கூட்டமாக வந்த இந்தக் குரங்குகள் அருகில் எங்கும் ஆபத்து இல்லை என்று கண்டதும், நீர் அருந்திவிட்டுப் பக்கத்து மரங் களிலே போய் உட்காரும்.

கதிரவன் மறைவதற்கு முக்கால் மணிக்கு முன்னால் 'மியாவ்' என்று ஒரு சத்தம் கேட்கும். சற்று நேரத் துக்குப் பிறகு ஓர் ஆண் மயில் வரும்; அதனோடு பெண் மயில்களும் கூட்டமாக இருக்கும். இப்படி ஒவ்வொரு கூட்டத்துக்கும் ஓர் ஆண் மயில் இருக்கும். இந்த மயில் களெல்லாம் படபடவென்று சிறகடித்துக்கொண்டு, குளத் துக்குப் பக்கத்திலுள்ள மரக் கிளைகளில் வந்து உட்காரு வதை நாம் காணலாம். முதலில் ஆண் மயில் இங்கு மங்கும் பார்த்துக்கொண்டே குளத்தில் இறங்கி நீர் குடிக்கும். அது பறந்து வந்து மரக்கிளையில் அமர்ந்ததும் மயில்கள் ஒவ்வொன்றுகப் போய்த் தண்ணீர் குடிக்கும். ஒரு மயில் நீர் அருந்தும்போது மற்றவை காவல் இருக் கும். எல்லாம் நீர் குடித்த பிறகு, மீண்டும் படபடவென்று சிறகடித்துக்கொண்டு போய்விடும்.

அடுத்தபடி, விலங்குகளுக்குள்ளே தந்திரசாலி என்று பெயரெடுத்த குள்ளநரி அங்கே வரும். மயில் போன பதினைந்து நிமிஷங்களுக்குள்ளே இது வந்துவிடும். இது நீர்க்கரைக்கு வந்ததும் உடனே தண்ணீர் குடிப் பதில்லை. தான் வந்த திசைக்கு மாறுன திசையில்

பதினைந்தடி தூரம் ஓடும். தான் தண்ணீர் குடித்துப் போய்விட்டதாகப் பிறருக்குக் காண்பிக்க வேண்டும் என்பது இதன் எண்ணம். அங்கிருந்தே ஒரு முறை நீர்க் கரையைப் பார்வையிட்ட பின்பு இது தண்ணீர் குடிக்க வரும். இதனுடன் பெண் நரியும் இருக்கும். ஒன்று நீர் அருந்தும் போது மற்றொன்று காவல் இருக்கும்.

நரிக்கு அடுத்தபடி வருகிறவை காட்டுப் பன்றிகள். இவை பெருங் கூட்டமாக வரும். ஓர் ஆண் பன்றிக்குப் பின்னால் பல பெண் பன்றிகளும் குட்டிகளும் இருக்கும். இவை வரும்போது இலைகள் சடசடவென்று ஓசைப்படும். நீர்க்கரைக்கு வந்ததும் ஐந்தாறு நிமிஷம் இவை சும்மா அக்கம்பக்கம் பார்த்துவிட்டுப் பிறகு எல்லாம் சேர்ந்து தண்ணீர் குடிக்கும். பிறகு முதலில் ஆண் பன்றியும் பின்னால் பெண் பன்றிகளும் குட்டிகளுமாகத் திரும்பும். சடசடவென்ற ஓசையோடு இந்தக் கூட்டம் மறையும்.

காட்டுப் பன்றிகள்போன சிறிது நேரத்துக்கெல்லாம் காட்டு ராஜாவான புலி வரும். பன்றிகளின் சடசட

வோசையைக் கொண்டோ, மயில்களில் படபட வோசை யைக் கொண்டோ புலியின் வருகையை முன்னதாகவே கண்டுபிடித்துவிடலாம் என்றாலும், அந்த வருகையை நமக்குக் கட்டாயமாக முன்னால் அறிவிப்பவை குரங்கு களே. அவற்றின் கண்களுக்குத்தான் முதலில் புலி தென் படும். புலியைக் கண்டதுமே அவை 'காக்காக்' என்று சத்தம் போட்டுக்கொண்டு மரங்களில் மேலும் கீழுமாக உலாவும். புலி அருகில் வரும்போது இந்தச் சத்தமும் உலாத்தலும் நின்றுவிடும். புலி தண்ணீர் குடித்து விட்டுப் போகும் வரைக்கும் குரங்குகள் மரங்களிலே பொம்மைபோல உட்கார்ந்திருக்கும். புலி தொலைவி லிருந்தே நீர்க்கரையைப் பார்வையிடும். வலது புறமும் இடது புறமும் பார்த்துவிட்டு மெதுவாகத் தண்ணீரில் வாயை வைக்கும். முன் கால்கள் இரண்டையும் குளத்துப் பாறைமேல் வைத்து அது 'மசக், மசக்' என்று பூனையைப் போல் தண்ணீர் குடிக்கும். தாகம் தீர்ந்ததும் அது ஒரு கணங்கூட அங்கே நிற்காமல் பாய்ந்து மறைந்துவிடும். அதுமட்டும் அதற்குப் பிறகும் அங்கே மறைந்து உட் கார்ந்ததானால் நீர்க்கரையிலேயே அதற்கு ஏராளமான இரை கிடைக்கலாமே! ஆனால் இயற்கை மற்ற விலங்கு களைக் காப்பதற்காகப் புலிக்கு இந்தச் சுபாவத்தைக் கொடுத்திருக்கிறது. எந்தப் புலியும் நீர் குடித்த பிறகு அங்கே ஒரு கணமும் தங்காது. புலி போய்விட்ட பிறகு புள்ளி மான்கள் வரும்.

முதல் முதலில் தண்ணீர் குடிக்க வரும் மயில் ஏதாவது சந்தேகம் கொண்டு திரும்பிவிட்டால் பிறகு அந்த நீர்க்கரைக்கு எந்த விலங்கும் வராது. எனவே, காட்டுக் குளக்கரையில் எல்லா விலங்குகளையும் ஆபத் தின்றிக் காக்கும் பொறுப்பை மயில் வகிக்கிறது. மயிலின் வருகையைப் பார்த்துக் கொண்டுதான் மற்ற விலங்குகள் யாவும் தண்ணீர் குடிக்க வரும்.

மர்மங்களைப் படிப்படியாக அறிந்து கொள்வதற்கு எவ்வளவு அபார திற மையும் புத்தி தீட்சண்யமும் தேவை என்பதை இக்கதை விளக்கும்.

துப்பறியும் தொழிலுக்கு நுட்ப அறிவு தேவை

●

சந்திரசேகரும், கலியாணசுந்தரமும் பள்ளித் தோழர்கள். இருவரும் உயர் நிலைப் பள்ளி, கல்லூரி இவற்றில் படிப்பை முடித்த பின்னர், கலியாணசுந்தரத்திற்கு சர்க்கார் தாலுக்கா ஆபீஸில் குமாஸ்தா உத்தியோகமும், சந்திரசேகருக்கு இரகசிய போலீஸ் துப்பறியும் இலாக்காவிலும் உத்தியோகம் கிடைத்தது.

நாளடைவில், எதேச்சையாக ஒரே நகரத்திற்கு இவர்கள் உத்தியோகத் துறையில் மாற்றப்பட்டனர்.

ஒரே நகரில் இருவரும் வெவ்வேறு துறையில் அலுவல் பார்க்க நேரிட்டதால், அடிக்கடி பழைய பள்ளித் தோழமையை மறவாது இருவரும் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போய்வந்து க்ஷேம லாபங்களை அறிந்துகொள்வது சகஜமாயிருந்தது.

சந்திரசேகர் தன் துப்பறியும் வேலையில் மிகவும் ஊக்கமும் கவனம் செலுத்திவந்ததால் ஒரு பரபரப்பான மர்மம் நிறைந்த வழக்கில் புலன்களை திறமையாகத் துப்பறிந்து, வெற்றியடைந்து அதனால் உத்தியோக உயர்வும் அடைந்தான். இதற்கான மெச்சத் தகுந்த பரிசுகளும் பெற்றான்.

இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை நண்பனுடன் பகிர்ந்து கொள்ளவேண்டிய ஆவலோடு நண்பன் கலியாணசுந்தரத்தின்

வீட்டிற்குச் சென்று தன் உத்தியோக உயர்வு பற்றியும் தன்னுடைய துப்புத் திறமையினுல் தானடைந்த பரிசைப் பற்றியும் கூறி ஆனந்த மடைந்தான் சந்திரசேகர்.

நண்பர்கள் ஆனந்தத்தை பகிர்ந்துகொண்டதில் பொழுது போனதே தெரியவில்லே. இரவு வெகு நேரமாய்விட்டது. நண்பனிடம் விடைபெற்றுக்கொள்ளும் போது, சந்திரசேகர் கலியாண சுந்தரத்தைப் பார்த்து, 'ஏனப்பா, ஊரிலிருந்து ஏதாவது காகிதம் வந்ததா? அங்கே உன்பெற்ருேர்கள் எல்லோரும் சௌவுக்கியமா?' என்று கேட்டான்.

கலியாணசுந்தரம் 'இல்லே,சேகர், காகிதம் வந்து வெகு நாளாயிற்று. அங்கே எல்லோரும் சௌவுக்கியம் தான் என்று நினேக்கிறேன் நாளேக்கு கடிதமெழுதலாமென்றிருக்கிறேன்' என்று கூறிஞன். பிறகு சந்திரசேகர் தன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

அடுத்த நாள் காலே தன் பெற்ருேர்களுக்குக் கடிதம் எழுதி அதைத் தபாலில் சேர்த்துவிட்டு தன் இருப்பிடத்திற்குத் திரும்பும் போது, கலியாணசுந்தரம் சேகரைப் பற்றியும், அவன் அடைந்த உத்தியோக உயர்வு, பரிசு இவற்றைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே வந்தான்.

"துப்பறிவது என்ன? பிரம்மவித்தையா? போகிற இடங்களில் விசாரித்தால் தானே எல்லாம் அம்பலமாகப் போகிறது. ஊர் ஊராகத் தமாஷாய்ச் சுற்றிவருவதில் என்ன சிரமமிருக்கிறது? இதற்கென்ன பரிசு! உத்தியோக உயர்வு! உம்......உம். நம்ப தலேயிலெழுத்து சதா தாலுக்கா கச்சேரி, தஸ்தாவேஜு, கட்டுடன் அழவேண்டியதிருக்கிறது. உட்கார்ந்த இடத்திலேவே சிலே போல் இருந்துகொண்டு, என்ன பிழைப்பு இது!" என்று இவ்வாறு யோசித்துகொண்டே வரும்போது, தற்செயலாய் நண்பன் சேகர் எதிர்ப்பட்டான்.

உடனே கலியாணசுந்தரம், சேகர்!, 'குட்மார்னிங்! உன்னேப் பற்றித்தானப்பா நினேத்துக்கொண்டு வருகிறேன். உனக்கு நூறு வயது'!

சேகர் "என்னப்பா என்னே பற்றியே நினேத்துக்கொண்டு வரும்படி என்ன நேர்ந்துவிட்டது?"

ஒன்றுமில்லை. உன் உத்தியோகம் என்ன? அவ்வளவு கடினமானதா? இதற்கு அவ்வளவு திறமையும், சாமர்த்தியமும் தேவையா? இதற்குப் பரிசு வேறு? உத்தியோக உயர்வு வேறு? என்றுதான் சிந்தித்துக்கொண்டே வந்தேன்'' என்று உள்ளதை உள்ளவாறே உளறிக்கொட்டினன் கலியாணசுந்தரம்.

''துப்பறியும் இலாக்காவின் வேலை நீ நினைப்பதுபோல் அவ்வளவு சுலபமானதல்ல! சுந்தரம், இந்த இலாக்காவில் மிகவும் சாமர்த்தியமாகவும், முற்போக்காகவுமிருந்தால் தான் முன்னேற்றமடையலாம்.''

மேலும் சேகர் சுந்தரத்தைப் பார்த்து, நீ ஜோதிஷம், ஆருடம் இவற்றைப் பற்றிக்கேட்டிருக்கலாம். அறிவைச் செலுத்திக் கூறுவதே ஆருடம் என்பது. அதே போன்றுதான், இந்த உத்தியோகத்தில் நுண்ணறிவைச் செலுத்தினல்தான் மர்மமான துப்புகளையெல்லாம் துலக்கி, வழக்குகளை வெற்றியாக்க முடியும். ஏதோ நீ நினைப்பதுபோல் இந்த இலாக்கா வெறும் ஜாலவித்தை புரியும் இடமல்ல! என்று அழுத்தமாக எடுத்துரைத்தான் துப்பறியும் இலாக்காவின் பெருமைகளை.

இதையெல்லாம் கேலி முகபாவனையுடன் கேட்டுக்கொண்டிருந்த சுந்தரம், சேகரை ''அப்படியானல், இப்போது தான் எங்கிருந்து வருகிறேன் என்று சொல், பார்ப்போம்'' என்றான்.

சேகர் தனக்குள் சிரித்துக்கொண்டே, இதென்ன பிரமாதம், தபாலாபீஸிலிருந்து வந்துகொண்டிருக்கிருய்'' என்ருன்.

''ஓகோ, நான் நேற்றிரவு ஊருக்குக் கடிதமெழுதவேண்டுமென்று உன்னிடம் சொல்லிக்கொண்டிருந்தேன், அதை வைத்து சொல்லுகிருய்'' என்ருன் சுந்தரம்-

''நான் கூறவேண்டிய துப்பு இதோடு முடிந்துவிட்வில்லை. நீ காகிதம் எழுதப்போகிறேன் என்று சொன்னதால் மட்டும் நான் சொல்லிவிட்வில்லை. அதேயேவைத்துக்கொண்டு, நீ தபாலாபீஸிலிருந்து தான் வருகிருய் என்று திட்டமாய்க் கூறிவிடமுடியாது. நான் உனக்குக்கூறியது துப்பறியும் வேலையில் ஒரு சிறிய அம்சம் தான்'' என்ருன்.

"அப்படியானல், நான் தபாலாபீஸிலிருந்துதான் வருகிறேன் என்று எப்படி திட்டமாய்க் கூறினய்.

தபாலாபீஸ் கட்டிடத்தின் முன்னல் செம்மண்ணை நன்ருக கெட்டியாகப் போடாமலிருப்பதால் அங்கே செம்மண் புழுதி நிரம்பியிருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அந்தச் செம்மண் புழுதி உன் கால்களில் நிறைய ஏறியிருக்கிறது. கை விரல்களிலும் மசிக் கறையும் பிடித்திருக்கிறது. பின் வேறென்ன வேண்டும் நீ தபாலாபீஸிலிருந்துதான் வருகிருய் என்று திட்டமாய்க் கூறுவதற்கு? "இது ஒரு பெரிய காரியமில்லை, சுந்தரம். என்னிடம் யாரவது ஒரு பொருளைக் கொடுத்தால் அந்தப் பொருளுக்குச் சொந்தக்காரனின் குணதிசயங்கள் எல்லாவற்றையும் அப்படியே என்னல் கூறமுடியும்" என்று சொன்னன்-

உடனே "அப்படியானல், எங்கே சொல் பார்க்கலாம்' என்று தன் ஜேபியிலிருந்த ஒரு 'பாக்கெட் கடிகாரத்தை எடுத்துக்கொடுத்தான். "இது நீ விலைகொடுத்து வாங்கின கடிகாரமல்ல. உன் தகப்பனருடைய கடிகாரம் இது. உனது தகப்பனர் இறந்த பின்னர் உன் தமையனுக்குக் கிடைத்தது. தமையனர் இறந்த பிறகு உன் கைக்கு வந்து சேர்ந்தது.

உன் தமையனர் ஒரு ஸ்திரமான வாழ்க்கையை நடத்தியவர் அல்ல. பொருளை மிகவும் அலட்சியமாக மதிப்பவர்.

அவர் வாழ்க்கையில், அபரிமிதமான செலவினல் பணத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டிருக்கிருர், பலதடவைகள் கடன் வாங்கியிருக்கிருர். பலதடவைகள் நல்லவருமானமும் அடைந்திருக்கிருர். சுய அறிவற்றுப்போகும்படி லாகிரி வஸ்துக்களையும் உபயோகித்து வந்திருக்கிருர். இவை தான் நீ கொடுத்த கடிகாரத்திலிருந்து அறிந்து கொள்ளும் அம்சங்கள். என்று கூறினன் சேகர்.

"இதெகலாம் நீ கடிகாரத்தைப் பார்த்துமட்டும் கூறிவிடமுடியாது! இந்தக் குடும்பத் தகவல்களெல்லாம் யாரிடமிருந்தோ கேட்டறிந்துதான் கூறுகிருய். கடிகாரத்தைப் பார்த்துத்தான் சொல்கிருய் என்பதை நான் நம்பவேமுடியாது" என்ருன் சுந்தரம்.

"இல்லை, சுந்தரம் நான் நிச்சயமாகக் கடிகாரத்திலிருந்துதான் இவ்வளவையும் கூறினேன்" என்ருன் சேகர்.

"அப்படியானல் அதை எனக்கு நம்பிக்கை ஏற்படும்படி விளக்கிச் சொல். பார்ப்போம்" என்ருன் சுந்தரம்.

"இந்தக் கடிகாரத்தின் விலை சுமார் 700. ரூபாய் இருக்கும். உனக்கோ 75 ரூபாய்தான் சம்பளம்! எப்படி உன்னல் இவ்வளவு விலை உயர்ந்த சாமானை வாங்க முடியும். அதனல்தான் இது உனக்கு பிதுர்ராஜ்ஜிதப் பொருள் என்று கூறினேன்.

அடுத்தபடியாக உன் தமையனர் சமீபத்தில் இறந்துபோனது பற்றியும் கூறியிருக்கிருய்.

உன் தந்தையார் சர்வ ஜாக்கிரதையாய் வைத்திருந்ததால் இந்தக் கடிகாரம் பழுதடையாமலிருந்திருக்கிறது. அவர் இறந்தவுடனே ஜேஷ்ட புத்திரனகிய உன் தமையனுக்கு இக் கடிகாரம் கிடைத்தது.

உன் தமையனும் இறந்த பின்னர்தான் கடிகாரம் உன் கைக்குக் கிடைத்தது.

இந்தக் கடிகாரம் உன் கைக்கு வந்து சிறிதுகாலம்தான் ஆகிறது. அதற்கு முன்பு வெகுகாலமாக உன் தமையனிடந்தானிருந்தது இக் கடிகாரம். உன் தமையனர், பொருளை அலட்சியமாக கருதுபவர் என்று கூறியுள்ளேன் அல்லவா?

இந்த எழுநூறு ரூபாய் பெறுமான 'பாக்கெட் கடிகாரத்'தை ஜேபியில் முள்வாங்கியோடு கூடிய கொத்துசாவிகளுடனும் நாணயங்களோடும் கூடவே போட்டு வைத்திருந்திருக்கிருர். அதனல் தான் இந்த விலை உயர்ந்த கடிகாரம் நாணயங்களின்மீது உராய்ந்து கடிகாரத்தின் மேல்பாகங்களில் குத்துக்கள்பட்டும் வரைகள் விழுந்தும் எனமல் பூச்செல்லாம் அழிந்தும் போயிருக்கின்றன. அதனல்தான் அவர் பொருளை அலட்சியமாகக் கருதுபவர் என்று கூறினேன்.

பிறகு கடிகாரத்தின் மீது அடகுக் கடைக்காரனின் அடகு ஜாபிதாவில் கண்டுள்ள அடகுச் சாமானின் எண்ணிக்கையான பல நம்பர்களும் அடையாளமாகக் காணப்படுகின்றன. இதை வைத்துத்தான் உன் தமையனுக்குப் பணத்தட்டு ஏற்பட்டதென்

றும் பலதடவைகளில் (இந்தக் கடிகாரத்தை அடகுவைத்து) கடன் வாங்கியுள்ளார் என்றும் தொவித்தேன்.

அடகுவைத்துத் திருப்பி, மறுபடியும் அடகுக்கு வருவதால் பண வருவாயும், பணத்தட்டும் சேர்ந்தே இருந்தனவென்று தெரிவித்தேன்.

கடிகாரத்திற்குச் சாவிகொடுக்கும் திருகு ஆட்டம் கண்டிருக்கிறது அதனால்தான் சுய அறிவில்லாதபோது சாவிகொடுத்திருந்ததனாலும் சாவிகொடுக்கும் திருகை எதிராகச் சுற்றியிருப்பதாலும் ஆட்டம் கண்டுள்ளது என்று முடிவு செய்து அவர் லாகிரிவஸ்துக்களை உபயோகிப்பவரெனக் கூறினேன்.”

இவ்விதமாக விளக்கமாக விவரங்களையெல்லாம் கூறினன் சேகர்.

துப்பறியும் இலாக்காவுக்கு சேகர் கூறிவந்ததுபோல் மிகுந்த சாமர்த்தியமும் அதிகத் திறமையும், நுண்ணறிவும் அவசியம் தேவைதான் என்று சுந்தரம், ஒப்புக் கொண்டதோடு தன் நண்பனாகிய சேகர்தான் துப்பறியும் இலாக்காவிற்கு லாயக்கானவனென்றும் இன்னும் சேகர் தன் இலாக்காவில் அதிகக் கியாதி பெற்றுச் சிறந்து விளங்கவேண்டுமென்றும் சேகரையும் மகிழ்ச்சி பொங்க வாழ்த்தினன்.

நம்பிக்கையே கொள்ளாத சுந்தரத்தையே நம்பும்படி செய்த சேகருக்குப் பிறகு புகழ்வணீ கிட்டுவதைப்பற்றி ஐயமேது ?

விவேகம்

ஹிருதயத்தில் ஜனித்து நாக்கில் புஷ்பித்து (வளர்ந்து) காரியத்தில் காயாகக் காய்த்துப் பலனில் பழுப்பதே விவேகமாகும். இதன் அருமை பெருமைகளைக் கவிகளாலும் வர்ணிக்கமுடியாது.

மனிதருக்குப் பாம்பும் உணவாகிறது!

ஜப்பானியர்கள் பாம்பை உணவாகக் கொள்கிறார்கள். பாம்பைப் பற்றிப் பய்ந்தும் அதைப் பூஜை செய்தும் வரும் நம் நாட்டினர் இந்தத் தகவலை கேட்டால் நம்பவே மாட்டாரகள்.

ஜப்பான் நகரங்களைவிட ஜப்பானிய கிராமங்களிலே பாம்பை உணவாக்க் கொள்வது சாதாரணம். எல்லா ஜாதிப் பாம்புகளையும் ஆகாரமாக உபயோகிப்பதுண்டு. நல்லபாம்பு, கட்டு விரியன், கண்ணாடி விரியன், கண்குத்திப்பாம்பு, பச்சைப் பாம்பு, கொம்பேரி மூக்கன், முதலிய எல்லா ஜாதிப் பாம்புகளும் உணவுக்கு தகுந்ததுதான். பாம்பு உணவில் ஜப்பானிய பொதுஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அதிக பிரியத்தினால் பாம்புகளைப் பிடித்து அவைகளைவிற்பதே அநேகருக்குத் தொழிலாக இருக்கிறது.

கிராமங்களில் காய் கறி, கோழி, முதலியவற்றைக் கூடையில்வைத்து விற்றுக் கொண்டு வருவதைப்போல் பாம்புகளையும் விற்பனைக்குக் கொண்டுவருவதைச் சகஜமாய்க்காணலாம்.

ஜப்பானிய பாகசாஸ்திரப் பிரகாரம் பர்ம்பை சமைப்பதற்கு முதலில் பாம்பின் தோலை உரித்துவிடுவார்கள். பிறகு தீயில்போட்டு வேகவைப்பார்கள். பின்னர் அரிசியுடன் கலந்து சமைத்து (பிரியாணி போன்று) சாப்பிடுவார்கள். பாம்பு உணவை ஜப்பானியர்கள் விசேஷமானஉயர்ந்த உண்வாகக் கருதுகிறார்கள். பாம்பு உணவு தேகத்திற்கு மிகவும் புஷ்டியை யளிக்க வல்லதாம். நோய்வாய்ப

பட்டுத்தேறுபவர்களுக்கும், பலவீனமானவர்களுக்கும் பாம்பு உணவு வெகு சீக்கிரத்தில் சக்தியையும் போஷாக்கையும் கொடுக்கிறதாம். இதில் சக்தியிருக்கிறதென்று நினைத்து ஜப்பானியர்களில் சிலர்பாம்பின் குடலை வேகவைக்காமலே விழுங்கிவிடுவார்கள்.

ஜப்பானியர்கள் பாம்பின் சத்தை உட்கொள்ளும் விதத்தில் இன்னொரு முறையும் கையாளுகிறார்கள். அரிசியிலிருந்து தயாரிக்கும் சாராயத்தை ஒரு புட்டியில் ஊற்றி உயிரோடு பாம்பை போட்டுவிடுவார்கள். அந்தச் சாராயத்திலேயே ஊறி பாம்பு செத்துவிடும். பிறகு இந்தச் சாராயத்தைக் குடிப்பார்கள். ஸ்திரீலோலர்கள் இதை மிகவும் உபயோகமான பானம் என்று கருதுகின்றனர். அனேக ஜப்பானிய நகரங்களிலும் பாம்பு உணவைத் தயாரித்து விற்கும் ஹோட்டல்களும் உண்டு.

ஹோட்டல்களில், வீட்டிற்குக் கொண்டுபோய் சமைப்பதற்காக உயிரோடுள்ள பாம்புகளை விலைக்கு விற்பதும் உண்டு.

பாம்பை மாவாக ஆக்கியும் விற்பதும் உண்டு. இந்தப் 'பாம்புப் பொடி' எல்லா மளிகைக் கடைகளிலும் கிடைக்கும். இதையும் வாங்கி உணவு தயாரித்து சாப்பிடுவார்கள் ஜப்பானியர்கள்.



சென்ற மாதம் வட நாடெங்கும் கொண்டாடப்படும் ஹோலிப் பண்டிகையைப் பற்றி.

வசந்த விழாவிலும் வகுப்புவாதம்!

●

இப்போது காஷ்மீரத்தின் பிரதம மந்திரியாயிருக்கும் பக்ஷி குலாம் மகமதைப் பற்றி ஒரு கதையுண்டு.

அதாவது வடநாட்டில் பிரபலமாயுள்ள "ஹோலிப பண்டிகை' ஜம்மு நகரில் கொண்டாடப்படுகையில் சாயத் தண்ணீரை விளையாட்டாக ஹிந்துக்கள் மீது கொட்டுவதுபோல் முஸ்லீம்களின் மீதும் கொட்டிவிட்டனர்.

இதனால் முஸ்லீம்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு பண்டிகை கொண்டாடும் ஹிந்துக்களோடு கலகம் செய்ய முற்பட்டனர். இதையறிந்த காஷ்மீர் (தற்போதய) பிரதமர் குலாம் பக்ஷி மகமத் கலகம் சம்பவிக்கப் போகும் இடத்திற்கு வாளி, வாளியாகச் சாயத்தண்ணீரை நிரப்பி எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார்.

ஹோலியின் கோலாகல விளையாட்டில் ஈடுபட்டிருந்த ஹிந்துக்கள் மீதும், இதனால் கோபமடைந்த முஸ்லீம்களின் மீதும் சாயத்தண்ணீரைத் தெளித்து இந்த ஹோலிப் பண்டிகை ஹிந்துக்களுக்கு மட்டும் விசேஷமான கொண்டாட்டம் அல்ல. முஸ்லீம்களும் இந்தப் பண்டிகையைக் கொண்டாட உரிமையுண்டு என்பதைக் காண்பிப்பதுபோல் ஹிந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் களிப்பை யூட்டினர்.

பிரதமரின் இத்தகைய செயல் சம்பவிக்க இருந்த இக் கலகத்தைத் தடுத்ததோடு மட்டுமில்லாமல் 'எந்த வருஷத்திலும் இந்த

விதமான முறையில் ஹோலிப் பண்டிகையைக் குதூகலமாகக் கொண்டாடப்படவில்லையென்று காஷ்மீர் பொதுமக்கள் கருதுமாறு செய்தது.

மேற்கூறிய சம்பவத்திற்குக் காரணமான ஹோலிப் பண்டிகை வடநாட்டுப் பண்டிகைகளிலேயே மிகவும் கவர்ச்சிகரமானது.

இது ஆதிகாலத்தில் ஒரு சாதாரண பருவகாலப் பண்டிகையாக ஆரம்பிக்கப்பட்டது.

வசந்தத்தின் வனப்புயர் காலத்தில் இயற்கை அன்னை அழகுறச் கவர்ச்சிகரமாய்த் தோன்றுவதை அனுபவித்த மக்களின் உள்ளத்திலும் மகிழ்ச்சிபொங்கி அதைக் கொண்டாடுவதே ஹோலிப்பண்டிகையாகும்.

எல்லாக் கவிகளும் இலக்கியங்களிலே வசந்தத்தையும் வசந்தகால கேளிக்கைகளையும் வெகுவாக வருணித்துள்ளார்கள்.

அதுபோலவே, காளிதாஸர், தண்டி முதலிய கவிகளும் வசந்த காலத்தையும் அக்காலத்தில் விசேஷமாகக் கொண்டாடப்படும் ஹோலிப் பண்டிகையைப் பற்றியும் சிறப்பாக வருணித்திருக்கின்றனர்.

எல்லா மக்களும் இந்த வசந்த கால பண்டிகையை கொண்டாடி யிருக்கின்றனரென்றும் இவர்கள் காவியங்களிலிருந்து தெரிய வருகிறது. இதனால் இந்த 'ஹோலிப் பண்டிகை' மதச் சார்பற்ற விழாவாகவே விளங்கி வந்திருக்கிறதென்பதில் ஐயமில்லை. இயற்கையின் சௌந்தர்யத்தை அனுபவிப்பதில் எல்லோருக்குமே உரிமையுண்டல்லவா?

இந்த வசந்த விழாவான 'ஹோலி'யின் முக்கிய அம்சங்கள்:- நாடகம், நடனம், சங்கீதம் இவையேயாகும்.

மலர்கள் மலர்ந்து, மகிழ் ஆட்டும் வசந்தத்திலே கொண்டாடப்படும் இப் பண்டிகையின் போது, புஷ்பங்களுக்குக் குறைவேது?

நாடக மேடைகளிலும் நடன அரங்குகளிலும் கான மண்டபங்களிலும் கண்ணுக்கு ரம்மியமாகத்தோன்றும் நானுவித மலர்த்தோரணங்களைத் தொங்கவிட்டு அலங்கரித்திருப்பார்கள். ஏராளமாகப் புஷ்பங்கள் பூத்துச்சொறியும் நந்தவனங்

களிலும் இந்தப் பண்டிகை விசேஷமாக நடைபெறும்.

இப்பண்டிகையில் மக்கள் களிப்புறுவது எப்படியெனில் ஒருவருக்கொருவர், (கலியாணம் போன்ற விசேஷ சம்பவங்களில் 'மஞ்சள் நீராட்டு' நடப்பதுபோல்) சாயத் தண்ணீரைத் தெளித்துக்கொண்டும், சாயப் பொடியைத் தூவிக்கொண்டும் கொண்டாடுவார்கள்.

முகலாய ஆட்சியின் போது டில்லியில், இந்த ஹோலிப்பண்டிகை கொண்டாடுவதற்காகவே விசேஷ தர்பார்கள் கூட்டி அரசனும் கலந்துகொண்டு அதிவிமரிசையாய்க் கொண்டாடுவது வழக்கம்.

ஹோலிப் பண்டிகையை, சதிபதிகளின் இன்ப வாழ்க்கைக்கு ஆதாரமாயுள்ள மன்மதனைக் குறித்த காமன் பண்டிகையாக ஹிந்துக்கள் கொண்டாடுவது வழக்கம்.

கர்லப்போக்கில் வகுப்புவாத மனப்பான்மை மலிந்ததனால் இந்தப் பண்டிகை ஹிந்துக்களின் பண்டிகை எனக் கூறும் முறைக்கு மாறி வந்துகொண்டிருக்கிறது.

ஹிந்துக்களில் சிலர் ராக்ஷஸ சம்ஹார ஞாபகார்த்த தினமாக இப்பண்டிகையைக் கொண்டாடுவதால் இதைப் பொதுப்பண்டிகையாகக் கொண்டாடி வந்த இதர மதஸ்தர்கள் ஹிந்துக்கள் பண்டிகையாகக் கருதி முன்போல் இப் பண்டிகைகளில் கலந்து கொள்வதில்லை. இதனால் வகுப்புவாதம் ஸ்திரப்பட்டுக் கொண்டே வந்தது.

வகுப்புப் பாகுபாடற்ற முறையில் எல்லா மதஸ்தரும் சேர்ந்து கொண்டாடிய காலத்தில் சாயநீரையும் சாயப் பொடியையும் மத வித்தியாசமின்றி தெளித்துக் கொண்டும் தூவிக் கொண்டும் கொண்டாடி வந்தனர்.

பின்னர் இது ஹிந்துக்கள் பண்டிகையெனக்கருதி ஹிந்துக்கள் மட்டும் கொண்டாடுகையில் இதைக் கொண்டாடும் ஹிந்துக்களே ஒருவர்மேல் ஒருவர் தெளித்துக்கொள்ள வேண்டுமே தவிர பண்டிகைக்குச் சம்பந்தமில்லாத இதர மதஸ்தர்கள்மீது இந்த சாயநீர்த் தெளிப்பது கூடாதென்ற மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது.

அவ்வாறு ஹிந்துக்கள் இதர மதஸ்தர்கள்மீது சாய நீரை ஊற்றினால் அவர்களை அவமதிப்பதாகக் கருதி கோபமூட்டுவதற்கும் காரணமாயிருந்தது.

பண்டிகை என்ற பெயரில் குழந்தைகள் கட்டுக்கடங்காமல் செய்யும் சேஷ்டைகளுக்கு அளவேயில்லை. இந்த சாயநீர் தீர்ந்துபோனால் சாக்கடைநீரைக்கூட ஊற்றி தமாஷும், கிண்டலும் புரிவார்கள். இதனால் கலகத்திற்கும் ஏதுவாகும். கட்டுப்பாடில்லாத முறையில் ஒழுங்கீனமாக இப்பண்டிகையைக் கொண்டாடாமல் ஒழுங்கானமுறையில் இப்பண்டிகையைக் கொண்டாடினால்தான், பொது ஜனங்களிடையே அமைதி நிலவும்.

இன்னும், இப் பண்டிகையின் போது, மதச்சார்பில்லாத சமரச சன்மார்க்கமொன்றையே போதிக்கும் நாடகங்கள், சங்கீதக் கச்சேரிகள் முதலியன நடத்தினால் சகல மதஸ்தர்களிடையேயும் ஒரு பரஸ்பர ஒற்றுமையும் அன்பும் நிலவும். கேளிக்கைகளின்றி 'ஹோலி' கொண்டாட முடியாது. ஆனால் கேளிக்கைகள் விபரீதம் விளைவிக்கும் அளவுக்குப் போகக்கூடாது.

பண்டிகைகளில் கலந்து கொள்ள விருப்பமில்லாத ஹிந்துக்களோ அல்லது சம்பந்தமில்லாத இதர மதஸ்தர்களோ 'ஹோலி' தினத்தன்று பண்டிகை கொண்டாடுபவர்களின் குறும்புச் சேஷ்டைகளால் தாங்கள் வெளியே வந்தால் என்ன தீங்கு நேருமோ என்று திகில்கொள்ளும் முறையில் அக்கிரமச்செயல்களோடு இப் பண்டிகைகளைக் கொண்டாடக் கூடாது.

இப்பண்டிகையில் கேளிக்கைகள் செய்வதை (தமாஷ்) நேர்மையோடு கையாண்டால், ஆதிகாலத்தில் மதச்சார்பற்ற முறையில் எல்லா மதஸ்தர்களும் சேர்ந்து கொண்டாடியதுபோல் எல்லாரும் சேர்ந்து இப்பண்டிகையை கொண்டாடுவதற்கு ஏதுவாகும்.

அன்று கைதிகள் நாடு, இன்று குடியேற்ற நாடு

•

1945-ஆம் ஆண்டு வரை. அந்தமான் தீவு ஆயுள் தண்டனை கைதிகளின் வாசஸ்தலமாகவே இருந்துவந்தது. இந்திய சர்க்கார்; 1945 - ம் வருஷத் திறகுப் பிறகுதான் இத்தீவில் பொதுஜனங்களைக் குடியேறச் செய்து, குடியேற்ற நாடாக மாற்றி, பொதுஜனங்கள் அங்கே உழைத்து ஊதியம் பெறுமாறு செய்வதன்மூலம் இத்தீவை அபிவிருத்தியடையச் செய்திருக்கிறார்கள்.

சமீபகாலத்தில் நமது ஜனாதிபதியான ராஜேந்திர பிரசாத் அவர்கள் அந்தமான் தீவுக்கு விஜயஞ் செய்து, அங்குள்ள நிலைமைகளை நன்கு பரிசிலனை செய்தார். இதன் விளைவாக நம் இந்திய சர்க்கார் நம் நாட்டு மக்கள் அங்கே குடியேறுவதற்கும் வீடு, உணவு முதலிய வசதிகள் பெறுவதற்கும், நான்கு கோடி ரூபாய்கள் செலவு செய்வதெனத் திட்டம் வகுத்து சென்ற ஒரு வருஷ காலமாக இத்தீவை அபிவிருத்தி செய்து வருகிறார்கள்.

இன்னும் ஐந்து வருஷங்களுக்குள் இருபதினாயிரம் குடும்பங்களை அங்கே குடியேறச் செய்துவிடுவார்கள். அந்தமான் தீவுகளின் விஸ்தீரணம் 3200 சதுர மைல்கள் இவற்றில் 2,200 சதுர மைல்கள் வரை காடுகள். 300 சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள காடுகளை அழித்து மக்கள் வாழ்வதற்குத் தகுதியான இடங்களாகச் செய்யத்திட்டமிட்டிருக்கின்றனர்.

இம்மாதிரிக் காடுகளை அழிப்பதனால் அந்தமானின் சீதோஷ்ண நிலையில் எவ்விதமான மாறுதல்களும்

ஏற்படாதென முடிவிற்கும் வந்துள்ளனர்.

ஐந்தாண்டுத்திட்டப் பிரகாரம் இருபதினாயிரம் ஏக்கர் சதுரமைல் விஸ்தீரணம் கொண்ட நிலத்தை சமப்படுத்தி அங்கே பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகளைக் குடியேற்றி வைக்கத் திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

இத்திட்டப்பிரகாரம் ஜனங்கள் அங்கே குடியேறி விவசாயம் அபிவிருத்தியடைந்த போதிலும் அந்தமான் காடுகளிலுள்ள மரங்களுக்கும் காட்டு விளை பொருள்களுக்குமே வெகு காலம் வரை முக்கியத்துவம் நீடித்திருக்கும்.

குடியேறியுள்ள ஜனங்களுக்கு வேலை கொடுக்கும் கருத்துடனும் காட்டுப் பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் போர்ட் பிளேர் (Port Blair) என்ற இடத்தில் ஒரு பெரிய மரம் அறுக்கும் யந்திரசாலையை அமைத்திருக்கிறார்கள்.

இன்னும் என்னென்ன தொழில்களை இங்கே நடத்தலாமென்றும் தீவிரமாகப் பரிசீலனை செய்துவருகின்றனர்.

அந்தமான் வாசிகள், நமது ஜனாதிபதி அங்கு விஜயஞ் செய்திருந்தபோது அவரிடம், தாங்களாகவே சுய ஆட்சியை நடத்தவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார்களாம்.

இதன்பொருட்டு அந்தமான் தீவின் நிர்வாகத்தில் இந்திய கமிஷனருக்கு ஆலோசனை கூறுவதற்காக ஐந்து பேர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை அமைத்துக் கொள்ள நமது இந்திய சர்க்கார் உத்தரவிட்டுள்ளனர்.

அந்தமான் தீவின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதே இந்திய சர்க்காரின் முக்கியமான பிரச்னை. இதற்கு இந்திய சர்க்காரின் ஏராளமான பொருளுதவி இன்றியமையாதது.

உளவறிய நாய்கள் உதவுகின்றன

•

"துறவி மடமும் அடுப்பங்கரையும்" (Cloister and the hearth) என்ற நாவலில் சார்லஸ் ரீட் என்ற பிரபல நாவலாசிரியர் ஒருவர் துரத்தி வரும் பலரிடமிருந்து தப்பி ஓடும் ஒரு குற்றவாளியைக் குறிப்பிட்டு அவர் எழுதியிருப்பதென்னவென்றால் :-

''அந்தக் குற்றவாளி'' ஒருவரும் அவனைப் பிடித்துக் கொள்ள முடியாதவாறு வெகு வேகமாய் ஓடுகிறான். அவன் ஓட்டத்தைப் பிடிக்க பின் தொடர்ந்து ஓடச் சக்தியில்லாமல் மனிதர்கள் களைத்துப் பின்னடைந்த போதிலும், இரண்டு ஜீவராசிகள் மட்டும் அவன் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அதிவேகமாக ஓடி அவனுக்கு முன்னால் சென்று அவனை வழி மறித்துக் கொண்டன.

குற்றவாளி மேலும் ஓட முடியாமல் திகைத்து ஸ்தம்பித்து நின்றுவிட்டான். இவ்விதம் குற்றவாளியைப் பிடித்துக் கொடுத்த ஜீவராசிகள்தான் இரண்டு வேட்டை நாய்களாகும்.''

'' நாயாய்ப் பிறந்திடில், நல்வேட்டை யாடி நலம் புரியும்'' என்ற பெரியாரின் வாக்குப்படிவேட்டைக்காரர்கள் நாய்களின்றி, வேட்டையாட முடியாது.

மிளா, மான், புல்வாய் முதலான அதிவேகமாய் ஓடும் மிருகங்களை வேட்டை நாய்கள் பின்தொடர்ந்து ஓடி, அவற்றை மறித்து நிறுத்திவிடும்.

உடும்பு, முயல், குழி முயல் போன்ற சிறுபிராணிகளின் இருக்குமிடங்களை மோப்ப சக்தியால் அறிந்து அவை இருக்குமிடங்களுக்குச் சென்றுவிடும்.

இவ்விதம் பல நூற்ருண்டுகளாக வீடுகளுக்குப் பாதுகாப்பாகவும், மனிதர்களுக்கு வேட்டைக்குதவியாகவுமிருந்த நாயை, மேற்கூறியுள்ள நாவலாசிரியர் எழுதியிருப்பது போல் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும் உபயோகப்படுத்த ஆரம்பித்திருக்கிருர்கள்.

சென்னையிலும், சென்னை மாகாணத்தைச் சேர்ந்த சில முக்கிய நகரங்களிலும் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குப் போலீஸ் அதிகாரிகள் நாய்களை உபயோகிக்கின்றனா.

குட்டியிலிருந்தே சாமர்த்தியமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குப்பயிற்சி செய்து வளர்த்து வருகின்றனர். இயற்கையிலேயே இவற்றிற்கு மோப்ப சக்தியும், ஓடும் சக்தியுமிருந்தபோதிலும், 'இரத்தவாடை', 'மனித வாடை' இவற்றை அறிந்து கொள்வதற்கும் அதிவேகமாக ஓடுவதற்கும் குட்டியிலிருந்தே பயிற்சியளித்து வருகின்ருர்கள்.

குட்டிகளிலிருந்தே நாய்களுக்கு மோப்பத்தின்மூலம் குறிப்பிட்ட மனிதனைக் காட்டிக்கொடுக்கும் சக்தியைப் பெறச்செய்யும் பயிற்சி எப்படியென்ருல், ஒரு மனிதன் அவனுடைய கைக்குட்டையை ஒரு பக்கத்தில் போட்டுவிட்டு, போட்ட இடத்திற்குச் சமீபமாகத் தலைமறைவாக இருக்க வேண்டியது. கைக்குட்டை கிடக்கும் இடத்திற்கு நாயைக் கொண்டு வந்து கைக்குட்டையை மோப்பம் பிடிக்கச் செய்யவேண்டியது;

அவனுடைய வாடை அந்தக் கைக்குட்டையில்தோய்ந்திருக்கும்; கைக்குட்டையிலிருந்து அவனுடைய வாடையை நாய் மோப்பத்தால் அறிந்துகொள்ள வேண்டும். அவன் செல்லுமிடங்கள்தோறும் அவன் வாடையும் கூடவே சென்று காற்றில் கலந்திருப்பதனுல் நாய், காற்றில் மோப்பத்திஞல் அந்த மனிதனின் வாடையை அறிந்து அவன் சென்ற திக்கிலே சென்று, அவன் ஒளிந்திருக்ககும் இடத்தைக் கண்டு பிடிக் வேண்டியது.

அடுத்தபடியாக மற்ருெரு மனிதனை அவன் கைக்குட்டையைப் போடச் செய்து விட்டு, சற்று அதிக தூரத்தில் ஒளிந்திருக்கும்படி செய்து மேற்கூடியவாறே சற்று அதிக தூரத்தில்

சென்று, மோப்ப சக்தியால் அவனைக் கண்டுபிடிக்க வேண்டியது.

பின்னர் ஒரு ஆற்றையோ குளத்தையோ கடந்து சென்று ஒருவனை ஒளிந்து கொண்டிருக்கச் செய்து, மேற்கூறியவாறு நாய், அவன் சென்ற வழியே ஆற்றையும், குளத்தையும் கடந்து மறைவிடத்திலிருக்கும் அவனை மோப்பத்தால் கண்டுபிடிக்கவேண்டியது.

மற்றொரு முறை எப்படியென்றால், மேற்கூறியவாறு கைக்குட்டையைப் போட்டுவிட்டு ஆயிரக்கணக்கான மக்கள் அடங்கிய கூட்டத்தின் நடுவே அவனை இருக்கச் செய்வார்கள். நாய் கைக்குட்டையிலிருந்து மனிதனின் வாடையை மோப்பத்தால் அறிந்துகொண்டு, அவன் சென்ற வழியே அக் கூட்டத்திற்குச் சென்று கூட்டத்திற்குள் இருக்கும் குறிப்பிட்ட மனிதனை மோப்பத்தால் கண்டுபிடிக்க வேண்டியது.

மற்றும் மேற்கூறியவாறு கைக்குட்டையைப் போட்டுவிட்டு, கண்ணாடிக் கதவுகளெல்லாம் அடைத்த ஒரு காரில் பல மைல்கள் சென்று ஓரிடத்தில் ஒளிந்திருக்கச் செய்வார்கள்.

நாய் கைக்குட்டையின் மோப்பத்தால் அவன் பிரயாணஞ் செய்த மோட்டார் சென்ற பாதையையே பின் தொடர்ந்து அவனைக்கண்டுபிடிக்கவேண்டியது. இத்தகைய பலவிதங்களில் குறிப்பிட்ட மனிதனைக் கண்டுபிடிப்பதற்குப் பயிற்சியளித்து வருகிறார்கள்.

பயிற்சியில் நன்கு தேர்ச்சி பெற்ற நாய்கள் குறிப்பிட்ட மனிதன் எத்தனை ஆயிரம் மைல்களுக்கப்பால் சென்றிருந்தாலும், அவனைத் தங்கள் அபார மோப்ப சக்தியினால் கண்டுபிடித்துக் கொடுத்துவிடும்.

மோப்பசக்தியால் நாய்கள் பின்தொடராமலிருப்பதற்கு தப்பித்துப் போக முயற்சிக்கும் மனிதன் எவ்வளவு தந்திரமான சூழ்ச்சிகள் செய்தாலும், இந்த அபார மோப்ப சக்திபெற்ற நாய்களிடம் பலிக்காது. யமனிடம் இருந்து தப்பினாலும் தப்பலாம். இந்த நாய்களிடமிருந்து தப்பவே முடியாது!

இதற்கு உதாரணமாக எவ்வளவோ சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தான்

வாடை அறிந்த குறிப்பிட்ட மனிதன் போகும் திசையை திட்டவட்டமாய் மோப்பசக்தியால் அறிந்துகொண்டு, குறுக்குவழியாக ஓடிஅவன் செல்லும் இடத்திற்கு அவனுக்கு முன்பாகச் சென்று, அவனை 'வரவேற்கும் முறை'யில் காத்திருந்ததுபோன்ற சம்பவங்களும் உண்டு.

தப்பி ஓடும் குற்றவாளி ஒருவன், போலீஸ் இலாக்காவிலுள்ள நாய்கள் தன்னைத் துரத்திவருகின்றனவென்று அறிந்துகொண்டால் இனித் தான் ஓடுவதில் பயனில்லையென மனம் சோர்வடைந்து அந்த இடத்திலேயே பீதியால் மரம்போல் விழுந்திடுவான். பிறகு போலீஸார் இவனைக் கண்டுபிடிப்பது எவ்வளவு எளிது என்று கூறவேண்டுமா?

மோப்பத்தால் ஆட்களைக் கண்டுபிடிக்கும்முறையில் ஒரு சிறிய தவறும் ஏற்படுவதுண்டு. அதாவது ஒரு மனிதனின் ஆடைகளிலிருந்தே அவனது வாடையை மோப்பத்தால் அறிந்துகொண்டு, அவன் சென்ற வழியே சென்று அவனைக் கண்டுபிடிக்கமுயற்சிக்கும்போது, ஒருவேளை இந்த ஆடைகளில் ஒன்றை மற்றொருவன் அணிந்திருந்தால், குறிப்பிட்ட மனிதனை விட்டுவிட்டு அவன் ஆடையை அணிந்திருந்த மற்றொரு மனிதனிடம் சென்று அவனைக் காட்டிவிடும்.

துப்பறியும் வேலையில் கீர்த்திபெற்ற பல நிபுணர்கள் இருப்பதுபோலவே, துப்பறியும் இரகசியபோலீஸ் அதிகாரிகளுக்கு துப்புதுலக்குவதில் உதவியாயிருந்த அநேக கைதேர்ந்த குற்றவாளிகளைக் கண்டுபிடித்த நாடெங்கும் மிகவும் புகழ்வாய்ந்த நாய்கள் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் உள்ளன.

பெற்றோரைச் சமாளித்தல்!

●

பஸ்ஸில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த இரு கல்லூரி மாணவிகளின் சம்பாஷணை பின்வருமாறு:-

...........“இல்வாழ்க்கையின் இரகசியம்” என்ற புத்தகத்தைப் படித்திருக்கிருயா?”

“இல்லையே, அது அவ்வளவு சுவாரஸ்யமான புத்தகமா?

“ஆம், அதை உனக்குத் தருகிறேன், ஆனல் அதை உன் பெற்றோர் கண்ணில் படும்படி வைக்கக்கூடாது. ஜாக்கிரதை!”

“ஆம், நன்ருகத் தெரியும், பெற்றோரைச் சமாளிப்பது வர வர மிகவும் தொல்லையாய்த் தானிருக்கிறது!”

★

சிறுவன் ஒருவன் வழக்கம் போல் விளையாடிவிட்டு ஆறுமணிக்கு வீட்டுக்கு வருவது வழக்கம்: அவன் கால் அல்லது அரைமணி நேரம் தாமதித்து வந்தாலும் அவன் தாயார் கண்டிப்பாள். ஒருநாள் விளையாட்டிலிருந்து திரும்பிவர வெகு நேரம் ஆகிவிட்டது. தாயார் ஒவ்வொரு கணமும் தன் பையன் வந்துவிடுவானென்று எதிர்பார்த்து வாராததால், பையனுக்கு ஏதேனும் தீங்கு நேரிட்டுவிட்டதோ என்று கலக்கமடைந்தாள்.

இரவு அகால நேரத்தில் பையன் வீடு திரும்பினன்.

பையனைக் கண்டதும் அவனை இறுகத் தழுவிக் கண்ணீர் மல்கி, பூரிப்படைந்ததைக் கண்ட சிறுவன் “என் நண்பர்கள் சொன்னது வாஸ்தவமாய்த்தானிருக்கிறது, தாமதித்துப் போவதாயிருந்தால் வெகு நேரங் கழித்தே போவதுதான் நலம். அப்போது தான் எப்படியாவது பையன் வந்து சேர்ந்தானே, என்ற

ஆனந்தத்தில் என்னைக் கண்டிப்பதற்கு மறந்துவிடுவாய்''

★

பள்ளிக்கூடப் பரீட்சைக்குப் பிறகு பையன் தன்னுடைய 'பிராகிரஸ் ரிப்போர்ட்டை'த் தாயாரிடம் கொண்டு வந்து காண்பித்தான்.

அதில் வகுப்பிலே அவனை கடைசிப் பையன் எனக் கண்டிருந்தது. தாயாரின் முகத்தில் அதிருப்தி நிலவியதைக் கண்ட பையன், "வகுப்பில் கடைசிப் பையனானல் என்ன? முதல் பையனானல் என்ன? வாத்தியார் சொல்லிக் கொடுப்பது ஒன்றுபோலவேத்தான்'' என்றான்.

★

ஒரு தாயார் தன் பையனிடம் "நீயும் நன்றாகப் படித்து கிருஷ்ணனைப் போல் 'ஸ்காலர்ஷிப்' பெற்றிருந்தால் எனக்கு எவ்வளவு பெருமையாயிருக்கும்?

பையன் "அதெப்படி சாத்தியமாகும், அம்மா, 'கிருஷ்ணனின் பெற்றோர்கள் மகா புத்திசாலிகளாச்சே''!

தெய்வமே என்றிரு!

தென்னாட்டில் சில வீடுகளில் குழந்தைகள் கூச்சல் போட்டு அட்டகாசம் செய்தால், 'தேமேன்றிருடா' என்றும், அவன் செய்வதை எல்லாம் பொறுத்துக் கொண்டு 'தேமேன்றிருந்தேன்' என்று கூறுவதையெல்லாம் சகஜமாய்க் கேட்கலாம். இது 'தெய்வமே என்றிரு' என்ற வார்த்தையே மருவி 'தேமேன்றிரு' என்று வழங்குகிறது. அதாவது ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதைக் குறிக்கிறது.

தென் ஆப்பிரிக்காவில்

வெள்ளையரின் நிறத்திமிரால் கறுப்பர் படும்பாடு

●

உலகில் எல்லா மனிதரும் சமம் என்ற பரந்தநோக்கில் மக்கள் அனைவரும் ஏற்றத் தாழ்வின்றி சகோதரத்துவத்தோடு வாழவேண்டுமென்ற உயர்ந்த மனப்பான்மை மக்களிடையே வளர்ந்து வரும் இந்த இருபதாவது நூற்றாண்டிலுங் கூட நிறவேற்றுமை, பணக்காரர், எளியவர் என்ற தர வேற்றுமையில் பாகுபாடு செய்து சிலருக்குத் தனி உரிமை கொடுத்தும் சிலருக்கு உரிமையே இல்லாமல் செய்தும் நிர்வகிக்கும் ஆட்சி ஒன்று தென் ஆப்ரிக்காவிலேதான் நடைபெற்று வருகிறது.

தென் ஆப்பிரிக்காவில் அமுலிலிருக்கும் சட்டப்பிரகாரம் வெள்ளையர்களுக்குத்தான் சட்டசபையில் அங்கத்தினராக அமர உரிமையுண்டு. வெள்ளையர் — கறுப்பர் கலப்புமணம் கூடாதென்று சட்டமே உள்ளது. ஒருவேளை இவர்களிடையே கள்ள நட்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வந்தாலும் அதற்கு, அபராதமும் சிறைத்தண்டனையும் உண்டு.

ரயில்வண்டியில் வெள்ளையர்களும் கறுப்பர்களும் ஒரே பெட்டியில் அமர்ந்து பிரயாணஞ்செய்யக்கூடாது: வெள்ளையர்களுக்கும், கறுப்பர்களுக்கும் பிரத்தியேகமாகத் தனித் தனிப் பெட்டிகளை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தபாலாபீஸ், போன்ற மக்கள் அடிக்கடி சென்று வரவேண்டிய எல்லா சர்க்கார் காரியாலயங்களிலெல்லாம் கறுப்பர்களுக்கென்று தனி இடமும், வெள்ளையர்

களுக்கென்று தனி இடமும் பிரிக்கப்பட்டிருக்கிறது. விஸ்கி, முதலான மதுபானங்கள் விற்கும் கடைகளுக்கும் கறுப்பர்கள் செல்லவே கூடர்து. கறுப்பர்கள் கையில் எந்தவிதமான மதுபான புட்டிகளிருப்பதைக் கண்டாலும் அவர்களுக்கு அபராதமும், சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.

கறுப்பர்களின் குழந்தைகளுக்கு வெள்ளையரின் குழந்தைகள் பள்ளியிலே சேர்ந்து படிப்பதற்கு அனுமதி கிடையாது.

இங்கே கறுப்பர்களுக்கென்றுஒதுக்கிவைத்துள்ள பிரதேசங்களில்தான் கறுப்பர்கள் நிலங்கள் வாங்கவும், வீடு கட்டிக்கொள்ளவும் உரிமையுண்டு.

கறுப்பர்களும், வெள்ளையர்களும் இயற்கையாகவே கலந்துவாழும் பகுதிகளிலிருந்து கறுப்பர்களை மட்டும் ஒதுக்கி அப்புறப்படுத்துவதற்காகச் சர்க்கார் புதிதாக ஒரு சட்டம் பிறப்பித்திருக்கிருர்கள்.

இச்சட்டப்பிரகாரம் கறுப்பர்கள் அப்பகுதிகளிலிருந்து வெகு சீக்கிரத்தில் ஒதுக்கப்படுவார்கள்.

போலீஸ்காரன் கறுப்பனுயிருந்தால், அவன் கண்டிப்பாய் வெள்ளையனைக் கைது செய்யக் கூடாது. சாப்பாட்டு விடுதிகள், ஆஸ்பத்திரிகள், பொழுதுபோக்கும் இடங்கள், இயந்திரத் தொழிற்சாலைகளில் ஓய்வெடுக்குமிடங்க்ள் இவையெல்லாவற்றிலும் கறுப்பருக்குத் தனி இடமும் வெள்ளையருக்குப் பிரத்தியேக இடமும் அமைத்திருக்கிருர்கள்.

மல்யுத்தம், குத்துச் சண்டைபோன்ற பொது மக்கள் கண்டுகளிக்கும்விளையாட்டுகளில் கறுப்பர்கள் வெள்ளையர்களோடு போட்டியிடக்கூடாது. வெள்ளையர்கள் மட்டும் கலந்து கொள்ளும் விளையாட்டுகளை கறுப்பர்கள் போய்ப் பார்க்கக்கூடாது. இதுபோலவே, கறுப்பர்கள் மட்டும் கலந்து கொள்ளும் விளையாட்டுகளை வெள்ளையர்களும் பார்வையிடக்கூடாது,

பொதுப் பிரயாண வசதிகளிலுங்கூட கறுப்பர்களுக்கென்ற பிரத்தியேக பஸ்களும், டிராம் வண்டிகளும் இருக்கின்றன. அதுபோன்றே வெள்ளையர்களுக்குமட்டும் தனி பஸ்

களும், டிராம் வண்டிகளும் உண்டு.

சில இடங்களில் மாடி பஸ்களிலும் மேலே கறுப்பர்களும், கீழே வெள்ளையர்களுந்தான் பிரயாணஞ் செய்யவேண்டும்.

சர்வகலாசாலைகளிலும், வாசகசாலைகளிலும் கறுப்பர்களுக்குத் தனி இடந்தான். இன்னும், சில சர்வகலாசாலைகளில் கறுப்பர்களுக்கு அனுமதியே கிடையாது.

இவ்வாறு வெள்ளையர்கள் கறுப்பர்களைப் பிரித்து ஒதுக்குங் காரணம் என்னவென்றால், அவர்களுக்குச் சமத்துவம் கொடுத்து தங்களுடன் கலந்துவாழும் சம அந்தஸ்து பெற்றுவிட்டால் அவர்கள் தங்களைப் போல் நாட்டை ஆளும் திறமையையும் அடைந்து தாங்கள் வெளியேறநேரிடும் என்ற பீதியேதான்.

இந்தியா போன்ற தேசங்களில் வெள்ளையர்களின் ஆட்சி ஏற்பட்டிருந்த முறைக்கும் ஆப்பிரிக்காவில் வெள்ளையர் ஆட்சி நிலவியுள்ள முறைக்கும் பாகுபாடுண்டு.

இந்தியாவிற்கு வெள்ளை முதலாளிகள் வியாபாரத்திற்கே வந்தார்கள். அவர்களின் தற்பாதுகாப்புக்காக சிறு சைனியமும் வைத்திருந்தார்கள். இதன் மூலம் இந்தியாவை ஆண்டபோதிலும் அவர்கள் சிறு தொகையினராகத் தற்காலிக வாழ்க்கையைத்தான் நடத்திவந்தார்கள். ஆனால் ஆப்பிரிக்காவில் விவசாயப் பண்ணைகள், இயந்திரசாலைகள், முதலான எல்லாத் தொழிற்துறைகளிலும் முதலாளிகளெல்லாம் வெள்ளையர்களாயிருப்பதுபோலவே, தொழிலாளிகளில் பெருமபான்மையோர், வெள்ளையர்களேதான். ஆகையினால் தான் குடியேறியிருக்கும் வெள்ளையர்களின் எண்ணிக்கை ஆப்பிரிக்காவில் அதிகமாயுள்ளது. இவர்கள் வீடுவாசல்களுடன் நிரந்தரமாய் ஆப்பிரிக்காவைச் சொந்த நாடாகக் கருதி வாழ்ந்து வருகிறார்கள்.

ஆட்சிப் பொறுப்பு கறுப்பர்களிடம் மாறுமேயானால் இவ்விதம் பெரும்பான்மையாக நிரந்தரம்பெற்ற வெள்ளையர்களின் உரிமை பாதிக்கப்பட்டு அதனால் கறுப்பர்களுக்குக் கட்டுப்

பட்டு நடக்கவும் நேரிட லாம். இத்தகைய காரணங் களால்தான் ஆப்பிரிக்கா வில் வெள்ளையர்கள் கறுப் பர்களுக்கு அரசியல் உரிமை அளிக்காமல் அவர்களை அடக்கி, ஒடுக்கி, ஒதுக்கி, வல்லரசு நடத்திவருகிறுர் கள்.

ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளையர்களில் பெரும் பான்மையோர் தொழிலாளி களே. இவர்கள் சகல தொழில் முறைகளிலும் ஈடு பட்டிருக்கின்றனர். புத்தி நுட்பத்தைக்கொண்டு செய் யும் உயர்தரத் தொழில் களில் மட்டும் ஈடுபடுபவர் களாயிருந்தால் கௌரவத் தோடு சம்பள உயர்வையும் நிர்ணயித்துப் பாதுகாக்க முடியும். ஆனல் பெரும்பா லும் உடலுழைப்பான தொழில்களிலே ஈடுபடுவ தாயிருப்பதனல், கௌர வத்தோடு சம்பள உயர்வை நிர்ணயிக்கமுடியாது. உட லுழைப்பான தொழிலில் கறுப்பர்களும் ஈடுபட்டிருக் கின்றனர். அதே தொழி லேத்தான் வெள்ளையர்களும் செய்கின்றுர்கள். இத்த கைய தொழில்களிலிருந்து கறுப்பர்களுக்கும் வெள்ளை யர்களுக்கும் எந்தவித ஏற் றத் தாழ்வும் கூறுவதற்கு இடமில்லை.

இந்த நிலையிலும்கூட அர சாங்கரீதியில் தன் இனத் தார் கௌரவத்தை மட்டும் உயர்த்துவதற்கு வெள்ளை யாகள் ஒருசூட்சி செய்திருக் கிறுர்கள். அது என்ன வென்றுல் ஒருதரப்பட்ட உடலுழைப்பான ஒரே வேலைக்குக் கறுப்பர்களுக் குக் கொடுக்கப்படும் சம்ப ளத்தைவிட பத்து மடங்கு வெள்ளையர்களுக்கு அதிகப் படுத்தியிருக்கிறுர்கள்.

உடலுழைப்பான தொழில்களில் கறுப்பர்கள் இன்னென்ன வேலைகள் தான் செய்ய வேண்டும், வெள்ளையர்கள் இன் னென்ன வேலைகள் தான் செய்யவேண்டுமென்று நிர் ணயித்திருக்கிறுர்கள். வெள்ளையர்கள் செய்யும் வேலையை கறுப்பர்கள் செய் யக்கூடாது. கட்டிடவேலை யில் கறுப்பர்கள், கல், சுண் ணும்பு, மரச்சாமான்கள் முத லியவற்றைத் தலைச்சுமை யாகத் தூக்கிக்கொண்டு கையாளாகத்தானிருக்க வேண்டுமே தவிரக் கொத் தர்களாக இருக்கமுடியாது. கொத்தர்வேலை வெள்ளையர் கள் தான் செயயலாம். சுவரி

லிருக்கும் பழைய 'பெயிண்டு' களை அழித்துச் சுத்தஞ் செய்யும் வேலையைத்தான் கறுப்பர்கள் செய்யலாமே தவிர 'பெயிண்டு' அடிக்கும் வேலையைக் கறுப்பர்கள் செய்யக்கூடாது. வெள்ளையர்கள்தான் 'பெயிண்டர்' களாயிருப்பார்கள்.

தச்சவேலையைக் கறுப்பர்கள் செய்யவே கூடாது. கொத்துவேலை, தச்சுவேலை, கொல் வேலை முதலான வேலைகளில் மிகவும் நுட்பமாக வேலை செய்யும்திறமைசாலிகள் எவ்வளவோ பேர்கள் கறுப்பர்களிலும் இருக்கிறார்கள்.

இருந்தபோதிலும் சம்பளத்தைக் குறைப்பதற்காக சட்டரீதியாக இவர்களை இவ் வேலைகளைச் செய்யவிடாமல் தடுத்து, சுமை தூக்குவது போன்ற ஏவல்வேலைகளை மட்டும் செய்யவேண்டுமென நிர்ணயித்திருக்கிறார்கள்.

இவ்விதம் உடலுழைப்பு வேலைகளில் உயர்வு, தாழ்வாகிய தாரதம்மியம்செய்து அதன்மூலம் கறுப்பர்களுக்கு வாரத்திற்கு நாற்பது ரூபாய் சம்பளமும் வெள்ளையர்களுக்கு இருநூறு ரூபாய் சம்பளமும் கிடைக்கும்படி செய்திருக்கிறார்கள்.

எளிய வெள்ளையர்கள் எவருமே வேலையில்லாமல் இருக்கக்கூடாதென்று சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். உடனடியாகப் பிரவேசிக்கத்தகுந்த வேலைகள் காலியில்லாவிடினும் அவர்களுக்காக எந்தத் துறையிலாவது எவ்விதமாயினும் புதிய வேலைகளைச் சிருஷ்டித்து விடுவார்கள்.

கறுப்பர்களுக்காக ஏற்பட்டிருக்கும் ரயில் வண்டிகள், டிராம வண்டிகள், பஸ்சள் முதலான நிர்வாகத்திலுள்ளவர்கள் எல்லோரும் வெள்ளையர்தான்.

தோட்டிவேலையுள்பட சகல சர்க்கார் கீழ்த்தர வேலைகள் எல்லாமும் எளிய வெள்ளையர்களுக்குத்தான். ஆனால் சர்க்கார் தோட்டியாக வேலைசெய்யும் வெள்ளையன் வீட்டில் வேலை பார்ப்பவன் ஒரு கறுப்பனாகத்தானிருப்பான்.

தோட்டி வேலையாயிருப்பினும் வெள்ளையன் செய்யும் தோட்டி வேலைக்குக் கூடுதலான சம்பளமல்லவா? அத்தகைய வெள்ளைத்தோட்டி ஒரு தோட்டிக் கறுப்பனுக்குச் சொற்ப தொகையைச் சம்பளமாகக் கொடுக்கும் சக்தியுமிருக்கிறதல்லவா?

இவ்வாறு தென் ஆப்பிரிக்க வெள்ளை ஆட்சியின் சூழ்ச்சிகளால் அங்குள்ள கறுப்பர்களின் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமான நிலையை அடைந்திருக்கிறது.

உழைப்புக்குத் தகுந்த ஊதியமோ, திறமைக்குத் தகுந்த உயர்வோ, கறுப்பர்கள் பெறமுடியாது. ஒருவேளை, ஊதியமும், உயர்வும் அடைந்திருந்தாலும், வாழ்க்கையை வசதியோடு நடத்த முடியாது.

பொருளாதார உயர்வுடைய ஒரு கறுப்பன் வசதியோடு வீடுகட்டி வாழ வேண்டுமென விரும்பினுல், அவன் வெள்ளை இஞ்சினியர்களை அழைக்கவே முடியாது. அழைத்தாலும் நிறவேற்றுமை வெறுப்பினுல் அவர்கள் வரவும் மாட்டார்கள். கறுப்பர்களில் இஞ்சினியர்களாயிருப்பவர்களை இவர்கள் அழைக்கவே கூடாதென சட்டம் தடை செய்திருக்கிறது.

அதுபோன்றே வெள்ளைக் கொத்தர்கள் வரவேமாட்டார்கள்; கறுப்புக்கொத்தர்களையும் அழைக்கமுடியாது. ஆதலால் இந்தக் கறுப்பர்களில் வாழ்க்கையை உயர்தரமாக நடத்த வசதிபெற்றவர்களும்கூட ஓட்டைக் குடிசைகளில்தான் வாழமுடியும்.

சாதாரண கறுப்பர்களோ உடைந்த கிரஸின், பெட்ரோல் 'டிரம்'—இவற்றைக் கொண்டும் பழுதடைந்த ஜாதிக்காய் பெட்டிகளின் பலகைகளைத் தட்டிகளாக்கி கொண்டும், குடிசைகள் அமைத்து, அவற்றில் ஆயிரக்கணக்காய் வாழ்கிருர்கள்.

சகல நகரங்களிலும் சுற்றுப்புறங்களில் கறுப்பர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிலங்களில் இத்தகைய அலங்கோலத்தோற்றமளிக்கும் விநோதக் குடிசைகளை ஆயிரக்கணக்காகக் காணலாம்.

கறுப்பர்களுக்கு உழைப்புக்குத் தகுந்த ஊதியம் இல்லாமல் மிகவும் குறைந்த வருமானமே பெற சட்டரீதியாகச் செய்திருப்பதால், வெள்ளையர்களும் பாதிக்கப்படுகிருர்கள்.

அது எப்படியென்ருல், கறுப்பர்கள் சிக்கனமின்றித் தாராளமாய்ச் செலவு செய்பவர்கள்; சகல தட்டுமுட்டுச்

சாமான்களும் வெள்ளையர்களே செய்கின்றார்கள். கறுப்பர்களுக்கு ஏராளமான வருமானமிருந்தால் தாராளமாய் அந்தச் சாமான்களையெல்லாம் வாங்குவார்கள்! அதனால் வெள்ளையர்களின் கைத்தொழில் வியாபாரம் எல்லாம் விருத்தியடையும்.

கறுப்பர்களின் நிலையை உயரச்செய்து அதனால் வெள்ளையர்கள் அடையக்கூடிய அபரிமிதமான ஆதாயத்தை வெள்ளையர்களின் குறுகிய பிடிவாத சுயநல மன்பான்மையினால் இழந்துவிடுகிறார்கள்.

மனிதர்கள் உங்களை நன்கு மதிக்கிறார்களா வென்பதைப் பற்றியே சிந்திக்கவேண்டாம்! மனம் குளிர வாய் நிறைய, ஈசுவர ஸ்தோத்திரம் செய்துகொண்டு ஈசுவர கைங்கரியங்களிலேயே ஈடுபடுங்கள். அதுவே ஆத்மரக்ஷணையாகும்.

★

தைரியம் அதிகமானால் முரட்டுத்தனத்தில் முடியும். பிரீதி மிகுந்தால் பலஹீனமாகும். செட்டு அதிகப் பட்டால் பேராசையை விளைவிக்கும்.

★

அரசனைக் காதலித்தவள் எங்காவது தெருப் பிச்சைக்காரனின் தயாளத்தில் மயங்குவாளா? அதே போல்(தெய்வீக) பரமார்த்திக தரிசனத்தில் திளைத்த ஆத்மாவிற்கு லௌகிகப்பற்று எதற்கு?

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

கிரீடதாரிக்கு கிரீடமுள்ள காய்கறி!

•

" சிரிக்கச் சிரிக்கச் சொல்பவர் பிறர், அழ அழச் சொல்பவர் தமர்" என்ற பழமொழிப்படி நமது நிலைக்கு மீறிய செலவாணியையோ அல்லது போக்கையோ கண்டு சிரித்து "உங்களுக்கென்ன, நீங்கள் கொடைவள்ளல், உங்களுக்கேது குறைவு?" என்று கூறுபவர்களைப் பார்த்து, இவர்கள் கேடு நினைக்கும் பிறர் என்று கருதாமல் மிகுந்த உயிர்த் தோழர்களென நம்பி அவர்களது நட்பை பெரிதும் விரும்புகிறோம்.

முகஸ்துதி செய்து நம்மைக் கெடுக்கும் வார்த்தைகள் இவை என்று யோசிப்பதேயில்லை. நம்மிடம் அபிமானமுள்ள சிலர் "என்னப்பா இது, உனது போக்கு சரியாக இல்லையே, சக்திக்கு மீறிய செலவு செய்கிறாயே, இவ்விதமே நடந்துகொண்டு போனால் நாளை உன் நிலை என்னாவது"? என்று கூறுவார்கள்.

மேற்கூறிய பழமொழிப்படி இவர்கள்தான் நமக்குச் சொந்தக்காரர்கள் எனக் கருதக்கூடியவர்கள். ஆனால் இவர்களைத்தான் நாம் அந்நியர்களாய்ப் பாவித்து வெறுக்கிறோம்.

மனிதன், முகஸ்துதியில் ஏமாறுவது சகஜமே. அதுவும் இந்திய மக்கள்தான் பெரும்பான்மையாக ஏமாறுபவர்கள். இந்தியப் பொதுமக்களை இவ்விதம் முகஸ்துதிப்

பிரியர்களாயிருக்கும்போது இந்திய மன்னர்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

எடுத்ததெற்கெல்லாம் உண்மையில்லாத இயற்கைக்கு மாறான முகஸ்துதி செய்வோர்களைத்தான் இந்திய மன்னர்கள் எப்போதும் கூடவே வைத்துக்கொள்வார்கள்.

ஆங்கிலேயர்களுக்கு முகஸ்துதி செய்வோர்களைக் கண்டால் பிடிக்காது. உதாரணமாக ஆதிகாலத்தில் இங்கிலாந்தை கான்யூட் என்பவன் ஆண்டுவந்தான். அவனிடம் ஒரு பிரஜை வந்து "மகாராஜா, நமது நாட்டு மக்கள்தான் உங்கள் ஏவலுக்குப் பணிகிறார்கள் என்பதுமட்டுமல்ல. சமுத்திரம்கூட உங்கள் ஆக்கினைக்குக் கட்டுப்படும், ஏன்? 'நீங்கள் சமுத்திரத்தை ஆளுகின்றீர்கள் அல்லவா?" என்று கூறினான்.

மன்னன் மிகவும் புத்திசாலி. இவனுக்கு நல்ல பாடம் கற்பிக்கவேண்டுமென்றும் நாட்டு மக்களையும் நல்வழிப்படுத்த வேண்டுமென்றும் கருதி "அப்படியா? நான் ஆளும் மன்னன் ஆகையால் கடலும் என் ஆக்கினைக்குக் கட்டுப்படுமா? வா, பார்க்கலாம்" என்று கூறி அவனையும் கூட்டிக்கொண்டு மந்திரி பிரதானிகள் கூட மன்னன் சமுத்திரக் கரைக்கு வந்தான்.

அலைமோதி முடியுமிடத்தருகே ஒரு நாற்காலியைப் போடச் செய்தான். பின்னர் "ஏ சமுத்திரமே, நான் உன்னை ஆளும் மன்னன், என்னை நீ நனைக்கக்கூடாது. பின்னால் தள்ளிப்போ" என்று கட்டளையிட்டு நாற்காலியில் அமர்ந்தான்.

பின்னர் அலைவந்து மோதி நாற்காலியோடு அரசனைக் கீழே தள்ளி குளிப்பாட்டிவிட்டது.

முகஸ்துதி செய்த பிரஜையைப் பார்த்து "சமுத்திரம் என் ஆணைக்குக் கட்டுப்படும் என்று சொன்னாயே,

எங்கே கட்டுப்பட்டது, முகஸ்துதிதானே செய்தாய்? இதற்கு உனக்குக் கடுந்தண்டனை விதிக்கவேண்டும், ஆனால் முதல்தடவையாக உன்னை மன்னித்துவிடுகிறேன்; இனிமேல் இந்த முகஸ்துதி செய்யும் வழக்கத்தை விட்டுவிடு'' என்று கடிந்துகொண்டு அதிலிருந்து அவன் ராஜ்யத்தில் முகஸ்துதி புரிவோர்களுக்குக் கடுமையான தண்டனை விதித்தான்.

ஆனால் ஆதியிலிருந்து நமது இந்திய மன்னர்களோ முகஸ்துதி வார்த்தைகளை அப்படியே நம்பிவிடுவார்கள். முகஸ்துதி பொய்யான ஏமாற்று வார்த்தைகள் தான் என்று அவர்கள் சிந்திப்பதேயில்லை.

இதற்கு உதாரணமாக, முன்காலத்தில் இந்திய மன்னன் ஒருவன் அவனது மந்திரியிடம் காய்கறிகளில் மிகவும் சத்துப் பொருந்திய காய் எதுவென்று கேட்டான். அதற்கு மந்திரி, மகாராஜா, கத்தரிக்காய்தான் மிகவும் சத்துள்ளது, அது காய்கறிகளுக்கெல்லாம் அரசன். அதனால்தான் அதன் தலையில் கிரீடம் இருக்கிறது பாருங்கள்'' என்று கூறினான் மந்திரி. ''கத்திரிக்காய், காய்கறிகளின் மன்னனா? ஒகோ, அப்படியா? அது எனக்கு இதுவரை தெரியாதே,'' என்றுகூறி கத்திரிக்காயை மிகவும் விருப்பமாகப் புசித்துவந்தான்.

சிறிதுகாலம் கழித்து அரசனுக்குச் சொறி சிரங்கு கண்டது. அரண்மனை வைத்தியரை அழைத்து தனக்குச் சொறி சிரங்குவரக் காரணமென்னவென்று கேட்டான். வைத்தியர் ''நீங்கள் எந்தப் பதார்த்தத்தை மிகவும் விருப்பமாக புசிக்கிறீர்கள்'' என்று கேட்டார்.

அதற்கு ''கத்திரிக்காயைத்தான்'' என்று மன்னன் பதில் கூறினான். உடனே வைத்தியர் ''கத்திரிக்காய் சூடு, கடுமையாய் தின்றுக்கால் தொத்துசொறி சிரங்கு தூண்டிவிடும்'' என வைத்திய சாஸ்திரத்திலே

கூறியிருக்கிறது. அதுபோலவே தாங்கள் அதிகமாகக் கத்திரிக்காயைப் புசித்ததனால்தான் தங்களுக்குச் சொறி சிரங்கு வந்திருக்கிறது.'' என்று கூறினர்.

மன்னன் மந்திரியை அழைத்து, ''மந்திரியாரே, நான் கத்திரிக்காயை அதிகமாய்ச் சேர்த்துக்கொண்டதால் தான் எனக்குச் சொறி சிரங்கு வந்துவிட்டது என்று நமது அரண்மனை வைத்தியர் கூறுகிறாரே'', என்றான்.

உடனே மந்திரி ''ஆம், மகாராஜா, காய்கறிகளுக்குள் கத்திரிக்காய் மிகவும் மோசமானது. அதனால்தான், பாருங் கள், அதன் தலையில் ஆணிவைத்து அடித்திருக்கிறது'' என்று கூறினான். அப்பொழுதும் மன்னன் ''நீர்சொல்வது உண்மைதான்'' என்று ஒப்புக்கொண்டான்.

''அன்று கத்திரிக்காய், காய்கறிகளில் சிலாக்கிய மானதால்தான் அதன் தலையில் கிரீடமிருக்கிறது என்றும், இன்று கத்திரிக்காய், காய்கறிகளில் மிகவும் மோசமானதால் தான் அதன் தலையில் ஆணி அடித்திருக் கிறது என்றும் கூறின மந்திரியின் வார்த்தைகளில் எதில் உண்மையுள்ளதென்று தெரிந்துகொள்ளும் பொதுஅறிவு கூட இல்லை, இந்த முகஸ்துதிப்பிரியனான மன்னனுக்கு.

நண்பரோ, அல்லது உறவினரோ யாராயிருந்தாலும் சரி, முகஸ்துதி செய்வோர் நமது நலனைக் கருதாதவர்கள் என்று நன்குணர்ந்து அதற்குத் தக்கவாறே அவர்களி டம் நடந்து கொள்வதே அறிவுடைமையாகும்.

சரீரம் வளர்ச்சியடையுமுன்னரே விவேகமும், ஞானமும் பிரகாசிக்கும் தெய்விக அதிசயம்

அறியாக்குழந்தை, அபூர்வமேதை

●

"விளையும்பயிர் முளையிலே" என்பார்கள் சமர்த்தான பிள்ளையைப் பார்த்து. அதாவது அவன் பெரியவனாகும் போது மேதையாக விளங்குவான் என்ற தீர்க்கதரிசனம் தான் இந்தப் பழமொழி.

பெரியவனாகி வளர்ந்து மேதையாவது ஒருபுறமிருக்க, சிறு பருவத்திலேயே மகா மேதையாகத்திகழும், குழந்தைகளும் இருக்கின்றன.

இத்தகைய குழந்தை இருப்பத்தைந்து ஆண்டுகளுக்கொருமுறை ஒன்றுதான் ஜனனமாகிறதென மேனாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர்.

வயது முதிர்ந்தோரும் பேரறிஞர்களும், அறிந்து கொள்ளமுடியாத பல விஷயங்களை அப்பச்சிளங் குழந்தை அறிந்திருக்கிறது. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு மேதாவிகள் தான் பதில் கூறவேண்டுமே தவிர, சாதாரண மனிதரால் பதில்கூற முடியாது.

இம்மாதிரி குழந்தைப் பருவத்தில் அபார அறிவோடு தோன்றியதற்குப் பூர்வஜென்ம வாசனையென்றும் 'விடு குறை, தொடு குறைப்பயன்' என்றும் நமது நாட்டிலுள்ள ஹிந்து சாஸ்திர விற்பன்னர்கள் காரணம் கூறுகின்றனர்.

துருவன் ஐந்து வயதிலேயே, மாதவப் பெரியோர் காணாத கரியவனை அரிய பெரிய தவத்தால் பிரத்தியக்ஷமாகத் தரிசித்து லௌகீக சாதனங்களை அடைந்ததோடு என்றும் அழியாத துருவப் பதவியுமடைந்தான்.

ஆதிசங்கரர் போன்ற மதபோதகர்கள் அவர்களின் குழந்தைப் பருவத்திலேயே த்வைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் முதலான அரிய பெரிய சித்தாந்தங்களாகிய ஞானச்சுடரை நாடெங்கும் பரப்பி வந்தனர். சங்கீதம் முதலான கலைத்துறைகளிலும் சிறு வயதிலேயே அபார மேதையோடு பிரகாசிக்கும் குழந்தைகளையும் நாட்டில் காண்கிறோம்.

கணிதம், சங்கீதம், பரமார்த்தீகம் ஆகிய மூன்று துறைகளில் தான் குழந்தைகள் மேதைகளாகத் திகழ்கின்றன என மேனாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர். நமது நாட்டில் உலகப் பிரசித்திபெற்ற கணித நிபுணர் ஸ்ரீனிவாச ராமானுஜம் அவரது குழந்தைப் பருவத்திலேயே கணித மேதையாகத் திகழ்ந்தார். ராமானுஜம் மாணவராக இருக்கும்போது, கணிதப் பரீட்சையில் கேள்வித்தாளைக் கண்டவுடன் அத்தாளில் கண்டுள்ள எல்லாக் கணக்குகளுக்கும் முழு வழிகளையும் எழுதாமல் இரண்டிரண்டு வரிகளில் சரியான விடைகளை வெகு சீக்கிரத்தில் எழுதிவிடுவார்.

முழு வழிகளையும் எழுதாமல் உபாத்தியாயர்களையே முழிக்கவைத்த ராமனுஜத்தின் மீது உபாத்தியாயர்களுக்கெல்லாம் வெறுப்புத்தான் ஏற்பட்டது. ராமானுஜத்தால் தெளிவாக்கப்பட்ட சிக்கலான கணிதப் பிரச்னைகளை அறிந்துகொள்வதற்கு எல்லா நாடுகளிலுமுள்ள கணித ஆராய்ச்சிக் கழகங்களில் இன்னும் முயன்று கொண்டிருக்கின்றனர்.

சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்தில் கல் தச்சன் ஒருவனிருந்தான். அவனுக்கு நாலு வயதுடைய கணித

மேதையான ஒரு குமாரன் இருந்தான். ஒரு பீப்பாய் நிறைய இருந்த சாராயத்தில் எத்தனைத் துளிகள் இருந்த தென்று திட்டமாய்க் கூறினான். அதுவும் தவிர 5555 பவுனுக்கு நூற்றுக்கு 4 1/2 பவுன் வட்டி வீதம் 4444 தினங்களுக்கு எதிர்வட்டிக் கூட்டி வட்டியும் முதலும் சேர்ந்த மொத்த தொகையை இரண்டே நிமிஷங்களில் விடையளித்தானும்.

இங்கிலாந்தில் ஐம்பத்தோரு வருஷங்களுக்கு முன்பு ஒரு கணித மேதை இருந்தார்; அவர் ஏழு வயதிலேயே பீஜ கணிதம், க்ஷேத்திர கணிதம், வானசாஸ்திரம், கணிதம் முதலான எல்லாவற்றிலும் அதிமேதையாக இருந்தார். பத்தாவது வயதில் பதினெட்டு ஸ்தானங்கள் கொண்ட ஒரு தொகையை அதேபோல் பதினெட்டு ஸ்தானங்கள்கொண்ட தொகையால் பெருக்கி ஒரே நிமிஷத்தில் அதற்கு விடையைக் கூறிவிட்டாராம்.

மில் என்ற தத்துவமேதை அவரது மூன்றுவது வயதில் கிரேக்க பாஷையைப் பயின்றார். ஐந்தாவது வயதில் லத்தீன் பாஷையையும், எட்டாவது வயதில் உயர்தர கணிதமும், பன்னிரண்டாவது வயதில் தர்க்க சாஸ்திரமும், வேதாந்த சாஸ்திரமும் பயின்றார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஜெர்மனியில், குழந்தை ஒன்று பிறந்து, ஆறு மணிக்குள்ளாகவே பேசத் தொடங்கிவிட்டதாம். இரண்டாவது வயதிலேயே பைபிள் பூராவும் மனப்பாடமாய் விட்டதாம்; மூன்றுவது வயதில், கிரேக்க பாஷை, லத்தின், பிரெஞ்சு பர்ஷை, இவற்றைக் கற்றுணர்ந்ததோடு பூகோளத்தையும் தேச சரித்திரத் தையும் பயின்றதாம். இதுவுமன்றி "தான் நான்கு வயது மட்டுமேதான் உயிரோடிருக்கப்போவதாகவும், நான் காவது தேதியில் திட்டமாய் ஒரு தேதியையும், காலத்தை யும் குறிப்பிட்டு அன்று தனக்கு மரணம் சம்பவிக்கு

மென்றும் தெரிவித்ததாம். அதுபோலவே அக்குழந்தை குறிப்பிட்ட தினத்தன்றே இறந்தும் போயிற்றும்.

மேற்கூறியவாறு குழந்தைப் பருவத்தில் மேதையாக விளங்குபவர்களில் சிலர் தான் ஜீவியகாலம் வரை மேதை யாகவே திகழ்கின்றூர்கள். ஆனல் பெரும்பான்மையோர் இளமைப் பருவத்திற்குப்பின் மேதைத் தன்மை மறைந்து சாதாரண மனிதர்கள்போலாகி விடுகின்றனர்.

ஒரு அமெரிக்கக் கதை.

கறுப்புப் பூனை

●

நான் சொல்லப்போகும் இந்தக் கதையைப் படித்து விட்டு நீங்கள் பயப்படவேண்டாம் என்பதை முதலிலேயே சொல்லிவிடுகிறேன். என்னைப் பைத்தியம் என்று நீங்கள் நினைத்தால், அதற்கு நான் பொறுப்பாளியல்ல!

சிறுவயதிலிருந்தே தயாள குணமும், பேரன்பும் என்னோடு கூடவே என் ரத்தத்தில் கலந்துவிட்டன. பிராணிகளிடம் எனக்கு மிகுந்த அன்பு—அதனால் தான் என் தந்தை என்னைப் பல பிராணிகளை வளர்க்க அனுமதியளித்தார். அவற்றிற்கு உணவளித்து, அன்போடு முத்தமிடுவதைத் தவிர, உலகில் வேறென்ன இன்பம் வேண்டியிருக்கிறது?

"மனிதனைவிட நாய் உயர்ந்த பிரர்ணி; விசுவாசம் மிக்கது!" என்ற கொள்கையை உடையவர்கள் மட்டுமே இந்தக் கதையைப் படித்தால் போதும்.

சிறுவயதிலேயே எனக்கு மணமாகி விட்டது. என்னைப்போலவே என் மனைவியும் பிராணிகளிடம் சலுகை காட்டியது வியக்கத்தக்கது. நாங்கள் பறவைகள், தங்க மீன்கள், முயல் குட்டிகள், ஒரு சிறு குரங்கு, அருமையான குச்சு நாய்—அனைத்தையும் ஆவலோடு வளர்த்தோம்.

எல்லாவற்றையும்விட என் கவனத்தைக் கவர்ந்தது அந்தக் கறுப்புப் பூனைதான்! ஒளிவீசும் அதன் கண்களும்

துருதுருவென்ற அதன் சுபாவமும் என்றும் என் மனத் திரையைவிட்டு அகலமுடியாது. அதன் புத்திசாலித்தனத்தையோ சொல்லி முடியாது. என் மனைவி பலமுறை, 'கறுப்புப் பூனைகள் என்றால் நீதிபதிகளைவிடக் கெட்டிக்காரர்கள்!' என்று சொல்லியிருக்கிறாள்.

ஜாக்கி—அதுதான் நாயின் பெயர்—என்னுடைய துணைவனும் அதுதான்! என் கையால் உணவளித்தாலே அதன் முகத்தில் அலாதிப் பெருமிதம் தோன்றும். நான் வெளியே செல்லும் போதெல்லாம் அதுவும் வளைய வளைய வந்து என் கால்களைப் பற்றிக்கொள்ளும்.

எங்கள் நட்பு வளர்ந்தது. நாட்கள் செல்லச் செல்ல, என் சுபாவமும் மாறியது. என் கோபம் அதிகரித்தது. மனிதர்களிடமே எனக்கு வெறுப்புப் தோன்றியது. என் மனைவியை நான் வாயில் வந்தபடி வைதேன். என்னுடைய செல்லமான நாய் மனம் புழுங்கியது—எல்லாவற்றிற்கும் குடிப்பழக்கம்தான் மூலகாரணம்!

நன்றாகக் குடித்துவிட்டு ஒருநாள் இரவு நான் வீடு திரும்பினேன். என் உடல் முழுவதும் ஏதோ ஓர் மிருக உணர்ச்சி ஊடுருவிப் பாய்ந்தது. வாலைக் குழைத்துக் கொண்டே ஜாக்கி என்னிடம் வந்தது. என் கையையும், காலையும், அது லேசாகப் பிராண்டியது. நான் என்னை மறந்தேன். கோட்டுப் பைக்குள் இருந்த பட்டாக்கத்தியை உருவினேன்; ஜாக்கியின் ஒரு கண்ணைக் கிழித்து எடுத்தேன். என் உள்ளம் துடித்தது; வேர்வை விறுவிறுத்தது.

பொழுது புலர்ந்தது. பாதித் துக்கமும், பாதி ஆத்திரமும் என்னைக் குடைந்து எடுத்தன. ஜாக்கி பிழைத்துக் கொண்டது. ஒரு கண் முழி பிடுங்கப்பட்டதால், குழி விழுந்து, வெறும் தோலாக இருந்தது. துளியும் வருந்தாமல், வழக்கம்போல அது மீண்டும் வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தது தான் எனக்கு இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது.

கோபம் நீங்கி பச்சாத்தாபம் சுரந்தது. நாயை நான் விடவில்லை. வேண்டுமென்றே அதன் காதை முறுக்கி. மரத்தில் கிளையோடு கிளையாகக் கட்டினேன்—என்ன துணிச்சல் எனக்கு!

★

ஒருநாள் நான் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தேன், 'எழுந்திருங்கள்! எழுந்திருடா!' என்ற குரல்கள் கேட்டுத் திடுக்கிட்டேன். வீடு தீப்பற்றிக்கொண்டது. மிகுந்த சிரமத்தோடு நான், என் மனைவி, வேலைக்காரன் மூவரும் தப்பித்துக்கொண்டோம். வீடே வெந்து சாம்பலாகியது—என்னுடைய சொத்துக்கள் மண்ணோடு மண்ணாயின!

மறுநாள் தீ பர்ழ்ப்படுத்தியிருந்த இடங்களைப் பார்வையிட்டேன். சுவர்களைத் தவிர, மற்றவையெல்லாம் தீக்கு இரையாகி யிருந்தன.

ஜாக்கி—என்னுடைய நாய்! நிச்சயம் அது அந்தத் தீக்கு இரையாகியிருக்க வேண்டும்.

என் கண்கள் செந்நீரைச் சிந்தின: பாவம் வெப்பம் தர்ளாமல் அதன் உயிர் எபபடித் துடித்ததோ? சாகும் போது அது நிச்சயம் என்னைச் சபித்திருக்கவேண்டுப்; அதன் சாபம் வீண்போகாது; என்றாவது ஒருநாள் நான் அவமானப்பட நேரிடும். என்னால் சிந்தித்துக்கூடப்பார்க்க முடியவில்லை.

நல்லவேளையாக என் மனைவி என்னைக் குளிப்பதற்குக் கூப்பிடவே என் சிந்தனை தடைபட்டது. ஆனால் அந்தக் கறுப்புப் பூனை மாத்திரம் என் கண்ணெதிரே அடிக்கடி தோன்றி என்னை பயமுறுத்திக்கொண்டே இருந்தது.

மூன்று நாட்கள் கழிந்திருக்கும். நான் சுகமாக மெத் தென்ற மெத்தையில் தூங்கிக்கொண்டிருந்தேன். இடிச் சத்தம் காதில் விழுந்தால்கூட, அதை அலட்சியம் செய்து

விட்டுத் தூங்கும் சுபாவம் எனக்கு, அப்படியிருந்தும், 'மியாவ், மியாவ்' என்ற குரல் என் காதில் தெளிவாக விழுந்தது!

ஒருவேளை ஜாக்கி—இறந்து நாய் எங்காவது மீண்டும் உயிரோடு திரும்பிவருமா!

"இது ஏதடா சனியன்!' என்று சந்தடி செய்யாமல் கொல்லைப்புறம் போனேன். வெடவெடவென்று குளிரில் நடுங்கியபடியே அங்கே ஓர் கறுப்புப் பூனை என் வரவை பெருமிதத்தோடு பார்த்துக் கொண்டிருந்தது.

அதன் உடலமைப்பு, கண்களிலிருந்து டாலடித்த ஒளி, பளபளவென்ற கறுப்பு ரோமம்—எல்லாம ஜாக்கி யையே ஒத்திருந்தன.

★

அந்தப் பூனையை நான் மறுநாள் முதலே ஜாக்கி விட்டுப்போன காலி ஸ்தானத்தில் வைத்துக்கொண்டேன்.

இந்தக் கறுப்புப் பூனை 'மியாவ்' என்று கத்தும்போ தெல்லாம் எனக்கு ஜாக்கியின் ஞாபகந்தான் வரும், ஏனோ நான் குற்றவாளியைப்போல் செயலிழந்து தவிப்பேன்.

நாளாக ஆக எனக்கு மீண்டும் குடிப்பழக்கம் ஏறியது. வீட்டில் தங்குவதே கிடையாது.

கறுப்புப் பூனையின் விஷமமும் அதிகரித்துக் கொண்டே வந்தது. 'சரி, ஜாக்கி தானகச் செத்தது; நீ என் கையால் சாகப்போகிருய்'! என்று நான் அந்த வாயில்லாப் பிராணியிடம் கூறுவேன். மனிதனைப்போல் ஆறறிவு பெற்றிராவிட்டாலும், அந்தப் பூனை என் சொல்லை அறிந்துகொண்டது போல ஏனே, தலையை ஆட்டும்.

அன்று ஓர் அவசர ஜோலியாக நான் வெளியே கிளம்பிக்கொண்டிருந்தேன். என் மனைவி காபி தயாரித்துக்கொண்டிருந்தாள். பக்கத்தில் உலக்கை இருந்தது; காபிப்பொடியை ஒரு பாத்திரத்திலும் பாலை மற்றோர் கிண்ணத்திலும் அவள் வைத்திருந்தாள்.

பரபர வென்று கறுப்புப் பூனை உள்ளே நுழைந்தது. என்னைக்கண்டதும் அது வாலைக் குழைத்தது; நான் கையை ஓங்கினேன்; அவசரத்தில் அது பின்காலால் பாலைக் கொட்டிவிட்டது.

இனிமேல் பொழுது விடிந்தால்தான் பால் கிடைக்கும்; குளிர்காலம் வேறு—என்க்கு ஆத்திரம் மடையைத் திறந்துவிட்டாற் போல பெருகியது.

அவசரத்தில் உலக்கையை எடுத்து, பூனையின் தலையை நோக்கி ஓங்கினேன்—விதி இப்படியா இருக்க வேண்டும்!

உலக்கை அவசரத்தில் கை நழுவிக் கீழே உட்கார்ந்திருந்த என் மனைவியின் தலையில் விழுந்துவிட்டது. 'ஓ'வென்று அவள் கதறிக்கொண்டே, தரையில் சாய்ந்தாள்—அவள் உடல் ரத்த வெள்ளத்தில் மூழ்கியது; கண்கள் குத்திட்டு நின்றன; மூச்சு எப்போதோ நின்றுவிட்டது.

நான் ஒரு கணம் பதறினேன்—கறுப்புப்பூனை மெல்ல நழுவிவிட்டது.

மனைவியின் உடலைத் தொட்டுப்பார்த்தேன்—நன்கு சில்லிட்டுப் போயிருந்தது. என் கையால் என் மனைவியைக் கொலை செய்துவிட்டேனே! போலீசுக்குத் தெரிந்துவிட்டால் எனக்குத் தூக்குத் தண்டனையல்லவா கிடைக்கும்?

மெதுவாக வேலைக்காரனைக் கூப்பிட்டேன். மனைவியின் உடலை ரகசியமாக சுவருக்கு அடியில் யாருக்கும் தெரியாமல் புதைக்கச்சொன்னேன்—என்ன கல் நெஞ்சம் எனக்கு!

அவன் பரபர வென்று கொல்லைப்புறச் சுவரைப் பெயர்த்தெடுத்து, அடியில் பிணத்தைக் குழியில் போட்டு மூடி, மேலே மீண்டும் சுவரை நிறுத்தினான்.

எனக்கு வேர்த்துக் கொட்டியது, போலீசுக்குக் குற்றம் தெரியாவிட்டாலும், மனசாட்சி என்று ஒன்று இல்லையா—அருமை மனைவியைச் சுவரடியில் புதைப்பதா? எனக்கு வேறொரு யுக்தியும் புலப்படவில்லை—அதனால் தான் அப்படிச் செய்தேன்.

★

ஒரு வாரம் கழிந்திருக்கும்.

கொல்லைப்புறத்துக்குச் செல்லும்போதெல்லாம் அந்தச் சுவர் பரிதாபமாக என்னைப் பார்க்கும். அதன் அடியிலே என் மனைவியின் உடல் இருக்கிறது—நாளடைவில் அவளைச் செல் அரித்துவிடும்! எனக்கு அழுகை வந்தது.

பாழும் கறுப்புப் பூனையை சபித்தேன்; "எல்லாம் உன்னால் தானே சனியன்!"

நல்ல வேளை அப்புறம் அந்தப் பூனை என் கண்ணில் படவேயில்லை; இல்லாவிட்டால்—

எனக்கு வாழ்க்கை வெறுத்துப்போயிற்று; வரவர உலகத்திலுள்ள பொருள்கள் யாவும் என் முன்னே தோன்றி என்னை எதிர்ப்பது போன்ற உணர்ச்சிதான் மேலிட்டு நின்றது.

என் மனைவி போனபிறகு என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது? நானே தனியே சமைத்துக்கொள்வது கஷ்டமாக இருந்தது. குக்கரில் சமைப்பதற்கு எனக்குப் போதுமான திறமை இல்லை.

நான் கண்டபடியெல்லாம் வெறியாட்டம் ஆடிக்களித்தேன். போலீஸார் திடீரென்று ஒரு திருட்டுக் குற்றத்துக்காக என்னைக் கைது செய்தனர்.

பாழும் போலீஸ் அத்துடன் என்னை விட்டிருக்கக் கூடாதா? அவர்கள் விட்டாலும் என்விதி எங்கிருந்து என்னை விடப்போகிறது.

மறுநாளே அவர்கள் என் வீட்டைச் சோதனை செய்தனர். என் உடல் வெட வெடவென்று நடுங்கியது.

சமையலறை, படுக்கையறை, சாமான் அறை—எல்லாவற்றையுப் சோதனை செய்தாகிவிட்டது. கொல்லைப்புறந்தான் பாக்கி இருந்தது.

போலீஸாருக்குச் சந்தேகமே ஏற்படவில்லை—திருப்தியும் கூட!

திடீரென்று 'மியாவ் மியாவ்' என்ற தரித்திரக் குரல் கேட்டு, நான் நடுங்கினேன். கொல்லைப் புறக் கிணற்றிலிருந்து தாவித் தாவிக் குதித்துக்கொண்டே அந்தப் பாழும் கறுப்பன் என்னையும் போலீஸாரையும் நோக்கி வந்துகொண்டிருந்தான்.

அதிகாரிகளுக்கு என்ன சந்தேகம் தோன்றியதோ, அவர்கள் கொல்லைபபுறம் சென்றனர்—நானும் தொடர்ந்தேன்—மிஞ்சிப் போனல் தூக்குத்தண்டனைதானே!

கறுப்பன் அத்தோடு விடவில்லை. என் மனைவியை நான் புதைத்து மூடியிருந்த சுவரின்மீது அது ஏறி ஏறிக் குதித்தது.—பரபரவென்று ஒரு போலீஸ்காரன் சுவ

ரைத் தட்டினன்—அது தடதடவென்று ஆடிக் கீழே விழுந்தது.

செங்கல்களோடு கூடவே நாலைந்து எலும்புத்துண்டுகளும், அரித்துப்போன சதையும் பொல பொல வென்று கொட்டின.

'ஓகோ' மர்டர் கேஸ், ஸார்! என்று இன்ஸ்பெக்டர் போலீஸ் குழுவைப் பார்த்துச் சொன்னர். தன் காரியத்தை முடித்துக்கொண்டவன் போலக் கறுப்பன் கம்பீரமாக என்னைப் பார்த்தது!

பாழும் பூனை என்மீது வஞ்சம் தீர்த்துக்கொண்டதே! அதன் சாதியைச் சேர்ந்த 'ஜாக்கி'யைக் கொன்ற எனக்கு இந்தத் தண்டனையும் வேண்டும், இன்னும் வேண்டும் என்றுதான் நினைத்துக்கொண்டேன்.

இன்ஸ்பெக்டர் என்மீது கொலைக் குற்றத்தைப் பதிவு செய்ததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

தமிழ் :— கே. எஸ். பி.

அறிஞர்களும் காக்கைகளும்

●

காலஞ்சென்ற மகாமகோபாத்யாய உ. வெ. சாமிநாத அய்யர் அவர்கள் ஒருசமயம திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த 'குட்டிமலையாளம்' என்று பேர்போன வெள்ள கால் கிராமத்திற்கு அவரது நண்பரும் பிரசித்திபெற்ற தமிழ் அறிஞருமான ராவ்சாகேப். வெ. ப. சுப்ரமணிய முத லியார் அவர்களைக் காணவந்திருந்தார்கள்.

தோப்பு துரவுகள் அநேகம் கொண்ட வெள்ளகால் கிராமத்தில் விதவிதமான பக்ஷி ஜாலங்கள் ஏராளம். இவற்றில் மிகவும் அதிகமானது காக்கைகள்தான், காக் கைகளின் பல கூட்டங்களைக்கண்ட அய்யர் அவர்கள் அதி சயித்து முதலியார் அவர்களிடம், 'உங்கள் ஊரில் எத்த னைக் காக்கைகள் இருக்கும் என்று கூறமுடியுமா' என்று கேட்டார்கள்.

முதலியார் அவர்கள் 'ஒருலட்சத்து தொண்ணூராயி ரத்து ஏழுநூற்று நாற்பத்திரண்டு காக்கைகள் இருக்கின் றன என்று கூறினாகள்.

அய்யர் அவர்கள் "இவ்வளவு திட்டமாகச் கூறுகிறீர் களே, எண்ணிப்பார்த்தால் சரியாயிருக்குமா" என்று கேட்டார். அதற்கு முதலியார் அவர்கள் 'ஆம், திட்டமாய் சரியாயிருக்கும். ஒருவேளை எண்ணிக்கை குறைந்திருந் தால், எங்களூர்க் காக்கைகள் வெளியூருக்கு விருந்திற்குச் சென்றிருக்கும். கூடுதலாயிருந்தால் வெளியூர்க் காக்கை கள் இங்கு விருந்துக்கு வந்திருக்கும்' எனப்பதில் கூறினார்கள்.

முதலியார் அவர்களின் சாமர்த்தியமான சாதுர்ய பதிலைக் கேட்டு அய்யர் நகைத்தார்கள்.

CONSULT

K. M. S. PRESS

1-C 17, DINROZE ESTATE

MOUNT ROAD

MADRAS-2

FOR

ALL HIGH CLASS

JOB WORKS

AND

BOOK WORK

IN

ENGLISH & TAMIL

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR

ALL YOUR DRESS

REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம்—இவற்றை யாவரும் பெற பல ராஜ்யங்களிலுள்ள முயற்சிகள்.

திக்கு எட்டிலும் சுபிட்சத் திட்டம்

இரண்டாவது மகாயுத்தம் உலகத்தில் அநேக மாறுதல்களுக்குக் காரணமாயிற்று. அதில் முக்கியமானதுதான் கீழ்நாடுகளில் நிலவியிருந்த ஐரோப்பிய ஆட்சியின் அஸ்தமனம்.

வெள்ளைக்காரர்கள் தங்களின் வியாபார அபிவிருத்தி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மக்களின் சுபிட்சத்தில் அக்கறை கொள்ளாதிருந்தனர். வெள்ளையரின் ஆட்சி மறைந்த பின்னர் கீழ்நாடுகளில் ஒழுங்கான ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்து மக்களின் பொருளாதாரநிலையை அபிவிருத்தி செய்வதை பிரதான லட்சியமாய்க் கைக்கொண்டனர். அதற்காகவே ஜனநாயகத் தலைவர்கள் மிகுந்த சர்ச்சைகள் செய்து சில திட்டங்களை வகுத்து அவற்றை அமுலுக்குக் கொண்டுவந்திருக்கின்றனர்.

இந்த ஜனநாயக சுய ஆட்சி பெற்ற நாடுகள், தங்கள் நாடுகளின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான மூலதனங்களும் ஆக்க நிபுணர்களும் தங்கள் நாடுகளில் இல்லாததால் அவர்கள் வெளிநாட்டினரின் உதவியை நாடவேண்டியதாயிருக்கிறது.

இவ்விதம் ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற கீழ்நாடுகளுக்கு கம்யூனிஸ, ருஷ்யா எவ்விதத்திலும் உதவிபுரியக்கூடுமாதலாலும் அதனால் கம்யூனிஸம் இதர நாடுகளுக்கெல்

லாம் பரவநேரிடுமென அச்சத்தால் ஏற்கனவே ஆட்சி செய்த ஏகாதிபத்திய வல்லரசுகளே விடுதலையடைந்த இந்த நாடுகளுக்கு உதவி புரிய முன்வந்துள்ளன.

இவ்விதம் சுதந்திரம் அடைந்த கீழ்நாடுகளில், அபிவிருத்திக்காக அமுலிலிருக்கும் திட்டங்களில், மிகவும் பெரியதிட்டம்தான். நமது நாட்டின் ஐந்தாண்டு திட்டம் என்பது இதனுடைய முக்கிய அம்சம். அபிவிருத்திக்கான வேலைகள் ஒரு குறிப்பிட்ட காரியத் திட்டமாகவும் பல காரியங்கள் இணைக்கப்பட்டத் திட்டமாகவும் அமைந்துள்ளது.

ஐந்து ஆண்டுகளில் செலவிடத் திட்டமிட்டிருக்கும் 2000 கோடி ரூபாயில் நான்கில் ஒரு பங்கு நீர் பாசனத்திற்கும் மின்சார சாதனத்திற்காகவும், இன்னெரு நான்கில் ஒரு பங்கு சாலைகள், ரயில் பாதைகள், முதலான போக்குவரவு சாதன அபிவிருத்திக்காகவும், ஆறில் ஒருபங்கு, கால்வாய், குளம், முதலான விவசாய முன்னேற்றத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த ஐந்தாண்டுப் புதுத் திட்டத்தின் மிகவும் முக்கியமான அம்சம். குடிதண்ணீர் வசதி, மின்சார அனுகூலம் ஆகியவையாகும்.

ஆப்பிரிக்காவிலுள்ள உகாண்டாவில் இம்மாதிரி ஒரு பெரிய திட்டத்தை வகுத்திருக்கிறார்கள். நைல் நதி உற்பத்தியாகும் இடத்தில் ஒரு பெரிய அணையைக் கட்டுவதென்றும் அணைக்கட்டைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் செம்பு முதலான உலோகங்களைச் சுத்தப் படுத்தும் தொழிற்சாலைகள், நெசவாலைகள், சிமெண்டு, தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குத் தொழிற்சாலைகள்.— இவையுமன்றி இத் தொழிற்சாலைகள் அமைந்துள்ள மலைப் பக்கங்களுக்குக் கீழே சற்று தூரத்தில் கடல்போன்ற விக்டோரியா ஏரி இருக்கிறது. மேற்கூறிய அணைக்கட்கள் மூலமாக இந்த ஏரியில் ஏற்கனவே இருக்கும் நீர்மட்டத்தைக் காட்டிலும் ஏழடி உயரம் அதிகமாகுமாம்.

இதனால் எகிப்து தேசத்தின் விவசாயத்திற்கு நிரந்தர நீர்ப்பாசன வசதி ஏற்படும். இந்தத் திட்டத்தினல் உணவுப் பெருக்கம் ஏற்படும். லட்சக் கணக்

கான மக்களுக்கும் உணவு வசதி அதிகரிக்கும்.

பல கைத்தொழிற்சாலை களால் ஆங்காங்கே புது நகரங்கள் ஏற்படக்கூடும். ஆப்பிரிக்காவில் கோல்டு கோஸ்டு (Gold Coast) என்னுமிடத்திலும் வால்டா என்னும் நதியின் அணைக் கட்டுத் திட்டத்திற்காக இருநூறுகோடி ரூபாய் செலவழிக்க முடிவு செய்திருக்கிறார்கள். இதிலிருந்து மின்சாரம் உற்பத்தி மூலம் அலுமினியம் உற்பத்தி செய்யப்போகின்றனர். இதுவுமல்லாமல் ஒரு பெரிய ஏரியையும் அமைக்க திட்டமிட்டிருக்கின்றனர். அணைக்கட்டுக்குச் சமீபத்திலேயே ஒரு துறைமுகத்தையும் ஒரு புதிய நகரத்தையும் நிர்மாணிக்கவும் திட்டமிட்டிருக்கின்றனர். இந்தத் திட்டங்களுக்கான மூலதனங்களை, கோல்ட் கோஸ்ட் சர்க்காரும், பிரிட்டிஷ் சர்க்காரும் அலுமனிய உற்பத்தி செய்யும் கம்பெனியாரும் ஏற்றுக் கொள்வார்கள்.

கடைசியில் பிரிட்டிஷ் கொலம்பியா என்ற இடத்தில் அநேக கோடி ரூபாய்கள் செலவழித்து நிச்சகோ நதியில் ஒரு பெரிய அணைக்கட்டு அமைத்திருக்கின்றனர்.

அந்த அணைக்கட்டினால் நிச்சக்கோ நதி மக்களுக்குப் பயன்படுமாறு அதன் போக்கையே திருப்பி அமைத்துவிட்டார்கள்.

அணைக்கட்டிலிருந்து மின்சார சக்தியின் உதவியால் அலுமினியம், உற்பத்தியாகும். இதற்கான அலுமினிய சத்துள்ள மண், ஜெமய்க்காவிலிருந்தும் இதர பொருள்கள் பிரிட்டிஷ் கயானாவிலிருந்தும் வருகின்றன.

அணைக்கட்டுக் அருகேயுள்ள தொழிற்சாலையில் மண் முதலான பொருள்களை உருக்கி, அலுமினியம் உற்பத்தி செய்வார்கள்- அங்கேயும் புதிதாக ஒரு துறைமுகத்தையும், ஒரு நகரத்தையும் நிர்மாணிப்பார்கள்.

கனடா, ஜெமய்க்கா, பிரிட்டிஷ் கயானா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய ஐந்து ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்பால் இந்தத் திட்டம் உருவாக்கப்பெற்றிருக்கிறது.

பாகிஸ்தானத்தில் கிராமப் புனருத்தாரண அபிவி

ருத்தித் திட்டம் ஒன்றை அமுல் செய்கின்றனர்.

முதன் முதலில் 600 கிராமங்களில் இத்திட்டம் நடைபெறும்.

நிபுணத்துவ போதகர்களை அனுப்பி கிராமவாசிகளுக்கு விவசாய முன்னேற்ற வகைகளையும், குடிசைக் கைத்தொழில்களையும் குடிசைத் தொழில்களுக்குச் சாதகமான கருவிகள் உற்பத்தி செய்வதைப் பற்றியும், உற்பத்தியான சாமான்களை விநியோகிக்கும் முறைகளைப் பற்றியும், இவற்றிற்குச் சாதகமான கூட்டுறவு சங்கங்கள் அமைப்பது பற்றியும், விவரமாக எடுத்துக் கூறி, பொது ஜனங்களின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்கிறார்கள்.

விவசாயிகளுக்கு உழவு யந்திரங்களை அளித்து, அதை உபயோகிக்கும்முறைகளையும், விவசாய கூட்டுறவு முறைகளில் அந்த யந்திரங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் முறைகளும் மக்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

இந்த கிராம அபிவிருத்தித் திட்டத்திற்காக பாகிஸ்தான் சர்க்கார் முப்பத்தைந்து லட்ச ரூபாய் ஒதுக்கியுள்ளது. அமெரிக்க சர்க்கார் ஒரு கோடி ரூபாய் இனமாக உதவியுள்ளார்கள்.

அமெரிக்க சர்க்கார்உதவி அன்னியிலும் அமெரிக்க பிரத்தியேக ஸ்தாபனங்களும் பாகிஸ்தானுக்குஉதவியளிக்கின்றன.

ஆசியா கண்டத்திலே மிகவும் பெரிய அணைக்கட்டு பாகிஸ்தானத்தில் தான் உள்ளது. அதற்குத் (Thal) தால் அணைக்கட்டு என்று பெயர் அது சிந்து நதியிலே அமைக்கப் பட்டுள்ளது. இந்த அணைக்கட்டின் மூலமாக மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் ஏக்கரை விளைநிலமாக மாற்றி, ஏராளமான உணவு பொருள்களை உற்பத்தி செய்கின்றனர்.

மூன்று லட்சத்து ஐம்பதினாயிரம் ஏக்கர் விளை நிலமானதை முன்னிட்டு, 240புதிய கிராமங்களை அமைத்து அங்கே இருப்பத்தி நாலாயிரம் குடும்பங்களை குடியேறச் செய்திருக்கின்றனர்.

கிட்டத்தட்ட இதற்கு ஐம்பத்தேழு கோடி ரூபாய் செலவு செய்ய திட்டமிட்டிருக்கின்றனர். இதற்கு ஆஸ்திரேலியா, கருவி சாதனங்

களும் கால் நடை சாதனங்களும் உதவுகிறது. நியூ ஜீலந்து, ஏராளமான ஆடுகளையும் பால் பண்ணைக்கு வேண்டிய யந்தர சாதனங்களையும், கனடா ஒரு பெரிய சிமெண்டு தொழிற்சாலைக்கு வேண்டிய யந்திரங்களையும் உதவி செய்கின்றன.

'கொளும்பு திட்டம்' பிரகார்ம நாலு கோடியே, ஐம்பது லட்ச ரூபாய் பாகிஸ்தானுக்கு உதவி யளிக்கப்படுகிறது. மற்ற டிராக்டாகள் போன்ற, இதர யந்திர சாதனங்களுக்கு உலக பாங்கியிலிருந்து கடனுகைப் பொருளுதவி கிடைக்கிறது.

இந்தத் திட்டம் பூரணமாக அமுலாகும்போது பதினெட்டு லட்சம் ஏக்கர் நிலத்தை மக்களுக்குப்பயன்படும். இதில் பதினான்கு லட்சம் ஏக்கர் விளைநிலமாக மாறு எஞ்சியுள்ள நிலங்களில் சில பகுதிகளில் கிராமங்களையும் நகரங்களையும் அமைப்பார்கள். இன்னும் சில பகுதிகளில் விருக்ஷங்களடர்ந்த காடுகளாக்கி அதன்மூலம் மழையை வருவிக்க வழி வகுப்பார்கள்.

மழையே கண்டிராத பாலைவனத்தை மனிதனுக்குப் பயன் தரும்படி மாற்றச் செய்யும் திட்டம் ஒன்றுஇப்போது அரேபியாவில் ஏடன் நகரத்திற்கருகிலுள்ளராஜ்யங்களில் அமுலிலிருக்கிறது. இப்பிரதேசத்தில் வருஷத்தில் சாதாரணமாய் இரண்டே அங்குல மழைதான் வருஷிக்கும்.

இங்கே பள்ளத்தாக்குகள் இல்லாத பரந்த சமவெளியிலே வேகமான ஓட்டமில்லாத இருநதிகள் இருக்கின்றன.

அங்குள்ளோர் அவற்றில் களிமண்ணுல் குறுக்கும் நெடுக்குமாய் அணைகள் அமைத்து, கால்வாய்கள் வெட்டி, அந்த நதிகளின் நீரைப் பல பகுதிகளுக்குக் கொண்டுபோய் பாலைவனமாக இருந்த பிரதேசத்தை வளப்பம் மிகுந்த பயிர் பச்சைகளுடன் செழுமையாக்கி பிரமிக்கத்தக்கவாறு மாற்றுகிருர்கள்.

ஏடனுக்குச் சமீபமாக இரு சிறு ராஜ்யங்களிருக்கின்றன. அவை மேற்கூறிய திட்டம் வகுத்தஇடம், பாலைவனமாக இருந்தபொழுது, அவ்விரு ராஜ்ய அரசர்களும் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

இந்தத் திட்டம் அமுலுக்கு வந்து, மேற்கூறிய

பாலைவனம் வளப்பமான நிலங்களாகமாற்றுவதற்கே பகை-அரசர்கள் இருவரும் ஒத்துழைக்க நேரிட்டது. அதன் மூலம் அவர்களுக்குள் இருந்த பரம்பரைப் பகை நீங்கி, பரஸ்பர அந்நியோன்னியம் ஏற்பட்டது,

நிர்வாகத்திலுள்ளோர் பொதுமக்களின் நலன் கருதியே இத்திட்டங்களை வகுத்திருக்கின்றார்கள். திட்டங்களெல்லாம் வெற்றியடைந்து யாவரும் க்ஷேமாபிவிருத்தியடையவேண்டுமென்பதே உலக மக்களின் பொது நோக்காகும்.

(Based on Casement booklet No. 20–"Development Projects" by Don Taylor.)

உலகம் பலவிதம்

மாமிசம் சாப்பிடுவதில் தேசத்துக்குத் தேசம் வித்தியாசமிருக்கிறது. சீனாவில் நாய் மாமிசம் விருந்தாகிறது. பர்மாவில் பாம்பும், பூனையும் உணவாகின்றன. பிரெஞ்சுக்காரர்களுக்குத் தவளை மாமிசம் பிரியமாக இருக்கிறது. ஜெர்மனியர்களுக்கோ குதிரை மாமிசத்தில் மோகம். சாதாரணமாய் குதிரை மாமிசம் கெட்டியாயிருப்பினும் மிகவும் சுவையாயும் இனிப்பாயுமிருக்குமாம். அமெரிக்கர்களுக்கோ முயல் மாமிசம் மிகவும் இஷ்டமாம். இன்னும் சில தேசத்தார்களுக்கு எலி மாமிசமும் உணவாகிறது. அரேபியா தேசத்திலோ இயற்கையாகவோ, விபத்திலோ மாண்ட ஒட்டகத்தின் மாமிசம் உணவாகுமாம். ஆனால் அரேபியர் ஒட்டகத்தைக் கொல்வதில்லை. ஒட்டகமாமிசத்தை அரேபியர்கள் புனிதமாகக்கூடக் கருதுகின்றனர். ஜெர்மனியில் சிலமாமிசங்களுக்கு விதிவிலக்குண்டு. அந்தமானில் பர்மியக் கைதிகள் இருக்கும்போது ஒரு பூனைக்குட்டியைக்கூட விடமாட்டார்களாம். பூனைக்குட்டி மாமிசம் மிகவும் உருசியான பண்டமாம் பர்மியர்களுக்கு. வேலூர் சிறையில் ஒருசமயம் ஒரு கைதி அங்கிருந்த பூனையை அப்படியே வறுத்து வயிற்றுக்குள் தள்ளிவிட்டானாம்.

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

1/C 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை

★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்

★ 50-க்கு மேலான அரசியல் சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள்!

★ பலதரப்பட்ட விஷயங்கள்!

★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C, 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் *ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

உங்கள் ஓய்வு நேரத்துக்கு நல்ல பொழுதுபோக்கு

அலுப்பான சமயத்தில் உற்சாகம் தருவது

கற்பகம்

இணையற்ற மாதப் பத்திரிகை

தனிப்பிரதி இரண்டே அணு

வருஷ சந்தா ரூபாய் 1-8-0

புத்தக ஸ்டால்களில் கிடைக்கும்

கற்பக நிலையம்

மயிலாப்பூர் சென்னை - 4

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008
198746

கவிச்சக்ரவர்த்தி திணறினர்	37
நடிப்புக்காக பெண்களாகமாறின ஆண்கள்	39
நான்கு செவிடர்கள்	41
உலகமே எதிர்க்கும் பூச்சி	43
அகந்தைகூடாது	48
சித்திராங்கியை மோகித்த பொற்கொல்லன்	49
வீட்டுவசதியோடு வாழும் மிருகம்	54
பழவகைகளை பயன்படுத்தும் வழி	57
களவிலும் கவியுள்ளம்	61
போகும் அழகும் வரும் அழகும்	64
சந்திர சூரியர் அழிவதால் பூமி அழிவுறும்	65
காட்டுக் குளத்திலே	71
துப்பறியும் தொழிலுக்கு நுட்ப அறிவு தேவை	75
மனிதருக்குப் பாம்பும் உணவாகிறது	81
வசந்தவிழாவிலும் வகுப்புவாதம்	83
அன்று கைதிகள்நாடு, இன்று குடியேற்றநாடு	87
உளவறிய நாய்கள் உதவுகின்றன	89
பெற்றோரைச் சமாளித்தல்	93
தெய்வமே என்றிரு	94
வெள்ளையரின் நிறத்திமிரால் கறுப்பர்படும் பாடு	95
கிரீடதாரிக்கு கிரீடமுள்ள காய்கறி	102
அறியாக் குழந்தை, அபூர்வமேதை	106
கறுப்புப் பூனை	110
அறிஞர்களும் காக்கைகளும்	118
திக்கு எட்டிலும் சுபிட்சத்திட்டம்	121
உலகம் பலவிதம்	126

——

ஓம் சித்தி வினாயக சிவசக்தி வடிவேலன் தம்பி

சாமியே சரணம்
ஐயப்பா

இதுவரையில் எங்களைத் தவிர திரையிலோ—நாடகத்திலோ
யாரும் நடத்தாதது. நடத்த உரிமையில்லாதது.
ஏராளமான பொருட் செலவில் தயாரித்த
ஓர் உயர்ந்த நாடகம்

Edited, printed and published by E. Balasubramaniam at the K. M. S. Press, 1-C'17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editors:- N. S. Mani and C. Ramaiah Pandian.